
# தமிழரசு

அக்டோபர் 1-15, 1997 ரூ.3







50
பத்மவாசன்..

**தமிழரசு**
திருவள்ளுவர் ஆண்டு 2028
அக்டோபர் 1-15, 1997
மலர் : 28 இதழ் : 7
விலை ரூ.3

# இந்த இதழில்...

சேலத்தில் பெரியார் பல்கலைக்கழகம் ... 2

டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் ... 9

தூய்மைச் சிறகுகள் ... 17
- கவியரசு வைரமுத்து

தமிழ்நாட்டில் காந்தியடிகள் ... 20

காந்தி தந்த குடியரசு ... 21
- நாமக்கல் கவிஞர்

ஜாலியன்வாலா பாக் ... 22
- தங்கவயல் லோகிதாசன்

வள்ளுவர் கோட்டம் ... 24


நவீன கருத்தரிப்பு (மருத்துவம்) ... 27
- டாக்டர் ஜமுனா சீனிவாசன்

இந்திய ஆட்சிப்பணிகளில் தமிழர் பங்கு ... 30
- டாக்டர் வை.செல்வமுத்து

கழிவுகள் (சிறுகதை) ... 33
- சோ. தர்மன்

எங்கள் ஊர் பிரச்சினை ... 37

அண்ணல் காந்தியடிகளும் - பெண்ணுரிமையும் ... 41






# சேலத்தில் பெரியார் பல்கலைக்கழகம்

பெரியார் பல்கலைக்கழகத் தொடக்க விழா 17.9.97 அன்று சேலம் - அரசு ஆண்கள் கலைக்கல்லூரி வளாகத்தில் சிறப்புற நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு வேளாண் துறை அமைச்சர் திரு.வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

சேலம் மாவட்ட ஆட்சியர் திரு. முத்துசாமி, மாநகராட்சி மேயர் டாக்டர் ஜி.சூடாமணி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஆர்க்காடு திரு. வீராசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பெரியார் பல்கலைக்கழகத்தைத் தொடங்கி வைத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விழாப் பேருரை நிகழ்த்தினார்.

மேதகு ஆளுநர் செல்வி எம்.பாத்திமா பீவி அவர்கள் விழாத் தலைமையுரை ஆற்றினார்.

பல்கலைக்கழகத் தனி அதிகாரி திரு.ஜெயக்குமார் அவர்கள் நன்றி கூறினார்.

முன்னதாகப் பல்கலைக்கழகத் தொடக்க விழா மலரை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வெளியிட மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

விழாவில் அமைச்சர்களும், சட்டப்பேரவை - நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆயிரக்கணக்கான பொதுமக்களும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

பல்கலைக் கழகத்தைத் தொடங்கி வைத்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய பேருரை வருமாறு:-

'சேலம் நகரத்தில் இன்று காலையிலிருந்து விழாக்கோலம் கண்டு வருகிறோம். இந்த விழாக்கோலத்தை அதிக செலவில் ஏற்பாடு செய்யவில்லை என்று எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். அதிக செலவு செய்யலாமா என்று என்னை கேட்டபோது, 'அடக்கி வாசியுங்கள்' என்று நான்தான், மூன்று இலட்ச ரூபாய்க்கு மாத்திரம் அனுமதி கொடுத்தேன்.

ஆனால் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற செலவு அதை விட அதிகம் என்பதை என்னால் உணர முடிகிறது. எப்படி இது என்று தம்பி வீரபாண்டி ஆறுமுகம் அவர்களிடத்தில் கேட்டேன். சற்றொப்ப 40-க்கு மேற்பட்ட கல்லூரிகளும், அதற்கு மேற்பட்ட மேல்நிலைப்பள்ளிகளும், உயர்நிலைப் பள்ளிகளும் இவைகளெல்லாம் சேர்ந்து இந்த மூன்று மாவட்டங்களிலும் உள்ளவை; ஒவ்வொரு கல்லூரியிலும் உள்ள நல்ல நோக்கம் கொண்டவர்கள்; பேராசிரியர்கள் அனைவரும், ஒருங்கிணைந்து குழுக்கள் அமைத்துக் கொண்டு - குழுக்கள் அமைப்பது தனித்தனியாகப் போக அல்ல; ஒற்றுமையாக இருப்பதற்குத்தான் - என்ற வகையில் குழுக்களை அமைத்துக்கொண்டு அந்த குழுக்களின் சார்பில் சேலம் நகரில் பல்வேறு இடங்களில் பல்வேறு கல்லூரிகளின் சார்பில் வரவேற்பு வளைவுகளும், தோரணங்களும், பதாகைகளும் இந்த அலங்காரமான பந்தலும், வண்ண விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன என்று என்னிடம் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் குறிப்பிட்டார். இதைத்தான் இன்றைக்கு இந்த அரசு கிராமப்பகுதிகளில் 'நமக்கு நாமே' என்ற தலைப்பில் நிறைவேற்றி வருகிறது. நம்முடைய காரியங்களை நாமே செய்து கொள்ள வேண்டும். நம்முடைய நிகழ்வுகளை நாமே நிகழ்த்திக் கொள்ளவேண்டும். நம்முடைய நன்மைகளுக்காக நம்முடைய மக்களுக்காக நாமே கடமை ஆற்றவேண்டும் என்ற அந்த உணர்வு வரவேண்டும் என்பதற்காகத்தான் கிராமப்பகுதிகளில் 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' என்றும் 'நமக்கு நாமே திட்டம்' என்றும் இரண்டு திட்டங்களைக் கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்து அதை நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம்.



'நமக்கு நாமே' என்ற முறையில்

இத்தகைய உணர்வு எல்லா மக்களிடத்திலும் வருகின்ற வகையிலே ஒரு விழாவைக்கூட நமக்கு நாமே என்ற அளவில் நடத்திக் காட்ட முடியும் என்று முதன்முதலாகத் தமிழகத்திற்கு அறிவித்திருப்பதும் சேலம்தான் என்பதை எண்ணும்போது நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

தம்பி வீரபாண்டி ஆறுமுகம் எந்தக் காரியத்தை எடுத்தாலும் சோடை போகாமல், சொத்தையாகாமல் சூரத்தனமாக அனைவருக்கும் எடுத்துக்காட்டாக, மற்றவர்கள் கடைபிடிக்கக்கூடியதாக, மற்றவர்களும் கடைப்பிடிக்க வேண்டும் என்று முயற்சி மேற்கொள்ளக்கூடியதாக அமைத்துக்காட்டுவதில் வல்லவர்.

அத்தகைய செயல்வீரராக விளங்குகின்ற தம்பி வீரபாண்டி ஆறுமுகத்தின் ஒத்துழைப்புடன் துணைவேந்தர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், அரசு நிர்வாக அதிகாரிகள், பல்வேறு கல்லூரிகளின் முதல்வர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அனைவருடைய ஒத்துழைப்போடும் இன்று நடைபெற்ற பேரணியை நான், பேராசிரியர், மற்றும் அமைச்சர் பெருமக்கள் முழுவதுமாக ஏறத்தாழ மூன்று மணி நேரம் கண்டோம்.

நம்முடைய கவர்னர் அவர்கள் இடையில் ஒரு மணி நேரம்தான் அந்த நிகழ்ச்சியைப் பார்த்தார் என்றாலும்கூட நாங்கள் பார்த்த அந்தக் காட்சி மாணவர் சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கின்ற எழுச்சியை - உற்சாகத்தை - உத்வேகத்தை - ஒரு கட்டுப்பாட்டை எங்களுக்கு உணர்த்தியது.

சில நாட்களுக்கு முன்பு மதுரை மாநகரத்தில் தீண்டாமை ஒழிப்புக்காக நடைபெற்ற மாநாட்டையொட்டி எல்லாக் கல்லூரி, பள்ளி மாணவர்களும், ஆசிரியர்களும் அடங்கிய மனிதச் சங்கிலி ஒன்று ஏறத்தாழ 15 கிலோ மீட்டர் நீளத்திற்கு நடைபெற்றது.

அது பெரிய மனிதச்சங்கிலி; தமிழ்நாட்டில் நடைபெற்ற எல்லா மனிதச் சங்கிலியையும் விட-எல்லா மனிதச் சங்கிலிகளையும் வெல்லக்கூடிய அளவிற்கு நடைபெற்ற மனிதச் சங்கிலி. அதிலே பெரும்பாலும் 90 சதவிகிதம் கலந்துகொண்டவர்கள் மாணவ - மாணவியர்கள்தான்.

எனக்கொரு நம்பிக்கை. இப்பொழுதுகூட அங்கே இங்கே சிறுசிறு சலசலப்புகள் இருக்கிறதே, அந்த சலசலப்புகளுக்கு எல்லாம்கூட இடமில்லாமல் மதுரையில் மாணவ-மாணவிகள் மிகுந்த அடக்கத்தோடு, கட்டுப்பாட்டோடு கைகோத்து நின்ற காட்சியைக் கண்டபோது-சேலத்திலும் இன்றைக்கு அதே காட்சியைக் கண்ட காரணத்தால் என்னுடைய நம்பிக்கை இரட்டிப்பாயிற்று. இது தொடர வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

அந்தப் பேரணியில் அணிவகுத்து வந்த மாணவியர் - மாணவர்கள் - அவர்களுடைய எண்ணிக்கை ஏறத்தாழ இலட்சம் பேர் இருக்கலாம். அந்த இலட்சம் மாணவ-மாணவிகளுடைய கரங்களில் தந்தை பெரியாருடைய உருவம் பொறித்த கொடிச் சின்னங்கள் இருந்ததைப் பார்க்கும்போது, நான் மெய்சிலிர்த்துப் போனேன். புல்லரித்தது எனக்கு.

பெரியாருடைய பெயரைக் கேட்டாலே வெறுப்புக் கொண்ட சிலருடைய மத்தியில் - பெரியாருடைய பெயரைக் கேட்டாலே ஏதோ ஒரு பயங்கரமான பெயர் என்று அஞ்சி நடுங்கிய இந்தப்பூமியில், மாணவச் செல்வங்கள், எதிர்கால வாரிசுகள், எதிர்கால மன்னர்கள் - எதிர்காலத் தலைவர்கள் - எதிர்காலச் சிந்தனையாளர்கள் - எதிர்கால விஞ்ஞானிகள் - அவர்களுடைய கரங்களில் தந்தை பெரியாரின் உருவம் பொறித்த கொடிகள் இலட்சக்கணக்கானவை இன்றைக்கு இருந்ததை நான் கண்டபோது, 1945-ஆம் ஆண்டு தந்தை பெரியாருடைய மாணவனாக ஈரோடு குருகுலத்தில் படித்த நேரத்தில் அய்யா பெரியாருக்கும், அவருடைய கொள்கைகளுக்கும் இப்படிப்பட்ட ஒரு ஏற்றம் கிடைக்குமா

என்று ஏங்கிக் கொண்டிருந்த என்னைப் போன்ற, பேராசிரியர் போன்ற, பெரியாருடைய மாணவர்களுக்கெல்லாம் இன்றைக்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும் என்பதை என்னால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. கற்பனை செய்து பார்க்கக்கூட முடியவில்லை. அந்த அளவிற்கு இந்த நாட்டை எதிர்காலத்தில் உருவாக்கக்கூடிய சிற்பிகளாகிய இளைஞர்கள் - மாணவர்கள் கொடி எடுத்துவந்த காட்சியைப் பார்த்தேன்.

அவர்கள் சென்ற அரைக் கணத்திற்கெல்லாம், அரை நொடிக்கெல்லாம் நூறு இளம் மாணவர்கள் பெரியாரைப் போல வேடமணிந்து கொண்டு வரிசையாக வந்தார்கள் - மிக உயரக் குறைவானவர்கள், குள்ளமானவர்கள் - அவர்கள் வெண்தாடி வைத்துக்கொண்டு கறுப்புசால்வை போர்த்திக்கொண்டு, ஒரு கையில் புத்தகத்தை வைத்துக் கொண்டு, இன்னொரு கையிலே ஒரு தடியை வைத்துக்கொண்டு நூறு பெரியார்கள் வந்தார்கள்.

நாங்கள் எண்ணுவது இந்த நாட்டிலே நூறு பெரியார்கள் அல்ல, தமிழகத்தில் இருக்கிற ஆறுகோடி மக்களும் பெரியார்களாக ஆக வேண்டும் என்ற அந்த ஆசையை நிறைவேற்றுவதற்கு அடையாளமாக அந்த அணிவகுப்பு வந்ததாகத்தான் நான் கருதினேன்.

எனவே, சேலத்தில் நடைபெற்ற அந்தப் பேரணியும், நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அந்த பெரியார் பல்கலைக்கழகத்தின் தொடக்கவிழாவும் - தமிழ்ச் சமுதாயத்தின் எழுச்சிக்கும் ஏற்றத்திற்கும் வழிகாணக் கூடியவைகள் என்ற நிலைமையை நாம் இன்றைக்குப் பெற்றிருக்கிறோம்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் சொன்னார்;

*"வயதில் அறிவில் முதியார்; நாட்டின்
வாய்மைப் போருக்கு என்றும் இளையார்
உயர் எண்ணங்கள் மலரும் சோலை
தூயதாடி நெஞ்சில் விழும் அவர்
மனக்குகையில் சிறுத்தை எழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்"*

- என்று சொன்னார்.

மண்டைச் சுரப்பை என்றால், அவருடைய அறிவாற்றலை, மூளைத்திறனை உலகமே தொழும் என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அன்றைக்குப் பாடினார்.

இன்றைக்குத் தந்தை பெரியார்டைய புகழை அல்ல. அறிவை, ஆற்றலை, அவர் கொண்டிருந்த துணிவை, அவர் சண்ட மாருதமாகச் சீறி சாதிமத வேறுபாட்டை எல்லாம் களையத் துடித்த அந்தத் தூய செயலை இன்றைக்கு உலகம் போற்றிக்கொண்டிருக்கிறது.

## சமூகநீதி பற்றிப் பேசுபவர்களின் வழிகாட்டி

இந்தியாவிலே எந்த மாநிலத்திற்குச் சென்று கேட்டாலும், சமூக நீதியைப் பற்றிப் பேசினாலும், சாதிச்சண்டை களையப்பட வேண்டும் என்று எடுத்துச் சொன்னாலும், மதச்சார்பற்ற தன்மை வேண்டும் என்று கூறினாலும், அங்கெல்லாம் பேசுகிற தலைவர்கள் முதலிலே தங்களுக்கு வழிகாட்டியாகக் கொண்டிருப்பது தந்தை பெரியாரைத்தான் என்பதை, கடந்த இரண்டாண்டு காலத்திற்கு மேலாக வடபுலத்திலும் நான் சென்று பார்க்கின்ற காரணத்தால் என்னால் உணரமுடிகிறது.

அந்த அளவிற்கு இன்றைக்கு இந்திய பூபாகம் எங்கும் ஒரு சமுதாய எழுச்சியை, ஒரு புரட்சியை, மறுமலர்ச்சியை உருவாக்கக் காரணமாக இருந்த தந்தை பெரியாருடைய பெயரால் இன்றைக்கு இந்தப் பல்கலைக்கழகம் அமைவது - அதுவும் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் வரவேற்புரையிலே சொன்னதைப் போல சேலத்தில் அமைவது மிகமிகப் பொருத்தமுடையதாகும்.

தமிழ்நாட்டில் 1857ஆம் ஆண்டில்தான் முதல் பல்கலைக்கழகமே - சென்னை பல்கலைக்கழகமே





அமைந்தது - 1857 இந்திய நாட்டு வரலாற்றில் ஒரு சிறப்பான ஆண்டு. முதல் சுதந்திரப் போராட்டப் பிரகடனம் செய்யப்பட்ட சிப்பாய்ப் புரட்சி நடைபெற்ற ஆண்டு! இந்த ஆண்டில்தான் சென்னைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.

அப்பொழுது சென்னை மாகாணம் என்றால் . Old Madras Presidency. ஓல்டு மெட்ராஸ் பிரசிடென்சி என்றால் இன்றைக்கு இருக்கின்ற இந்தப் பரப்பளவு அல்ல. இதைவிட பெரிய பரப்பளவு. இன்றைக்கு ஆந்திரம், ஒரிசா, கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் சில பகுதிகளையும் சேர்த்துக் கொண்டு 'Madras Presidency'என்று அழைக்கப்பட்டது. அதற்கு ஆட்சித்தலைவராக வருகிறவருக்கு 'Premier' என்று பெயர். ராஜாஜி அவர்கள் 1937ஆம் ஆண்டு இந்த மாநிலத்தின் ஆட்சித்தலைவராக இருந்தபொழுது, அவருக்குப் பெயர் முதலமைச்சர் அல்ல; "பிரிமியர்" என்றுதான் பெயர்! அப்படிப்பட்ட இந்தப் பெரிய பூபாகமாக இருந்த மாநிலத்தில் 1857ஆம் ஆண்டு சென்னையிலே தோன்றியது தான் முதல் பல்கலைக்கழகம்.

## பதினைந்தாவது பல்கலைக்கழகம்


இன்றைக்கு இந்தப் பல்கலைக்கழகத்தோடு சேர்த்து பதினைந்தாவது பல்கலைக்கழகம். இந்தப் பதினைந்து பல்கலைக்கழகங்களில் - நம்முடைய பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம், கோவை வேளாண்மை அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் ஆகியவைகள் எல்லாம் கழக ஆட்சியிலே தொடங்கப்பட்டவை என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்வேன். பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் எல்லாம் இணைந்தவை. கல்லூரிகளின் தொகுப்பாக இருப்பவை பல்கலைக்கழகங்கள்.

பெருந்தலைவர் காமராசர் கல்விக் கண் திறந்தவர் என்ற பாராட்டுக்குரியவர். அவர் ஆரம்பப் பள்ளிகளை அன்றைக்கு ஏராளமாகத் திறந்தார். கிராமப்புறத்தில் இருக்கிற பிள்ளைகளுக்குப் படிப்பறிவு வேண்டும் என்பதற்காகக் காமராசர் அந்தச் செயலைச் செய்யத் தொடங்கினார். அது மேலும் இன்றைக்குப் பெருகிக் கொண்டிருக்கிறது. என்றாலும்கூட கிராமப்புறங்களிலே இருந்து ஆங்காங்கு மேல்நிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளில், படித்துவருகிற மாணவர்களுக்கு அங்கிருந்து செல்வதற்கான கல்லூரிகள் இல்லாத சூழ்நிலை கூடாது என்று தி.மு.கழக அரசு கருதியது.

இருநூறு ஆண்டு கால ஆங்கிலேயர் ஆட்சியில் தமிழ் நாட்டில் - சென்னை மாநிலத்தில், சென்னை ராஜதானியிலே தொடங்கப்பட்ட கல்லூரிகளின் எண்ணிக்கை வெறும் 24 தான். அதற்குப்பின் 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் தொடங்கப்பட்ட கல்லூரிகள் 68 ஆகும்.

அதன்பின் 1967 முதல் 1975 வரை எட்டாண்டு காலம் நடைபெற்ற தி.மு.கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட கல்லூரிகளின் எண்ணிக்கை 97.

கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் தொடங்கப்பட்ட கல்லூரிகள் 4.



சாமானிய மக்களின் நலம்தான் மிகவும் முக்கியமானது; ஒரு சிலருக்காக நாம் மிகப் பலரைப் பலிகொடுக்க முடியாது!

- ஜவகர்லால் நேரு.

இதை எல்லாம் புள்ளி விபரத்திற்காகச் சொல்கிறேன் - விமர்சனத்திற்காக அல்ல. இந்தக் கணக்கு மனதிலே பதிய வேண்டும் என்பதற்காகக் கூறுகிறேன்.

## 10,000 மாணவர்கள் கூடுதலாகப் பொறியியல் கல்வி பயிலும் வாய்ப்பு!

சுயநிதி கலை, அறிவியல் கல்லூரிகள் என்று எடுத்துக்கொண்டால் 1984 முதல் 1988 வரை என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் 15 கல்லூரிகள் தொடங்கப்பட்டன.

88-89 கவர்னர் ஆட்சியில், 15 கல்லூரிகள் தொடங்கப்பட்டன.

89-91 இரண்டாண்டுகால தி.மு.கழக ஆட்சியில் 5 கல்லூரிகள், பிறகு 91 முதல் 96 வரையிலான கடந்த கால ஆட்சியில், ஐந்தாண்டுகளில் தொடங்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகள் 65. 96க்குப் பிறகு இந்த 15 மாத காலத்தில் தொடங்கப்பட்ட சுயநிதி கலை அறிவியல் கல்லூரிகள் 59. இதையும் நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

பொறியியல் கல்லூரிகள் என்று எடுத்துக்கொண்டால், கடந்த ஆண்டு இந்தக் கழக ஆட்சியிலே 10 கல்லூரிகள் தொடங்க அனுமதிக்கப்பட்டன. இந்த ஆண்டு இதுவரை 39 கல்லூரிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. எனவே தமிழகத்தில் 10,000 மாணவர்கள் கூடுதலாகப் பொறியியல் கல்லூரிகளில் படிக்கக்கூடிய வசதிவாய்ப்பை இந்த அரசு செய்து கொடுத்திருக்கிறது.

அதுமாத்திரமல்ல; பொறியியல் கல்லூரியிலே சேருவதற்குக் கிராமப்புறத்து மாணவர்களுக்கு வாய்ப்பு குன்றிப் போயிருந்தது. குறைந்துபோயிருந்தது. அந்த வாய்ப்பை அதிகப்படுத்துவதற்காக முதல் கட்டமாகப் பொறியியல் கல்லூரிகளில் கிராமப்புறத்து மாணவர்களுக்குக் கட்டாயம் 15 சதவிகிதம் இடமளித்தே ஆக வேண்டும் என்ற ஒரு நிலையை ஏற்படுத்தி - அதை எதிர்த்து நீதிமன்றங்களுக்கு எல்லாம் சென்றாலும்கூட கடைசியாக அரசின் கருத்துத்தான் வெற்றி பெற்றது என்ற அளவிலே - 15 சதவிகித கிராமப்புற மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளில் சேருவதற்கான நிலைமையும் இன்றைக்கு உருவாகியிருக்கிறது.

அதுமாத்திரமல்ல; இந்த அரசினுடைய இன்னொரு அறிவிப்பும் உங்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். அது நடைமுறைக்கு வந்திருக்கிறது. கடந்த ஆண்டில் அறிவிக்கப்பட்டு இப்பொழுது அமலாக்கப்பட்டுள்ள அந்த முக்கியமான அறிவிப்பு என்னவென்றால், எந்த ஒரு குடும்பத்திலும் பட்டதாரிகளே இல்லாமல் - முதல் பட்டதாரி இவர்தான் என்கிற அளவிற்கு இருக்கிற பட்டதாரிகள் வந்தால், அவர்கள் வாங்குகின்ற மதிப்பெண்களை வைத்து ஒவ்வொரு தொழிற்படிப்பிலும் பத்து பட்டதாரிகளுக்கு - அவர்கள் ஒன்று, இரண்டு, மூன்று என்று பத்து என்று வருகின்ற வரை - ஒவ்வொரு பாடப்பிரிவிலும் பரிசுத் தொகை மாத்திரமல்ல; அவர்கள் மேலும் உயர் தொழிற்கல்வி பெறுவதற்கு ஆகிற செலவை இந்த அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும் என்று அறிவித்து, அதுவும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறது.

இவைகள் எல்லாம் கல்வியை மேலும்மேலும் பரப்பவேண்டும்; கல்வியைப் பெற்றால்தான் கண்திறக்கும்; கண்திறந்தால் தான் கருத்துக்கள் நிலைக்கும், கருத்துக்கள் நிலைத்தால் தான் இந்த நாடு உய்யும் என்ற தந்தை பெரியாரின் கொள்கைகளை அண்ணாவின் இலட்சியங்களை ஈடேற்றத்தான் நாங்கள் கல்விப் பயிரை மேலும்மேலும் வளர்ப்பதிலே தொடர்ந்து பல்வேறு வகையிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

பெரியார் அவர்கள் போதித்த கருத்துக்களை எல்லாம் இன்றைக்கு நாங்கள் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். பெரியார் சமுதாயத் தொண்டாற்றினார். அவருக்கு அரசியல் அவ்வளவாகப் பிடிக்காது.

தேர்தல் பிடிக்காது; எந்தக் கட்சியையும் ஆதரித்துப் பிரச்சாரம் கூட செய்வார். ஆனால் அவருக்குத் தேர்தல் பிடிக்காது. தேர்தலிலே அவரும் நிற்கமாட்டார். அவருடைய இயக்கத்தையும் நிற்கவிடமாட்டார். ஆனால் அவர் சமுதாயத்தொண்டு புரிந்தார்.

சென்னை, கிண்டியிலுள்ள காமராசர் நினைவக முகப்பில், அவர் நினைவு நாளான 2-10-1997-ல், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் திறந்துவைத்த - பெருந்தலைவர் காமராசர் அவர்களின் மார்பளவு வெண்கலச் சிலை.




அறிஞர் அண்ணா அவர்கள் தந்தை பெரியாரிடமிருந்து மாறுபடவில்லை. பெரியாருடைய கருத்துக்களைச் செழிக்கவைப்பதற்காக, செயல்படுத்துவதற்காக - பெரியாரிடம் இருந்து பிரிந்தாலும்கூட அவருடைய கொள்கைகளில் இருந்து பிரியாமல் ஒரு அரசியல் இயக்கம் கண்டு, அந்த அரசியல் இயக்கம் ஆட்சிப் பொறுப்பு ஏற்கின்ற நிலைமையை உருவாக்கி - பெரியாருடைய கொள்கைகளான சுயமரியாதைத் திருமணத்தை சட்டப்படி செல்லுபடியாக்குவது; இருமொழித்திட்டம்; இந்த நாட்டிற்கு, 'சென்னை ராஜ்யம்' என்ற பெயரை மாற்றி 'தமிழ்நாடு' என்று பெயர் வைப்பது; அதைப்போல 1929ஆம் ஆண்டு செங்கற்பட்டு மாநாட்டில் பெரியார் நிறைவேற்றிய தீர்மானம் - பெண்களுக்கும் ஆண்களைப் போல சொத்துக்களிலே சமஉரிமை வேண்டும் என்பதாகும் - அந்தத் தீர்மானத்தை 89ஆம் ஆண்டு சட்டப்பேரவையில் நான் நிறைவேற்றியபோது 'அறுபது ஆண்டுகளுக்கு முன்பு பெரியார் நிறைவேற்றிய தீர்மானத்தை இன்றைக்குச் சட்டமாக்குகிறோம்' என்று சொன்னேன்.

அதைப்போல உள்ளாட்சி மன்றத் தேர்தலில் - சிலர் பேசிக்கொண்டிருந்தார்கள், பெண்களுக்கு விகிதாச்சாரம் வேண்டும் என்று அதைச் செயல் மூலம் காட்டி, முப்பது சதவிகிதம் உள்ளாட்சி மன்றத் தேர்தலிலும் பெண்களுக்கு இடஒதுக்கீடு செய்து பெரியாரின் கொள்கைகளை நாம் நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம்.

மேலும் நிறைவேற்றுகிற நேரத்தில், இளம் பயிர்களெல்லாம் தந்தை பெரியாரின் அந்த அறிவுக் கருத்துக்களைப் பெற்றுச் செழிக்கத்தான் இந்தப் பல்கலைக்கழகம்.

தம்பி வீரபாண்டி ஆறுமுகம், அவர் அமைச்சர் என்றாலும்கூட முதலமைச்சருக்கு ஒரு கோரிக்கை வைக்கவேண்டும். கல்வி அமைச்சருக்கு ஒரு கோரிக்கை வைக்கவேண்டும். ஆளுநருக்கு ஒரு கோரிக்கை வைக்க வேண்டும் என்ற முறையில் எங்கள் மூவர் முன்னிலையிலே ஒரு கோரிக்கை வைத்தார்.

'பெரியார் பல்கலைக்கழகத்திற்கு இருக்கின்ற பாடத்திட்டங்களிலே பெரியாரின் கொள்கைகளைப் பரப்புகின்ற அளவிற்குப் பாடத் திட்டங்கள் வேண்டும்' என்றார்.

தம்பி, நீ சொல்லித்தானா நாங்கள் இவைகளைச் செய்யவேண்டும். நிச்சயமாக நாங்கள் செய்வோம் என்ற நம்பிக்கையை நீ பெறலாம் என்று தம்பி வீரபாண்டி ஆறுமுகத்திற்கு சொல்லிக் கொள்கிறேன்.

மேடையிலும் சொன்னார். வந்து பக்கத்தில் அமர்ந்தும் சொன்னார், 'முதல் கட்டப்பணிகளுக்கு 10 கோடி ரூபாய் ஆகும். உடனடியாக நீங்கள் அதை ஒதுக்கித் தந்தால்தான் வேலை விரைவாக நடைபெறும். கட்டிடங்கள் எழுப்பப்படும்' என்று கேட்டார். 'ஆகட்டும்' என்று சொல்லியிருக்கிறேன். ஆகட்டும் பார்க்கலாம் அல்ல. ஆகட்டும்! நிச்சயமாக ஆகும்! என்ற உறுதியை அளித்து-வளர்க தந்தை பெரியார் பல்கலைக்கழகம் என்று வாழ்த்துகிறேன்.

- இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார். ★

# 'சாதனைகள் பல செய்வதில் தளபதியாய் விளங்குகிறார் கலைஞர்!'

## - மேதகு தமிழக ஆளுநர் புகழாரம்

சேலத்தில் நடைபெற்ற பெரியார் பல்கலைக்கழகத் தொடக்க விழாவில் மேதகு தமிழக ஆளுநர் செல்வி எம். பாத்திமா பீவி அவர்கள் பேசியதாவது:

''பெரியார் பல்கலைக்கழகத் தொடக்க விழா நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். இம்மாநிலத்தின் கல்விப் பணியில் இது ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக அமையக்கூடும்.

### அடித்தட்டு மக்கள் விழிப்புணர்வு

கல்வியில் பலர் பலனடைந்தாலும் தமிழகத்தில் தேவையான அளவிற்குக் கல்வி வசதி பெரும்பாலோர் பெறவில்லை என்கிற குறை இருந்துவந்தது. அடித்தட்டு மக்களிடம் கல்வி குறித்த விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் அவர்கள் கல்வி பெற முன்வரவில்லை என்கிற குறையைப் பலர் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

### பெரியாரின் பெருந்தொண்டுகள்

அதோடு இல்லாமல் கல்வியின் பலன்குறித்து கடமையுணர்வுடன் வலியுறுத்தியவர்களும் இங்கே பலருண்டு. அவர்களில் குறிப்பிடத்தக்கவரும், முன்னணியில் விளங்கியவருமான ஒருவர் அதிக மனோதிடமும் சீரிய சிந்தனையுடனும் 'பெரியார்' என்று பலராலும் விரும்பி அழைக்கப்பட்ட ஈ.வெ.ராமசாமி அவர்கள்.

பெண்களின் முன்னேற்றத்திற்காக அயராது பாடுபட்டதை நினைவுகூர்ந்து, பெண்கள் கருத்தரங்கு ஒன்றில் அதில் பங்கேற்ற பிரதிநிதிகளால் 'பெரியார்' என்ற பட்டப்பெயர் அவருக்குக் கிட்டியது என்பதை அறிய நான் பெருமைப்படுகிறேன்.

நவீன கல்வியை - குறிப்பாக அறிவியல் தொழில்கல்வியை உருவாக்குவதில் பெரியார் தன்னிகரற்று விளங்கினார். நவீன வளர்ச்சிக்கு வழிகோலும் எண்ணங்களிலும் அவர் நிபுணத்துவம் மிக்கவராகத் திகழ்ந்தார்.

சமுதாய சீர்திருத்தத்திற்கு அவரது பங்கு அளவிட முடியாததாகும். இம்மாநிலத்தில் அவரது அயராத பணியால் இங்கிருந்த சமூக அமைப்பு முறையே மாறியது.

வைக்கம் வீரராக இருந்து தீண்டாமையை எதிர்த்து அவர் விடாப்பிடியாகப் போராடியதை நாம் அனைவரும் நன்கறிவோம்.

சீரான சமூக நீதி, சமத்துவம், பெண்களுக்குச் சுதந்திரம் இவைகளுக்காக அவர் அயராது பாடுபட்டார். பெண்கள் உரிமைக்காக அவர் பாடுபட்டதை யாராலும் மறந்துவிட முடியாது.

சமுதாயத்தில் நிலவி வந்த தேவையற்ற பழக்க வழக்கங்களை எதிர்த்து அவர் கடுமையாகப் போராடினார். தம் வாழ்வின் பெரும் பகுதியை அவர் மக்கள் விழிப்படைய வேண்டும் என்பதற்காகப் பொதுமேடைகளிலும், தெருமுனைகளிலும் பேசியுள்ளார். அதில் அவர் பெருமளவு வெற்றியும் பெற்றார்.


சுயமரியாதையை அவர் மக்கள் மனதில் ஆழப் பதிய வைத்தார். தொழிற்கல்வியை அவர் அதிகம் வலியுறுத்தினார். இன்றைக்கு அதுதான் அதிகமாகவும் தேவைப்படுகிறது.

தமிழ் எழுத்தில் சீர்த்திருத்தம் செய்ய அவர் சீரிய முயற்சிகள் மேற்கொண்டார். அதுவே இன்றைக்கு அரசின் அதிகாரபூர்வத் தமிழ்மொழியின் எழுத்து வடிவாகவும் உள்ளது.

### பெரியார் வழியில் அண்ணா, கலைஞர்

கூர்ந்த அறிவும், திறமையும், பேச்சாற்றலும் மிக்க ஏராளமான இளைஞர்கள் பெரியாரிடம் இருந்தனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவராகப் பேரறிஞர் அண்ணா விளங்கி, சமூகக் கொடுமைகளை எதிர்ப்பவராகத் திகழ்ந்தார்.

இளைஞர்களிடமும் பெரியவர்களிடம் ஒரே விதமாக இருந்துகொண்டு அவர்களைப் பண்படுத்திய



அண்ணல் காந்தியடிகளின் 129வது பிறந்த நாளான அக்டோபர் 2ஆம் நாளன்று, சென்னை-காமராசர் சாலை மெரினா கடற்கரையில் உள்ள காந்தியடிகள் திருவுருவச்சிலைக்கு - மேதகு தமிழக ஆளுநர் செல்வி எம்.பாத்திமா பீவி, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர், முன்னாள் குடியரசுத் தலைவர் திரு.ஆர்.வெங்கட்ராமன், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் திரு.மு.க.ஸ்டாலின் ஆகியோர் மாலையணிவித்தனர்.

அண்ணா, தேவைக்கு ஏற்ப அவர்கள் செயல்படவும் உதவினார்.

திறமையுடன் பல்வேறு சாதனைகளைச் செய்யும் தளபதியாக இருந்து, அண்ணாவின் தம்பியாக விளங்கும் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், வலுவான சக்திவாய்ந்த ஆதரவாளராக அந்த இயக்கத்தில் இருந்து பணியாற்றி வருகிறார்.

பெரியார் மக்கள் பயன்படுத்தும் வட்டார மொழியில் பேசக் கூடியவர், ஆனால் அண்ணாவும் கலைஞரும் அவர்களோடுள்ள மற்றவர்களும் கலை நுணுக்க இலக்கிய வடிவப் பேச்சைக் கையாண்டனர்.

பெரியார் குடும்பத்தில் உருவான அப்படிப்பட்ட வல்லுனர்களால், திறமைசாலிகளால் தமிழகத்தில் ஒரு பெரும் சமூக மாற்றம் ஏற்பட்டது என்று சொன்னால் அது மிகையன்று.

**பெரியார் உழைப்புக்குக் காணிக்கை**

எண்ணங்களாலும் செயல்களாலும் தன் இறுதி மூச்சுள்ள வரை சீர்திருத்தவாதி யாகவே திகழ்ந்தவர் பெரியார். அவரது உழைப்பிற்காகவே, இந்தப் பல்கலைக்கழகம் அவர் பெயரிட்டு அவருக்கு அர்ப்பணிக்கப்படுகிறது. இப்பல்கலைக்கழக மாணவர்கள் சமூக நீதிக் கொடியை ஏந்தி அவர் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து கண்ணியம் மரியாதை இவைகள் மூலம் மனித சமுதாயத்தை மேம்படச் செய்யவேண்டும்.

கல்வி பயில விரும்பும் மாணவர்களுக்காகப் பல்கலைக் கழகங்கள் திறக்கப்படுகின்றன. ஒரு காலத்தில் பள்ளிப் படிப்பு என்பதே தமிழகத்தில் தூரத்துக் கனவாக இருந்தது. பள்ளிகள் இல்லாத குறையைப் போக்க தற்போது எடுத்துள்ள மாநில அரசின் சீரிய முயற்சிகளுக்கு எனது பாராட்டுதல்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த மாநில அரசு தீவிர கவனம் செலுத்தி நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. தனியார் பங்கும் இதில் அதிகம் எனலாம்.

சேலம், நாமக்கல், தருமபுரி மாவட்டங்களில் உள்ள மாணவர்களுக்கு உதவும் வகையில் உள்ள இப்பல்கலைக் கழகம், இப்பகுதியில் பல்வேறு ஆராய்ச்சியாளர்களை உருவாக்கும் என்று நம்புகிறேன்.

நவீன இந்தியாவிற்கு ஏற்ப நாட்டிற்கு, சமுதாயத்திற்கு உதவும் வகையில் நல்ல பட்டதாரிகளை இப்பல்கலைக்கழகம் உருவாக்குவதைத் தன் கடமையாகக் கொள்ளும் என நான் நம்புகின்றேன்.

**(17.9.1997)**



# டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

## துவக்க விழாவில் - குடியரசுத்தலைவர், தமிழக ஆளுநர், முதலமைச்சர், மத்திய அமைச்சர் பங்கேற்பு

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தைத் தொடங்கி வைத்து மேதகு குடியரசுத்தலைவர் கே.ஆர்.நாராயணன் அவர்கள் ஆற்றிய விழாப்பேருரை வருமாறு:

"குடியரசுத் தலைவர் என்ற முறையில் என்னை முதன்முறையாக சென்னைக்கு இந்தச் சிறப்பு வாய்ந்த, சமூக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியான டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத் தொடக்க விழாவிற்கு அழைத்ததற்காகத் தமிழக அரசுக்கு-குறிப்பாகத் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரும் அவருடைய சகாக்களும், தமிழ்நாடு அரசும் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் தொடங்குவது என்ற தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய முயற்சியை எடுத்ததற்காக நான் பாராட்டுகிறேன்.

சட்டம் என்பது சமுதாயத்தையும் நாட்டையும் ஒழுங்குபடுத்தவதற்கு மட்டுமல்ல; அரசியல் மற்றும் சட்ட ரீதியான ஒழுங்கைச் சமுதாயத்தில் உருவாக்குவற்கு மட்டுமல்ல; அழியாத தத்துவங்களான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் சமுதாயத்தை மாற்றுவதற்கும் பயன்படுவதாகும். அதுதான் இந்தப் பல்கலைக்கழகத்திற்குச் சூட்டப்பட்டுள்ள பெயரின் தனிச்சிறப்பு ஆகும்.

**"அம்பேத்கர் பெயரில் இந்தியாவில் உருவாகும் முதல் பல்கலைக்கழகமான இதைத் திறந்துவைப்பதில் மிக்க பெரு மகிழ்ச்சி!"** - மேதகு குடியரசுத் தலைவர்

சட்டத்துறைப் பணிகளிலும், சட்டக்கல்வியிலும் தமிழ்நாடு மிகச்சிறப்பான சாதனைகளைப் பெற்றுள்ளது. அது மாபெரும் வழக்கறிஞர்களை உருவாக்கியுள்ளது. இந்த வகையில் இந்தியாவிலேயே முதலாவது பல்கலைக்கழகமான இந்தப் பல்கலைக்கழகத்தைத் தொடங்கி வைக்கும் மகிழ்ச்சியை நான் இன்று பெற்றிருக்கிறேன்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக மனித குலத்துக்கு வழிகாட்டி நெறிகளை வகுத்துத் தந்த மாபெரும் புலவர் திருவள்ளுவரைப் பெருமைப்படுத்தும் வகையில் நம்முடைய முதல்வர் அவர்கள் தானே வடிவமைத்து, உருவாக்கப்பட்ட இந்த மங்களகரமான அற்புதமான, பெரிய அளவிலான இவ்வளாகத்தில் இந்தத் தொடக்க விழா நடைபெறுவது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இங்குதான், அதாவது தமிழ்நாட்டில்தான் சமூகப் புரட்சிக்கான முதல் குரல் கொடுக்கப்பட்டது. மாபெரும் தலைவர் பெரியார், மாபெரும் தலைவர்கள் அண்ணாதுரை, காமராஜர், இப்போது கலைஞர் திரு.கருணாநிதி! அவர் சமூகப் புரட்சியின் பாரம்பரியத்தை நடைமுறை அரசியலிலும், அமைப்பு மற்றும் நிர்வாகத் துறைகளிலும் கூட கடைப்பிடித்து வருகிறார். அவரை நான் பாராட்ட விரும்புகிறேன்.

டாக்டர் அம்பேத்கர் அரசியலமைப்புச் சட்ட நெறிமுறையில் நம்பிக்கை உள்ளவர். சமூகத்தில் அரசியலமைப்புச் சட்டத்தின் அமைப்புகளுக்குப் பெரும் மரியாதை அளிக்கப்படவேண்டும் என்று அவர் விரும்பினார். அந்த அரசியலமைப்புச் சட்ட



நெறிமுறையை அவர் கடைப்பிடித்தார். அதை நாம் மக்களிடையே பரப்பவேண்டும்.

இளைஞர்களிடையே அரசியலமைப்புச் சட்ட நெறிமுறைகளை ஆழமாகப் பதியச் செய்வதில் இதுபோன்ற பல்கலைக்கழகம் அமைப்பது ஒரு சிறந்த முறையாகும். இது நம்முடைய அரசியல் மற்றும் சமூக நடவடிக்கைகளை ஆட்சி செய்யவேண்டும்.

சுதந்திர இந்தியாவின் முதல் அரசை அமைப்பது பற்றி விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, தன்னுடைய அமைச்சர்களின் பட்டியலை ஜவஹர்லால் நேரு, மகாத்மா காந்தியிடம் காட்டினார். ஆனால் அதில் அம்பேத்கர் பெயர் இடம் பெறவில்லை என்பதை காந்தியடிகள் கவனித்தார். அவர் பட்டியலை நேருவிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு, அதில் அம்பேத்கர் பெயர் இடம் பெறவேண்டும் என்று கூறினார் என்று கூறப்படுகிறது. அதன்மூலம் டாக்டர் அம்பேத்கர் இந்தியாவின் சட்ட அமைச்சரானார்.

அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் டிராஃப்டிங் கமிட்டியின் தலைவராக யாரை நியமிப்பது என்ற கேள்வி எழுந்தபோது பலருடைய பெயர்கள் கூறப்படுகின்றன. ஆனால் அப்போதும் காந்திஜிதான், அப்பதவிக்கு மிகவும் பொருத்தமானவர் - அதை நிறைவேற்றக்கூடியவர் டாக்டர் அம்பேத்கர்தான் என்று குறிப்பிட்டார். இவ்வாறு பல்வேறு கருத்து முரண்பாடுகளுக்கு இடையிலும், தேசத் தந்தை மகாத்மா காந்திக்கும், பாபா சாகேப் அம்பேத்கருக்கும் இடையில் பரஸ்பர மதிப்பும் மரியாதையும் நிலவி வந்தன. இந்த உண்மையை நாம் உணர வேண்டும்.

இன்று நாடு சந்திக்கவிருக்கும் சவால்களை எதிர்கொள்ள வேண்டுமானால் இந்த மாபெரும் இரு தலைவர்களின் கொள்கைகளையும் நாம் பின்பற்ற வேண்டும்.

இந்தப் பல்கலைக்கழகம் சட்டத்தைப் போதிக்கவும், ஆராய்ச்சி மேற்கொள்ளவும் உள்ளது. ஆனால் ஆழமாகச் செயல்படுவதற்கான ஒரு பெயரை இது பெற்றுள்ளது என்று நான் கருதுகிறேன். சமூகப் பிரச்னைகளின் அடிப்படையில், சமூக மாற்றத்தை உருவாக்கும் வகையில் சட்டத்தை உருவாக்க வேண்டும்.

நம்மைப் போன்ற வேறுபாடுகள் மிகுந்த ஒரு நாட்டில், இந்த நோக்கில் சட்டம் பயிற்றுவிக்கப்படாவிட்டால், சட்டம் நமது மக்களின் பிரச்சினைகளுக்கு நாட்டுக்கு எப்படி இருக்கவேண்டுமோ அவ்வாறு இருக்காது.

பாபா சாகேப் அம்பேத்கர் சாதிகளற்ற சமூகத்தை உருவாக்கவும், சமத்துவத்தை உருவாக்கவும், நமது சமூகத்தில் சுதந்திர உணர்வும் சகோதரத்துவ உணர்வும் பெருகவும் விரும்பினார்.

இதே போன்று ஒற்றுமையையும், சமத்துவமும், சமூக நீதியையும் விரும்பிய தமிழகத்தின் மாபெரும் புலவர் சுப்பிரமணிய பாரதி கூறிய ஒரு பாடலைக் கூறி என்னுடைய உரையை நான் நிறைவு செய்யவிரும்புகிறேன்.

'எல்லாரும் ஓர் குலம்
எல்லாரும் ஓர் இனம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர் நிறை
எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்''

- இவ்வாறு குடியரசுத்தலைவர் கே.ஆர்.நாராயணன் அவர்கள் உரையாற்றினார்.

## மேதகு ஆளுநர் உரை

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைகழகத் தொடக்க விழாவிற்குத் தலைமை வகித்த மேதகு ஆளுநர் செல்வி பாத்திமா பீவி ஆற்றிய உரையிலிருந்து:

"டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் தொடங்கப் படும் இந்த சரித்திர முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் பெருமை அடைகிறேன். விஞ்ஞானம் அதிவேகமாக வளர்ச்சி யடைந்துள்ள நிலையில் ஒவ்வொருவருக்கும் கல்வி இன்றியமையாததாகும். தொழிற்கல்வி சமீபத்தில்

> "இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக மனித குலத்துக்கு வழிகாட்டி நெறிகளை வகுத்துத் தந்த மாபெரும் புலவர் திருவள்ளுவரைப் பெருமைப்படுத்தும் வகையில் நம்முடைய முதல்வர் அவர்கள் தானே வடிவமைத்து, உருவாக்கப்பட்ட இந்த மங்களகரமான அற்புதமான, பெரிய அளவிலான இவ்வளாகத்தில் இந்தத் தொடக்க விழா நடைபெறுவது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். - மேதகு குடியரசுத்தலைவர்"




வளர்ச்சியடைந்திருப்பதால் உயர்கல்விக்கான வாய்ப்புகளை அதிகரிப்பது அவசியமாகும்.

தொழிற்கல்விகளை வளர்ப்பதில் தமிழ்நாடு தீவிரமாக உள்ளது. இங்கு மருத்துவ விஞ்ஞானம், பொறியியல் தொழில்நுட்பம், கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கியல் விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம் ஆகியவற்றிற்குத் தனியான பல்கலைக்கழகங்கள் உள்ளன. இன்று சட்டப்பல்கலைக்கழகம் தொடங்கப்படுகிறது.

தமிழக அரசால் தொடங்கப்படும் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் இந்தியாவிலேயே முதல் சட்டப்பல்கலைக்கழகம் என்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கரைவிட இந்தப் பல்கலைக்கழகத்திற்குப் பொருத்தமான வேறு பெயர் இருக்க முடியாது. அவர் அரசியலமைப்புச் சட்டத்தின் தந்தை. அவர் சட்டத்தில் கரைகண்டவர். அது மட்டுமல்ல; எண்ணற்ற கஷ்டங்கள், எல்லாத் தரப்பிலிருந்தும் வந்த தடைகள் எல்லாவற்றையும் மீறி ஒருவர் புகழின் உச்சியை எப்படி அடைய முடியும் என்பதைத் தன்னுடைய இளமையிலிருந்தே நாட்டுக்குக் காட்டியவர் அவர்.

அவர் இந்தியாவின் முதல் சட்ட அமைச்சராக இருந்தவர். அவருக்கு உரிய நிலையை நாடு வழங்கியது. எனினும் அவர், தான் எங்கிருந்து வந்தோம் என்பதை ஒருபோதும் மறக்கவில்லை.

அழுத்தப்பட்ட மக்களைத் தீண்டாமைப் பிடியிலிருந்து விடுவிக்க அவர் விரும்பினார். அவருடைய உணர்வுகளும் அமைப்பை உருவாக்கும் திறனும் அழுத்தப்பட்ட மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தின. அவர்கள் அவரைத் தங்கள் தலைவராக, வழிகாட்டும் ஒளியாக, உணர்வாக ஏற்றுக்கொண்டனர்.

அவர் ஒரு சிந்தனையாளர், சீர்திருத்தவாதி, தீண்டாமையின் கொடிய தன்மை காரணமாக அதை எதிர்த்து அவர் நடத்திய போராட்டமும் தீவிரமாக இருந்தது.

அவருடைய சிந்தனைகளும் செயல்களும் எப்போதும் அனைத்து மனிதர்களிடையிலும், நல்லெண்ணத்தையும் சமத்துவத்தையும் பற்றிய செய்திகளை ஏந்தி வந்தது. இந்த நல்லநாளில் சமூக நீதியை நிலைநாட்டவும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்துடன் கூடிய சமூக தத்துவத்தை மேம்படுத்தவும் உறுதி ஏற்போம்.

இந்தப் பல்கலைக்கழக மாணவர்கள் டாக்டர் அம்பேத்கரின் குணநலன்களைக் கொண்டிருக்க வேண்டும். வழக்கறிஞர்களாகும் அவர்கள் சமூகக் கொடுமைகளை வெளிப்படுத்தி அவற்றைக் களையும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

இந்த நினைவில் நிற்கும் விழாவில் நம்மோடு கலந்து கொண்டதற்காகக் குடியரசுத்தலைவர் அவர்களுக்கு எனது அளவற்ற நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பல்கலைக்கழகத்தின் மூலம் தங்களுடைய உண்மையான, உறுதியான முயற்சிகள் மூலம் தமிழக மக்களுக்குச் சேவை செய்வதில் மற்றுமொரு சாதனை படைத்துள்ள தமிழக முதல்வரையும் தமிழக அமைச்சர்களையும் நான் பாராட்டுகிறேன்".

- இவ்வாறு ஆளுநர் உரையாற்றினார்.

**"தமிழக அரசால் தொடங்கப்படும் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் இந்தியாவிலேயே முதல் சட்டப்பல்கலைக்கழகம் என்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.**

**- மேதகு ஆளுநர்"**

## மாண்புமிகு முதல்வர் உரை

*பல்கலைக்கழகக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரையிலிருந்து...*

"இன்று ஓர் இனிய நாள். இதயமெல்லாம் பூரிக்கின்ற நாள், நீண்ட நெடுநாளைய கனவு நிறைவேறுகின்ற நாள், இந்த நாளை மேலும் சிறப்பிக்கினற வகையில் நம்முடைய குடியரசுத்தலைவர் மேதகு கே.ஆர்.நாராயணன் அவர்கள் வருகை தந்துள்ளார்கள். நான் அவரைத் தமிழக மக்களின் சார்பாக வருக!வருக!வருக! என்று வாயார-மனமார வரவேற்கிறேன்.

இந்தியாவினுடைய குடியரசுத்தலைவராகப் பொறுப்பேற்று முதல் தடவையாகத் தமிழகத்திற்கு வந்துள்ள அவர்கள் இந்தியாவிலேயே முதன்முதலாகத் தொடங்கப்படுகின்ற அண்ணல் அம்பேத்கர் பெயரால் தொடங்கப்படுகின்ற சட்டப் பல்கலைகழகத்தைத் தொடங்கி வைப்பது மேலும் ஒரு சிறப்பு என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் இன்றைக்கு இங்கே தொடங்கப்படுகிறதென்றால் - சென்னையிலே சட்டக் கல்லூரி முதன்முதலாகத் தொடங்கப்பட்டது 1891ஆம் ஆண்டு. அதற்குப் பிறகு 82 ஆண்டுகளுக்குப் பிறகு தான் 1974-இல் நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த அந்தக் காலக்கட்டத்தில் இரண்டாவது சட்டக் கல்லூரி தமிழ்நாட்டில் மதுரையில் தொடங்கப்பட்டது. பிறகு 1979-இல் திருச்சி, கோவை ஆகிய நகரங்களில் சட்டக்கல்லூரிகள் தொடங்கப்பட்டன. 1996-இல் கடந்த ஆண்டு-நெல்லையில் மற்றொரு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.

தனியார் கல்லூரி ஒன்றைத் தவிர, அரசின் சார்பிலே ஐந்து சட்டக் கல்லூரிகளே தமிழகத்திலே இருக்கின்றன. இந்தக் கல்லூரிகள் எல்லாம் ஆங்காங்குள்ள ஒவ்வொரு பல்கலைக் கழகத்தோடும் சார்ந்து இயங்க வேண்டிய நிலையிலிருந்த காரணத்தால், உள்ள இடர்ப் பாடுகளையெல்லாம் எண்ணி, எல்லா சட்டக் கல்லூரிகளும் ஒரே பல்கலைக் கழகத்தின் கீழ் சார்ந்து வாழ வேண்டும்; இயங்க வேண்டுமென் பதற்காகத்தான் இந்தியாவிலேயே முதல் முயற்சியாக, முதல் தடவையாக, அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தை இன்றைக்கு நாம் தொடங்கியிருக்கிறோம்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். அம்பேத்கருடைய பெயரை இன்றைக்குத்தான்- சட்டப் பல்கலைக்கழகத்திற்குத்தான் வைத்தோம் என்றில்லை. 1990ஆம் ஆண்டில் அம்பேத்கர் நூற்றாண்டு விழா நடைபெற்ற அந்தக் காலக்கட்டத்தில், சென்னை சட்டக் கல்லூரிக்கு அம்பேத்கர் சட்டக் கல்லூரி என்ற பெயரைச் சூட்டினோம் என்பதையும் நினைவுபடுத்துகின்றேன்.

1972-ஆம் ஆண்டிலேயே அரசினர் கலைக்கல்லூரி ஒன்றினைப் பெரம்பூர் பகுதியிலே தொடங்கியபோது அதற்கும் அம்பேத்கர் அவர்களுடைய பெயர் சூட்டப்பட்டதை யாரும் மறந்திருக்க முடியாது.

அது மாத்திரமல்ல; நம்முடைய மாநிலத்திலே மாத்திரமல்ல; அம்பேத்கர் பிறந்த மராட்டிய மாநிலத்தில் மரத்வாடா பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கர் பெயர் சூட்ட வேண்டுமென்று சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றிப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகும் அந்தத் தீர்மானம் செயல்படாமல் இருந்ததைச் சுட்டிக்காட்டி மக்கள் தங்களுடைய குரலைபெழுப்பிய போது, அதற்கு ஆதரவுக் குரலாக இந்தியாவிலேயே ஒரேயொரு மாநிலம்தான் குரலெழுப்பியது. அதுதான் தமிழ்நாடு.

அன்றைக்கு நான் வேண்டுகோள் விடுத்தேன். இலட்சக்கணக்கான தந்திகள் மராட்டிய அரசுக்கு தமிழகத்திலிருந்து அனுப்பப்பட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தேன். அவ்வாறே லட்சக்கணக்கான தந்திகள் மராட்டிய மண்டல அரசுக்கு அனுப்பப்பட்டன. மராட்டிய மாநில ஆளுநர் திரு.அலெக்சாண்டர் அவர்களும் அன்றைய முதலமைச்சராக இருந்த திரு.சரத்பவார் அவர்களும் எனக்கு உடனடியாக பதில் அனுப்பினார்கள். தமிழ்நாட்டு மக்களுடைய கோரிக்கையை நாங்கள் நிறைவேற்றுவோம் என்று பதில் அனுப்பினார்கள். அவ்வாறே நிறைவேற்றினார்கள்.

> *"சாதி சமயங்கள், மத பேதங்கள், உயர்வு தாழ்வு இவைகள் எல்லாம் அகற்றப்பட வேண்டுமென் பதையும் அனைவரும் சமம் என்ற சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்பதையும் இலட்சிய மூச்சாகக் கொண்டிருக்கின்ற எங்களுக்கு அம்பேத்கருடைய பல கருத்துக்கள் மேலும் ஆர்வத்தைத் தூண்டி விடக்கூடிய கருத்துக்களாக அமைந்திருக்கின்றன."*
>
> - மாண்புமிகு முதலமைச்சர்

இந்த அளவிற்கு அம்பேத்கருடைய கருத்துக்களோடு எங்களுக்கு உள்ள ஈடுபாட்டிற்குக் காரணமே எங்களை ஆளாக்கிய தந்தை பெரியார் அவர்களும், வழிநடத்திய, வழிகாட்டிய பேரறிஞர் அண்ணா அவர்களும் எந்தக் கொள்கைகளை எங்களுக்குக் கற்றுத் தந்தார்களோ அதே கொள்கையுடையவர் அம்பேத்கர் என்ற காரணத்தினால் எங்களுக்கு அண்ணல் அம்பேத்கர் அவர்களிடத்திலே தணியாத ஆர்வமும், ஈடுபாடும் என்றென்றும் உண்டு.

சாதி சமயங்கள், மத பேதங்கள், உயர்வு தாழ்வு இவைகள் எல்லாம் அகற்றப்பட வேண்டுமென்பதையும் அனைவரும் சமம் என்ற சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்பதையும் இலட்சிய மூச்சாகக் கொண்டிருக்கின்ற எங்களுக்கு அம்பேத்கருடைய பல கருத்துக்கள் மேலும் ஆர்வத்தைத் தூண்டி விடக்கூடிய கருத்துக்களாக அமைந்திருக்கின்றன.

அவர் சொல்லுகிறார்:

*"உங்களுடைய சமூக அமைப்பை மாற்றாமல், நீங்கள் சிறிது கூட முன்னேற்றம் காண முடியாது.*

*சாதியை அடிப்படையாக வைத்து நீங்கள் எதையும் உருவாக்க முடியாது.*

*தேசிய இனத்தை உருவாக்க முடியாது.*

*ஒரு ஒழுக்கப் பண்பை உருவாக்க முடியாது.*

*சாதியை அடிப்படையாக வைத்து நீங்கள் எதை உருவாக்கினாலும்-அது உடைந்து சிதறி உருப்படாமல் போய்விடும்"*

- மேலும் அம்பேத்கர் கூறுகிறார்...

*"இப்போது நாம் பரிசீலிக்கவேண்டிய பிரச்சினை இதுதான். இந்து சமூக அமைப்பில் சீர்திருத்தம் செய்வது எப்படி? சாதியை ஒழிப்பது எப்படி? இது முக்கியமான பிரச்சினையாகும்.*

*சாதி ஒழிப்புக்கு உண்மையான வழி, கலப்பு மணம்தான் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இரத்தக் கலப்பின் மூலம் தான் உற்றார், உறவினர் என்ற உணர்வு ஏற்படும். இந்த உணர்வு ஏற்பட்டு வலுவடைந்தாலன்றி சாதியினால் ஏற்பட்டிருக்கும் வேற்றுமை உணர்வும் ஒருவருக்கொருவர் அன்னியராக நினைப்பதும் மறையவே மறையாது"*

*"சமபந்தி போஜனமும், கலப்புத் திருமணமும் சாதாரண நடைமுறைகளாகும் போதுதான் சாதியின் சக்தி அழியும்"!*

இது அம்பேத்கருடைய பொன்மொழி. இந்த அணுகுமுறை இன்றைக்கும் சுதந்திரப் பொன்விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இந்தக் காலக்கட்டத்திலும் நம்மால் கடைப்பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கேற்பட்டிருப்பதை நான் உணராமல் இல்லை.

- இவ்வாறு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் உரையாற்றினார்.

### மாண்புமிகு மத்திய தொழில் துறை அமைச்சர் உரை

*விழாவில் மாண்புமிகு மத்திய தொழில் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:*

"பெருமதிப்பிற்குரிய குடியரசுத்தலைவர் அவர்கள் முதல் முறையாகத் தமிழ்நாட்டிற்கு வருகைத் தந்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல; அவர்கள் இந்தியாவிலேயே முதல்முறையாகத் துவக்கப்பட்டிருக்கிற ஒரு சட்டப் பல்கலைக்கழகத்தினைத் திறந்துவைக்க வந்திருக்கிறார்கள். அதுவும் அந்தச் சட்டப்பல்கலைக் கழகம் பாபாசாகிப் அம்பேத்கர் பெயரைத் தாங்கியுள்ளதாகும்.

இதைச் சொல்கிற நேரத்தில், இத்தகைய பல்கலைக்கழகத்தை மதிப்பிற்குரிய குடியரசுத்தலைவர் அவர்கள் திறந்துவைப்பது சாலப் பொருத்த முடையதாகும்.

அதுமட்டுமல்ல; தமிழ்நாட்டிற்கு அவர்கள் வருகை தருவதால் நாங்கள் எல்லாம் வேறுயாரையும் விட பெருமகிழ்ச்சி அடைகிறோம். ஏனென்றால் தமிழ்நாட்டில் இருந்துதான், அவர் குடியரசுத்தலைவராக ஆகவேண்டும் என்கிற குரல் புறப்பட்டது. எனவே அந்த விதத்திலே மகிழ்ச்சி அடைகிறோம்.

அதுமட்டுமல்ல; சமூகநீதி பிறந்த இடமே இந்தியாவிலேயே தமிழ்நாடுதான்! இங்கேதான் 1920களிலே நீதிக்கட்சி ஆட்சி செலுத்தியபோது-இங்கே வகுப்புவாரி

"மதிப்பிற்குரிய குடியரசுத்தலைவர் அவர்களே, உங்கள் வடிவிலே நாங்கள் டாக்டர் அம்பேத்கரைப் பார்க்கிறோம்."

- மாண்புமிகு மத்திய தொழில்துறை அமைச்சர்
திரு. முரசொலி மாறன்

பிரதிநிதித்துவம்-இடஒதுக்கீட்டு முறை முதல்முறையாக 1920களிலே இந்த மாநிலத்திலேதான் இந்தியாவிலேயே துவக்கப்பட்டது. அப்பொழுது "சென்னை ராஜதானி" என்று பெயர்.

அந்த சென்னை ராஜதானியிலே இயங்கி வந்த-தென்னிந்திய ரயில்வேயில்கூட, பின்தங்கிய மக்களுக்கு இடம் ஒதுக்கியது உண்டு. அந்த சென்னை ராஜதானியிலே இயங்கி வந்த-இம்பீரியல் வங்கியிலேகூட பின்தங்கிய வகுப்பினருக்கு இடஒதுக்கீடு இருந்தது. ஆனால் சுதந்திரம் வந்த பிறகு-1947க்குப் பிறகு அந்த இடஒதுக்கீட்டு முறை நம்மிடமிருந்து பறிக்கப்பட்டது. அதை நாம் இழந்து விட்டோம். அப்பொழுது தமிழ்நாடு முழுவதும் பெரும் கிளர்ச்சி நடைபெற்றது. அதன்பிறகுதான் பண்டித நேரு அவர்கள் அரசியல் சட்டத்திற்கு முதல் திருத்தத்தைக் கொண்டுவந்து - மறுபடியும் இடஒதுக்கீட்டு முறையைக் கொண்டு வந்தார்.

எனவேதான் நாங்கள் அடிக்கடி சொல்கிறோம்; இந்திய அரசியல் சட்டம் முதல் முறையாகத் திருத்தப்பட்டது என்றால் அதற்குக் காரணம் திராவிடர் இயக்கம்தான்.

**"The first Amendment of the constitution is the Gift of the Dravidian Movement to the Backward Classes of India"**

என்று நாங்கள் பெருமையோடு சொல்லிக் கொள்கிறோம்.

எனவே சமூக நீதி பிறந்த இந்த மாநிலத்திற்கு ஒரு மிகவும் பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்த, ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பலகீனமான வர்க்கத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய கே.ஆர்.நாராயணன் அவர்கள் குடியரசுத்தலைவராக இங்கே வருகை தந்திருப்பது-நாங்கள் அத்தனைபேரும் குடியரசுத் தலைவராக ஆனது போன்ற உணர்வை எங்களிடத்திலே தோற்றுவிக்கிறது.

எனவே குடியரசுத் தலைவர் அவர்களே, வேறு எல்லோரையும் விட மகிழ்ச்சியோடு நாங்கள் உங்களை வரவேற்கிறோம்.

அதுமட்டுமல்ல; உங்கள் கையால் இந்த அம்பேத்கர் பல்கலைக்கழகம் திறந்து வைக்கப்படுவது மிகவும் பொருத்தமுடையது. அதற்காகவும் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம்.

மதிப்பிற்குரிய குடியரசுத்தலைவர் அவர்களே, உங்கள் வடிவிலே நாங்கள் டாக்டர் அம்பேத்கரைப் பார்க்கிறோம்.

**Honourable president! In you we see Dr.Ambedkar once again -** என்ற பெருமையோடு சொல்லிக்கொண்டு-உங்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, வளர்க, வாழ்க இந்தப் பல்கலைக்கழகம் என வாழ்த்துகிறேன்.

- இவ்வாறு மத்தியத் தொழில் துறை அமைச்சர் முரசொலி மாறன் உரையாற்றினார்.

*1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் தேதியன்று, இந்தியா சுதந்திரம் பெற்ற நாளன்று டில்லியில் - செங்கோட்டையை நோக்கி நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் படம் அலங்கரித்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட காட்சி.*



# வாசகர் இதயம்

தமிழ்நாடு அரசின் அறிவிப்புகள் பற்றியும் ஆக்கப்பணிகள் பற்றியும் எளிதில் அறிய உதவும் கையேடாகத் திகழ்கிறது தமிழரசு என்றால் மிகையில்லை.

- கே. ஜகந்நாதன்
சேலம்.

உள்ளாட்சித் தேர்தலில் வாக்களித்து, திசை தெரியாமல் தவித்த வாசகர்களாகிய நாங்கள் ('தமிழரசு' மூலம்) உள்ளாட்சி அமைப்புகளுக்கு அளிக்கப்பட்டுள்ள நிதி-அதிகாரங்கள் பற்றியெல்லாம் அறிந்து மகிழ்ந்தோம்.

- கே. பிரஷ்னேவ்
பாக்கம்கோட்டூர்

அரசு செயல்பாடுகளைத் தெளிவாக எடுத்துரைக்கும் 'தமிழரசு'க்கு எமது பாராட்டுகள்.

- டி.இராசம்மாள்
தலைவர்,
முன்னிலைக்கோட்டை ஊராட்சி.

புதியதோர் சமுதாயம் உருவாகும் வகையில் 'தமிழரசு' அமைந்திருப்பது கண்டு மகிழ்ந்தேன்; 'தமிழரசின்' பணிகள் மேலும் சிறக்கட்டும்.

- சீனிதிருநாவுக்கரசு
சென்னை-17.

தமிழ்நாடு சட்டப்பேரவை வரலாற்று நிகழ்வுகள் தொகுப்பு பயனுள்ளதாக இருந்தது.

-கா.நா.ராஜசேகர்
மங்களபுரம்.

இந்திய சுதந்திரப் போரின் முக்கியச் சம்பவங்கள் பற்றிப் படிக்கும்போது, நம் முன்னோர்களுடைய சுதந்திர வரலாற்றின் கடுமையான நடைப்பயணத்தை உணர முடிந்தது.

- மு. வேதபுரி
கோட்டுப்பாக்கம்.

'தமிழரசு' சுதந்திர தினச் சிறப்பிதழின் கடைசிப்பக்க ஓவியம் கண்ணைப் பறிப்பதாக இருந்தது; ஓவியருக்கு என் பாராட்டு.

- இரா.கவிதா
மன்னார்குடி.

கொடுமுடி கவிஞர் க.அ.பிரகாசம் எழுதியிருந்த விடுதலைநாள் கவிதை அருமையாகவும் சிறப்பாகவும் இருந்தது.

- கவிஞர் இடிமுரசார்
சென்னை-14.

# நூல் நயம்

## கலைஞர் வாழ்க

ஆசிரியர் : கவிஞர் முத்தரசன்
வெளியீடு : பாரி பதிப்பகம்,
219, நேதாஜி சாலை,
பெரம்பலூர்-621212.

பக்கம்:104 விலை ரூ.25

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களைப் பற்றிய அற்புதமான கவிதைகள் 64 இந்த நூலில் உள்ளன; ஒவ்வொன்றும் ஒவ்வொரு தமிழ்ப் பாவலரால் எழுதப்பட்டது.

## அன்றும் இன்றும்-சில ஆய்வுகள்

பக்கம்:100 விலை ரூ.20

'திருக்குறள் உணர்த்தும் செங்கோல் முறைமை' முதலான 12 பைந்தமிழ்க்கட்டுரைகளின் தொகுப்பு நூல் இது. இதில் தமிழறிஞர் சிலரும், தமிழ்ப் பண்பாடுகள் சிலவும் அலசப்பட்டுள்ளன.

## பேராசிரியர் பார்வையில் பெருஞ்சித்திரனார்

ஆசிரியர் : கடவூர் மணிமாறன்

பக்கம்:96 விலை ரூ.20

தமிழ் இலக்கண-இலக்கியங்களில் வல்ல பெருஞ்சித்திரனாரைப் பற்றிப் பேராசிரியர் அவர்கள் ஆற்றிய உரை மட்டுமன்றி-கலைஞர் அவர்கள் ஆற்றிய உரையும், பெருஞ்சித்தினாரே ஆற்றிய உரையும் தொகுத்தளிக்கப்பட்டுள்ள நூல் இது.

- இவ்விரு நூல்களையும் வெளியிட்டோர்
விடியல் வெளியீட்டகம்,
109, மேலைத் தெரு,
கிருட்டிணராயபுரம்-639 102.
கரூர் மாவட்டம்.

## என்றும் இனிய எழுபது கவிதைகள்

தொகுப்பு : கவிஞர் குழு,
வெளியிட்டோர் : காமதேனு பப்ளிகேஷன்ஸ் லிட்.,
2, ஜெயசங்கர் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை-600 033.

பக்கம் : 104 விலை ரூ.20

பல்வேறு பொருள்களைக் கருவாகக் கொண்டு படைக்கப்பட்ட எழுபது இனிய கவிதைகளின் தொகுப்பு நூல் இது; 70 கவிஞர்கள் மரபு வழியிலும், புதுக்கவிதையாகவும், சந்தப்பாடலாகவும் படைத் திருக்கிறார்கள்.

## காகிதக் கற்புகள்

ஆசிரியர் : பரிக்கல் என்.சந்திரன்
வெளியிட்டோர் : முத்துப் பதிப்பகம்,
7, வில்லியம் லே-அவுட்,
இரண்டாவது தெரு,
விழுப்புரம் - 605 602.

பக்கம் : 228 விலை ரூ.47

பல்வேறு வார-மாத இதழ்களில் அவ்வப்போது வெளிவந்த 13 சிறுகதைகளின் தொகுப்பு நூல் இது. இன்றைய சமுதாயத்தின் ஓட்டை உடைசல்களை கதைகள் தோறும் மைய இழைகளாக அமைந்திருக்கின்றார் நூலாசிரியர்.

## வ.வே.சு. ஐயரின் கம்பராமாயணக் கட்டுரைகள்

ஆசிரியர் : பெ.சு. மணி

வெளியிட்டோர் : பூங்கொடி பதிப்பகம்,
59, ஆடம் தெரு,
சென்னை-600 004.

பக்கம் : 284 விலை ரூ.60

இங்கிலாந்து யூனிடேரியன் சர்ச்சில் செய்த முதல் சொற்பொழிவிலிருந்து-இராமாயணத்தில் காண்டம் வாரியாக வ.வே.சு.ஐயர் ஆற்றிய சொற்பொழிவுகள் - கட்டுரை ஆகியவற்றின் தொகுப்பு இது. கடைசி இருபது பக்கங்களில் அவரது ஆங்கிலக் குறிப்புகளும் உள்ளது.

## தேமாங்கனி

ஆசிரியர் : வாழியூர் வே. இராசவேலன்,
வெளியிட்டோர் : பேரரசு பதிப்பகம்,
வாழியூர் அஞ்சல்,
திருவண்ணாமலை மாவட்டம்.

பக்கம் : 112 விலை ரூ.30

கம்பராமாயணத்துடன்-சீவகசிந்தாமணி, நளவெண்பா, தேம்பாவணி ஆகிய இலக்கியங்களை ஒப்பாய்வு செய்து எழுதியுள்ளார் நூலாசிரியர்; மூன்று கட்டுரைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

- இந்திரன்

# தூய்மைச் சிறகுகள்

கவியரசு வைரமுத்து



தோழர்களே!

அவரவர் கைக்குட்டையில்
அடுத்தவர் முகம்
துடைத்துவிடுங்கள் -

நாம்
தூய்மை பற்றிப் பேசப்போகிறோம்!

நாற்காலி நுனியில்
செருப்பில் பாதம்படா பிரதேசத்தில்
படிந்திருக்கும் தூசுகளை
பையத் தட்டுங்கள்-

நாம்
தூய்மை பற்றிப் பேசப்போகிறோம்!

உங்கள்
வெற்றிலைச் சாறு-
மிட்டாய் காகிதம்-
பேருந்துச் சீட்டு-
செல்லாத நோட்டு-
எல்லாவற்றையும்
குப்பைத் தொட்டியில்
கொட்டிவிட்டு வாருங்கள் -

நாம்
தூய்மை பற்றிப் பேசப் போகிறோம்!

❑

தூய்மையே ஜனனம்
தூய்மையின்மையே மரணம்

என்
தொப்பூழ்க்கொடியைத் துண்டிக்க
மருத்துவச்சி கையில் மாட்டிய
துருப்பிடிக்காத அரிவாள்மனையைத்
தொட்டு வணங்குகிறேன்!

இந்த பூமியை
சூரியன் துப்பியது;

துப்பிய பூமி
தூய்மையாய் இருந்தது!

பூமியின் மீது
யுகமழை பெய்தது;
மழைகொண்ட பூமி
தூய்மையாய் இருந்தது!

ஒருசெல் உயிர்கள்
உற்பத்தி ஆயின;
உயிர் கொண்ட பூமி
தூய்மையாயிருந்தது!

பறவைகள் பின்னர்
பாடத் தொடங்கின;
ஒலிகொண்ட பூமி
தூய்மையாயிருந்தது!

விலங்குகள் வனங்களில்
உலவத் தொடங்கின;
தொடர்ந்து பூமி
தூய்மையாயிருந்தது!

❑

குரங்கிலிருந்து
மனிதன் குதித்தான்;
பூமியை விட்டுத்
தூய்மை குதித்தது!











நிலம் மாசுறவில்லை
மனிதன் பிறக்கும்வரை;

நீர் மாசுறவில்லை
மனிதன் கலக்கும்வரை;

நெருப்பு மாசுறவில்லை
மனிதன் கொளுத்தும்வரை;

வான் மாசுறவில்லை
மனிதன் பறக்கும்வரை;

காற்று மாசுறவில்லை
மனிதன் புகைக்கும்வரை!

❑

மனிதா!
ஐம்பூதங்களை
இட்டு நிரப்பிய
சின்னப்பெட்டி நீ;

காற்றின் பாகம் நீ;
நெருப்பின் துண்டு நீ;
நீரின் துளி நீ;
மண்ணின் துகள் நீ;
ஆகாயத்தின் அம்சம் நீ

ஆக்கிய ஐம்பூதங்களை ஏன்
அழிக்கப்பார்க்கிறாய்?

உன் வாழ்க்கை என்பது
வானத்தின் கருணை
வழங்கிய பிச்சை!

இன்று
வானத்தையே நீ
கிழித்துவிட்டாயே!

ஓஸோன் கூரையைத்
துளைத்துவிட்டாயே!

இலை கிழிந்தால்
வேறிலை பெறுவாய்;

தலை கிழிந்தால்
தையல் இடுவாய்;

உடை கிழிந்தால்
ஒட்டுப் போடுவாய்;

ஓஸோன் கிழிந்ததே
என்ன செய்குவாய்?

பூமி
தன்னை ஒரு பூங்காவாய்
ஒப்படைத்தது;

நீ ஏன் அதை
மயானமாய் மாற்றுகிறாய்?

ஒவ்வொரு மரம்
வெட்டப்படும் போதும்
பூமியின் ஆயுளில்
ஒருநாள் குறைகிறது


ஒரு மரம்
பூமியில் விழும்போதெல்லாம்
புள்ளி ஒரு மில்லிமீட்டர்
ஓசோன் கிழிகிறது!

சொல்!
வானுக்கெப்படி
வைத்தியம் செய்வாய்?

கலங்காதே!
பூமியிலிருந்தே வானம் தைக்கலாம்

ஒவ்வொரு மரமும்
ஓசோன் கிழிசல் தைக்கும்
ஊசியல்லவா?







வெட்டாதீர் மரங்களை

மரங்களிலிருந்து
இலை உதிர்ந்தாலும்
இழவு கேளுங்கள்!

மரமே விழுந்தால்
இரண்டு நிமிடம் எல்லோரும்
எழுந்து நில்லுங்கள்;

மரம் வெட்டுவதை
நிறுத்துங்கள்
இல்லை-
மரங்களைக் கொலை செய்தால்...
என்று

இ.பி. கோவைத்
திருத்துங்கள்!

❑

வானில் ஓட்டை
நிலத்தில் நெருப்பு
நீருக்கு மூர்ச்சை
காற்றுக்கு மாரடைப்பு!

தூய்மை எப்படிச்
சிறகு விரிக்கும்?

இந்த நகரத்துக் காற்றில்
எனக்கு நம்பிக்கை இல்லை;
இதில்
பிராணவாயு பிரித்தெடுக்க
நாசிக்குச் சக்தி இல்லை;

சுற்றியுள்ளது காற்றல்ல
இது
பெட்ரோல் டீசலின்
வளி வடிவம்!

இதைச் சுவாசிப்பதெனில்
எந்திரமூக்கு வேண்டும்
எனக்கு!

மரணப்படுக்கையில்
காற்றைத் தள்ளிய
மனிதக் குமாரர்களே!

புகை பிடித்தீர்கள்
காற்று ரணமானது
எந்திரப்புகை எழுந்தது
காற்று இறுகியது!

குப்பைகள் வானளாவின
காற்று கெட்டிப்பட்டது
எப்படி சுவாசிப்பது?

நுரையீரல் இப்போது
எஃகினால் வேண்டும்
எனக்கு!

❑

உணவு திரிந்தால்
இரைப்பையைப்
பட்டினி போடுவேன்;

தண்ணீரில் கிருமிகளா
தாகத்தை தள்ளிவைப்பேன்!

❑

காற்று திரிந்தால்
சுவாசப்பையும்
பட்டினி கிடக்குமா?

அணு உலைகளின் பெருமூச்சு
ஆலைகளின் இடுமூச்சு
தொழிற்சாலைச் சுடுமூச்சு
எல்லாம் கலந்தால்
அடுத்த நூற்றாண்டில்
மனிதன் இருப்பானோ!

இல்லை
அடுத்த நூற்றாண்டில்
காற்று இருக்குமோ?

❑

இனிஒரு விதிசெய்வோம்-அதை
எந்த நாளும் காப்போம்;
பிறப்பு முதல் இறப்புவரை
தூய்மை நமக்குள்
துலங்கட்டும்!

பிரசவ அறைகளில்
சந்தனத்தைலம்
தடவி வைப்போம்!

கர்ப்பக்கிரகத்திலிருந்து இந்த
அற்பக் கிரகம் வரும் குழந்தை
சுகந்தத்தில் சுவாசிக்கட்டும்!

நித்தம் இருமுறை
நீராடுவோம்!

கூழானாலும்
குளித்துக் குடிப்போம்

சுத்தத்தின் உணர்வை
ரத்தத்தில் ஏற்றுவோம்.

❑



# தமிழ்நாட்டில் காந்தியடிகள்

அண்ணல் காந்தியடிகள் 14 தடவை தமிழ்நாட்டிற்கு வருகை தந்திருக்கிறார்.

1. 1896 அக்டோபர் 11-16 முதல் தடவை சென்னைக்கு வந்தார். பச்சையப்பன் மண்டபத்தில் சொற்பொழிவு.
2. 1915 தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பியபின் சென்னைக்கு வந்தார். ஏப்ரல் 21 - மே 28, தில்லையாடி கிராமத்திற்குச் சென்று வள்ளியம்மையின் உறவினர்களைச் சந்தித்தார்.
3. 1916 பிப்ரவரி சென்னைக்கு வருகை. சுதேசி இயக்கப் பிரச்சாரம்.
4. அதே ஆண்டு மீண்டும் ஏப்ரலில் சென்னை வந்தார்.
5. 1919 மார்ச் 16-30 ரௌலட் சட்டத்தை எதிர்க்க சாத்வீக ஒத்துழையாமை எண்ணம் சென்னையில் தான் அவருக்கு உதித்தது. இந்தத் தடவைதான் பாரதியார் மகாத்மாவை முதன் முதலில் சந்தித்தார். காந்திக்கு ராஜாஜியின் நட்பு கிடைத்ததும் இந்தச் சமயத்தில்தான்.
6. 1920 ஆகஸ்ட் 12 முதல் செப். 10 வரை கிலாபத் இயக்கத்திற்கு ஆதரவு தேட திருமதி முகம்மது அலி, ஷவ்கத் அலியுடன் சென்னை வந்தார்.
7. 1921 செப். 14 - அக். 3 மதுரைக்குச் சென்றிருந்த போதுதான் காந்தியடிகள் ஒரே ஆடை அணியும் விரதத்தை மேற்கொண்டார்.
8. 1925 மார்ச் வைக்கம் சத்யாகிரகத்திற்கு ஆசி அளிக்கச் செல்கையில், தமிழகம் வருகை.
9. வைக்கத்திலிருந்து செயல் வீரர்கள் திரும்பியபோதும் வருகை.
10. 1927 அக்டோபர்,இலங்கை செல்லும் வழியில் சென்னை வருகை.
11. 1927 டிசம்பர் இலங்கையிலிருந்து திரும்புகையில் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள வந்தார்.
12. 1934 ஜனவரி முதல் மார்ச் வரை, தமிழகத்தில் அரிசன மக்கள் மேம்பாட்டிற்காக யாத்திரை. 112 ஊர்களுக்குச் சென்றார்.
13. 1937 மார்ச் 26 பாரதீய சாகித்ய பரிஷத் கூட்டத்திற்கு வந்தார்.
14. 1946 ஜனவரி - சென்னையில் தட்சிண பாரத இந்திப் பிரச்சாரசபை வெள்ளி விழாவுக்குத் தலைமை வகித்தார். மதுரை, பழனி ஆகிய ஊர்களில் உள்ள ஆலயங்களுக்குச் சென்றார்.

- எஸ்.பி.ஆர்.

# காந்தி

எண்ணரிய தியாகிகளை எழும்ப வைத்த
எழுதரிய காந்திமகான் தவத்தி னாலே
மண்ணுலகம் இதுவரையில் அறியா நல்ல'
மார்க்கத்தில் அடிமைமனம் மறையச் செய்து
கண்ணனைய சுதந்திரத்தின் காட்சி மேவக்
கருதரிய குடியரசு தொடங்கக் கண்டோம்
திண்ணமுடன் காந்திவழி நிற்போ மானால்
தீராத குறைகளெல்லாம் தீர்ந்து போகும்.



காந்தியடிகள் பிறந்த நாள் அக்டோபர், 2

# தந்த

புண்படுத்தல் எதற்கெனினும் தீதே என்றும்
பொதுவான நல்லறிவை மிகவும் போற்றி
உண்பதற்கும் உடுப்பதற்கும் மட்டு மின்றி
உயிர்களுக்கும் சமதர்ம உணர்ச்சி காட்டும்
பண்புடைய மனப்பான்மை பலிக்க வேண்டி
பக்தியுடன் காந்திவழி பயில்வோ மானால்
மண்புகழும் குடியரசு நமதே யாகும்;
மனிதருக்குள் சண்டைகளை மறையச் செய்வோம்.

சட்டதிட்டச் சிறப்புமட்டும் சரிசெய் யாது
சைந்நியத்தின் மிகுதிமட்டும் சாதிக் காது
கட்டுதிட்ட உணர்ச்சியுடன் குடிக ளெல்லாம்
கடமையெனப் பொறுப்புகளைக் கருத வேண்டும்.
திட்டமிட்டுக் காத்திருந்து சேவைசெய்யும்
தியாகபுத்தி குடியரசின் தேவை யாகும்.
வட்டமிட்டு நம்மறிவைப் பாது காக்க
வள்ளலந்தக் காந்தியைநாம் வணங்க வேண்டும்.

# குடியரசு



பிறநாட்டு வழிகளைநாம் பின்பற் றாமல்
பிற்போக்கு வெறிகளுக்கும் இடங்கொ டாமல்
திறம்காட்டி மெய்யறிவின் தெளிவும் சேர்ந்த
சீலர்களைத் தேர்ந்தெடுக்கத் தெரிந்து கொண்டால்
உறங்காமல் காந்திமகான் உபதே சத்தை
ஊரூராய்ப் பரப்புவதில் ஊக்கம் கொள்வோம்;
அறங்காட்டும் புதுமுறையில் ஆட்சி செய்வோம்;
அதற்கென்றே அவதரித்தார் அண்ணல் காந்தி.

எந்திரங்கள் தந்தவெறி குறைய வேண்டும்;
எங்கெங்கும் கைத்தொழில்கள் நிறைய வேண்டும்;
தந்திரங்கள் பணம்பறித்தல் தடுக்க வேண்டும்;
தன்னலங்கள் தலையெடுப்பை ஒடுக்க வேண்டும்;
சிந்தனையில் தெய்வபயம் சேர வேண்டும்;
செய்கையெல்லாம் பொதுநலத்தைக் கோர வேண்டும்;
மந்திரமாய்க் காந்திமகான் திருநா மத்தை
மக்களெல்லாம் மறவாமல் ஜெபிக்க வேண்டும்!

- நாமக்கல்
கவிஞர்
வெ. இராமலிங்கம்

*(நாமக்கல் கவிஞரின் பிறந்த நாள் 19.10.1878 நினைவாக)*

# ஜாலியன்வாலா பாக்

- தங்கவயல் லோகிதாசன்



சுமார் 70 ஆண்டுகளுக்கு முன்னே நடந்த ஜாலியன்வாலா படுகொலை பற்றி, இன்னும் பல அரசியல் பேச்சாளர்கள் மேடைகளில் தீ கக்குகிறார்கள். அதற்குப் பின்னால் இந்திய சுதந்திரத்துக்கு முன்னும் பின்னும் எத்தனையோ படுகொலைகள் நிகழ்ந்திருக்கின்றன. அந்த ஜாலியன்வாலா நிகழ்ச்சி பற்றி இந்தத் தலைமுறையினர் பலர் அறிந்தே இருக்கமாட்டார்கள். ஆயினும் தேசீய எழுச்சி உண்டாக்கிய முதல் சம்பவம் அது. எனவே, அதுபற்றிய இந்த விவரத்தை இங்கே தருகிறேன்.

மகாத்மாகாந்தி, முதன்முதல் இந்தியாவில் அரசியல் போராட்டத்தை, ரௌலட் சட்ட மசோதா என்ற பயங்கர அடக்குமுறைச் சட்டத்தை எதிர்த்ததிலிருந்தே ஆரம்பித்தார். அப்போது காந்திஜி சென்னைக்கு வந்திருந்தார். ராஜாஜியின் சிநேகமும் அப்போதுதான் அவருக்கு ஏற்பட்டது. ராஜாஜியின் மதிநுட்பத்தையும் அவர் அறிந்து கொண்டார். ரௌலட் சட்டத்தை எப்படி எதிர்ப்பது என்பதுபற்றி ராஜாஜி, 'ஹிந்து' கஸ்தூரிரங்க ஐயங்கார், சேலம் விஜயராகவாச்சாரியார் மூவருடனும் கலந்து ஆலோசித்தார். இறுதியில் காந்திஜிக்கே கனவில் ஒரு யோசனை உதித்தது. நாடெங்கும் ஹர்த்தால் நடத்தவேண்டும் என்பதே அந்த யோசனை. இதை ராஜாஜியிடம் சொன்னார். ஏப்ரல் ஆறாந்தேதி நாடெங்கும் ரௌலட் மசோதா எதிர்ப்பு ஹர்த்தால் நடத்தவேண்டும் என்று மக்களுக்கு ஒரு வேண்டுகோளும் விடுத்தார்.

அப்படியே ஹர்த்தாலும் பொதுக்கூட்டங்களும் ஊர்வலங்களும் நடந்தன. அதிகாரிகள் பயந்தார்கள். பல இடங்களில் தலைவர்களைக் கைதுசெய்தார்கள், கூட்டங்களைத் தடுத்தார்கள். சில இடங்களில் துப்பாக்கியாலும் சுட்டார்கள். இதில் சில மக்கள் மாண்டும் போனார்கள்.

ஆத்திரம் கொண்ட மக்கள் டில்லி, பம்பாய், அகமதாபாத், பஞ்சாப் இங்கெல்லாம் கலவரம் செய்தார்கள். சில வெள்ளைக்காரர்களைக் கொலையும் செய்துவிட்டார்கள்.


பஞ்சாபில் மைக்கேல் ஒட்டவியர் என்பவர் லெப்டினன்ட் கவர்னராக இருந்தார். ஜெனரல் டயர் என்பவன் ஒரு மிகச் சாதாரண ராணுவவீரன். அவனை அமிர்தரஸுக்கு ஒட்டவியர் அனுப்பினார். மக்களை அடக்கச் சொன்னார். 'ஊரிலே கூட்டமோ, ஊர்வலமோ நடக்கக்கூடாது' - இது டயரின் உத்தரவு.

1919 ஏப்ரல் 13-ஆம் தேதி அமிர்தசரஸ் நகரத்தில் ஜாலியன்வாலா பாக் என்ற சிறு சதுக்கம். அதற்கு மூன்று பக்க அடைப்பு; ஒரே பக்கம் திறப்பு, அதில் ஒரு கூட்டம். சுமார் பத்தாயிரம் ஜனங்கள் கூடியிருந்தார்கள். திறந்த பக்கத்தில் பதவி உயர்வு பெற்ற டயர் வந்து நின்றுகொண்டான். அவனோடு ஐம்பது சிப்பாய்கள் வந்து நின்றார்கள். மக்களைக் கலையச் சொல்லவில்லை; எச்சரிக்கவில்லை, 'சுடுங்கள்' என்று டயர் உத்தரவு போட்டான். சிப்பாய்கள் சுட்டார்கள். மக்கள் சட்டென்று ஓட வழியில்லை.சிறிது சிறிதாகவே கலைந்தோட முடிந்தது. இதனால் முந்நூற்று எழுபத்து ஒன்பது பேர் மாண்டார்கள்; ஆயிரத்து நூற்றுமுப்பத்தேழு பேர் காயம் அடைந்தார்கள், இதுவே 'ஜாலியன் வாலாபாக் படுகொலை' என்றும், 'பஞ்சாப் படுகொலை' என்றும் பெயர் பெற்றது. தேசமே அதிர்ச்சியுற்று மக்களெல்லாம் துயரும் வேதனையும் அடைந்தார்கள்.

ஆனால், டயரின் செயலைக் கவர்னர் ஒட்டவியர் கண்டிக்கவில்லை; ஆதரித்தார்.

வெள்ளையரிடமிருந்து நியாயம் கிடைக்கும் என்று நம்பியவர்கள் பலர், இந்த நாட்டில் அன்று இருந்தார்கள். அவர்களும் மனம் பதைத்து, காந்திஜி காட்டிய வழியைப் பின்பற்றலானார்கள். ஜாலியன்வாலா நிகழ்ச்சி கண்டு மோதிலால் நேரு தீவிர காந்தி பக்தரானார்; கவியரசர் ரவீந்திரநாத் தாகூர் தமது 'ஸர்' பட்டத்தை உதறித்தள்ளினார்; மிதவாதத் தலைவர்களில் பெயர் பெற்ற மகாகனம் சாஸ்திரியார், நெருப்புப் பறக்கச் சட்டசபையில் இந்த அக்கிரமத்தைக் கண்டித்தார்.

அட்டர் கௌர் என்னும் பெண்மணி - அந்தப் படுகொலை நடந்தபோது இவளுக்கு வயது 15.



இவள் தன் கணவனை அந்தப் படுகொலையில் பறிகொடுத்தவள். வெள்ளையரின் அரசாங்கம் இவள் அடைந்த நஷ்டத்துக்கு ரூ.1000 நஷ்ட ஈடு தர முன்வந்தது. 'எனக்கு வேண்டியது பணம் இல்லை; நீதி' என்று பணத்தை மறுத்துவிட்டாள் கௌர். ஆனால் அந்த நீதி அவளுக்குக் கிடைக்கவே இல்லை.

இவ்வளவு கொடுமை இழைத்த அந்த டயர் என்பவனை அரசினர் சும்மா விட்டு விட்டார்கள். வேலையை மட்டும் ராஜிநாமாச் செய்யச் சொன்னார்கள். இங்கிலாந்துக்கு அவன் திரும்பினான். அங்கே ஆங்கில ஏகாதிபத்திய வெறியர்கள் அவனைப் பாராட்டவும் பாராட்டினார்கள். 1927 வரை வாழ்ந்து அவன் இறந்து போனான். இந்தப் படுகொலைக்குப் பொறுப்பாளியான ஓட்டவியரை, இந்தியப் புரட்சிவாதிகள் சும்மா விட்டுவிடவில்லை. ஜாலியன்வாலா கொடுமை நடந்து 21 ஆண்டுகள் கழித்து, ஷஹித் உத்தம்சிங் என்பவர் லண்டனில், ஓட்டவியரை ஒரு பொதுக்கூட்டத்தில் சுட்டுக்கொன்று வஞ்சம் தீர்த்தார். அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட இந்தியா மந்திரி வார்டு ஜெட்லண்ட் காயத்துடன் தப்பினார்.

சுட்டவர் தப்பி ஓடவில்லை. தமது பெயர் ராம் முகம்மது சிங் ஆஜாத் என்று போலீஸாரிடம் தெரிவித்தார். தமது பாஸ்போர்ட்டில் அவர் அந்தப் பெயரைத் தான் குறிப்பிட்டிருந்தார். ஜாலியன் வாலாபாக் அருகில் அவர் ஒரு கடை வைத்திருந்தார். படுகொலையை நேரே பார்த்தவர். 1940 மார்ச் 14ஆம் தேதி இப்படி வஞ்சம் தீர்த்தார். வாலா ஹரிதயாள், டாக்டர் கிச்லு ஆகிய பஞ்சாப் தலைவர்களுக்கு வலதுகை போல விளங்கியவர், அவர்.

அவர்மீது நடந்த வழக்கு விசாரணையின் போது 'போலீஸ் இன்ஸ்பெக்டரை ஏதாவது கேள்விகள் கேட்க வேண்டுமா?' என்று மாஜிஸ்திரேட் கேட்டார்.

"வேண்டியதில்லை" என்று அவர் பதில் அளித்தார். தூக்கு மேடையில் நிம்மதியாகவே உயிர் விட்டார்.

இந்தியருக்கு ஜாலியன்வாலாபாக் சம்பவம் கற்றுக் கொடுத்த பாடங்கள் பல; முக்கியமான மூன்று இவை:

1. நியாயம் பேசி அந்நிய ஆட்சியிடமிருந்து சுதந்திரத்தை வாங்கிவிட முடியாது.

2. நாடு ஐக்கியப்பட்டால்தான் சுதந்திரமாய் வாழ வழிபிறக்கும்.

3. அடக்குமுறையின் மூலம் ஒரு நாட்டை ஆண்டு விட முடியாது.

இந்த உண்மைகள் அன்றும் சரி, இன்றும் சரி, அரசியலில் பொருந்தும்.

-'நமது சுதந்திரப் போராட்டங்கள்' என்ற நூலிலிருந்து




சென்னை மாநகரின் அழகுக்கு அழகூட்டும் வகையில் எழிலுடன் அமைந்துள்ளது வள்ளுவர் கோட்டம்.

கண்ணைக் கவரும் வண்ணப் பொலிவோடு காட்சி தருமாறு நமது முதலமைச்சர் கலைஞர் அவர்களால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட வள்ளுவர் கோட்டம்-கடந்த ஆண்டுகளில் உரிய முறையில் சீரமைக்கப்படாமலும், பழுதுநீக்கம் செய்யப்படாமலும் இருந்து வந்தது.

அதனைச் செம்மையுறச் சீர்பெறச் செய்து புதுப்பிக்குமாறு முதலமைச்சர் கலைஞர் ரூ.84.94 இலட்சம் ஒதுக்கீடு செய்து கடந்து ஆண்டு ஆணை பிறப்பித்தார்.

அதனடிப்படையில் - வள்ளுவர் கோட்டத்தின் பொலிவைக்கூட்டிடும் வகையில் புதுப்பிக்கப்பட்ட பணிகள் பற்றிய விவரங்கள் வருமாறு:

★ குறள் மணி மாடத்தில் கோட்டக்கல் உபயோகித்து தளம் அமைத்தல்.

★ திருவள்ளுவர் சிலையினைச் சுற்றியுள்ள சுவரில் பதிக்கப்பட்ட கற்களுக்கான சிறப்பு செப்பனிடும் பணி.

★ வள்ளுவர் கோட்ட பின்புறம், தனியாகச்சுற்றுச் சுவர் கட்டும் பணி.

★ அரங்கத்தின் தரைப் பகுதியினைச் செப்பனிடுதல்.

★ வள்ளுவர் கோட்ட நுழைவுச்சீட்டு வழங்கும் இடம் பழுதடைந்துள்ளதால் நுழைவு வாயிலுக்கு அருகில் மாற்றி அமைக்கும் பணி.

★ வள்ளுவர் கோட்டப் பெயர்ப் பலகை புதிதாக அமைத்தல்.

★ குறள் மணிமாடம், அரங்க வராந்தா மற்றும் அரங்கம் ஆகிய இடங்களில் மழைக்காலங்களில் ஏற்படும் நீர்க் கசிவைத் தடுக்கும் பணி.

★ சிற்பத் தேரில் துணியால் அமைக்கப்படும் தொம்பைகள் அமைக்கும் பணி.

★ தோரணவாயில் மற்றும் பூங்காக்களின் நடைபாதைகளில் வழுக்காத ஓடுகளைப் பதிக்கும் பணி.

★ வள்ளுவர் சிலை அமைந்துள்ள கருவறை தளத்தில் கற்களை மாற்றியமைக்கும் பணி.

★ தேரின் பின்பகுதியில் தேரின் நிழல் அப்படியே தெரியும் வகையில் நீர்ப்பரப்புப் பகுதியைப் புதுப்பித்தல்.

★ திருவள்ளுவர் குறித்தும் - மற்றும் திருக்குறள் பற்றியும் அனைத்து ஆசிரியர்கள் எழுதிய உரைகள், ஆய்வுக்கட்டுரை நூல்கள் ஆங்கிலம், தமிழ் மற்றும் அனைத்து மொழி நூலாசிரியர்கள் இயற்றிய நூல்கள் இடம்பெறும் நூலகம் அமைத்தல்.

★ வள்ளுவர் கோட்டத்தில் உள்ள அனைத்துக்கட்டிடச் சுவர்களுக்கும் (உள்பக்கம் மற்றும் வெளிப்பக்கம்) சுற்றுச் சுவருக்கும் சிமெண்ட் பெயிண்ட் பூசுதல்.





- ★ வள்ளுவர் கோட்ட உட்புறச் சாலையினைச் செப்பனிடும் பணி.
- ★ வள்ளுவர் கோட்ட வராந்தா, குறள் மணி மாடம், தேர், கருவறை ஆகிய இடங்களில் போதிய மின்விளக்குகள் அமைக்கும் பணி.
- ★ கலை நுட்பம் கொண்ட சிற்பத்தேரில் செதுக்கப்பட்டுள்ள குறள் விளக்கக் காட்சிகளில் மீதமுள்ளவற்றைச் செதுக்கும் பணிகள்.
- ★ சுற்றுப்புறச் சுவர் அழகுபடுத்தும் பணி ஆகியவை செம்மையுறச் செய்துமுடிக்கப்பட்டன.

கடந்த செப்டம்பர் திங்கள் வள்ளுவர் கோட்டத்தில் விழாக்கள் புதுப்பொலிவோடு தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

கலைஞர் அவர்களால் கவினுற உருவாக்கப்பட்ட வள்ளுவர்கோட்டத்தின் வரலாறு:

## உலகப் பொதுமறை தந்த வள்ளுவர்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழுக்குக் கிடைத்த கருவூலமாம் திருக்குறள் அறுபதுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டு உலகப் பொதுமறையாய்த் திகழ்கிறது.

*"கடுகைத் துளைத்துஏழ் கடலைப் புகட்டிக்*
*குறுகத் தரித்த குறள்"*
என்று இடைக்காடராலும்,

*"அணுவைத் துளைத்துஏழ் கடலைப் புகட்டிக்*
*குறுகத் தரித்த குறள்"*

என்று ஔவைப் பெருமாட்டியாலும் சிறப்புறப் போற்றப்பட்ட, உலகப் பொதுமறையாம் திருக்குறளை இயற்றிய திருவள்ளுவருக்குச் சிறப்புச் செய்யப்பட வேண்டும் என்ற தமிழ்ச் சான்றோர்களின் நீண்டகாலக் கனவை நனவாக்கும் வகையில், சென்னையில் வள்ளுவர் கோட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்று முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களால் முடிவெடுக்கப்பட்டது.

### கலைஞர் அவர்களின் சிந்தையில் உருவாகிய வள்ளுவர் கோட்ட வடிவமைப்பு


''ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிக்கின்ற உலகத் தமிழ் மறையாம்'' அந்தக் **குறளோவியத்தின் கோட்டம்** எந்த அமைப்பில் உருவாக வேண்டும்; எவ்வெவ்வகையில் அது பயன் தரத்தக்கதாக அமையவேண்டும் என்பதையெல்லாம் அறிவுப்பூர்வமாகவும், ஆக்கபூர்வமாகவும் சிந்தித்து **'பூம்புகார் பெருந்தச்சன்'** என்று சிற்பிகளால் சிறப்பிக்கப்பட்ட முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களால் உருவகப் படுத்தப்பட்டு, உலகோர் கவனத்தை ஈர்க்கும் வண்ணம், கலை நுணுக்கத்தோடு **வள்ளுவர் கோட்டம்** வடிவமைக்கப்பட்டது. சென்னை நுங்கம்பாக்கத்தில் 5 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு 18-9-1974 அன்று **கலைஞர் மு. கருணாநிதி** அவர்களால் வள்ளுவர் கோட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. கட்டடப் பணிகள் நடந்து கொண்டிருக்கும்பொழுது அலுவல் பணிகளுக்கிடையில் இதற்கென நேரம் ஒதுக்கி, முதலமைச்சர் அவர்களது இடையறாத மேற்பார்வையின் விளைவாக வள்ளுவர் கோட்ட உருவாக்கப் பணிகள் 1976 ஜனவரித் திங்களில் முடிக்கப்பட்டன.


**15.4.1976ஆம் ஆண்டு மேதகு ஆளுநர் திரு. கே.கே. ஷா அவர்கள் தலைமையில், மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் அலி அகம்மது அவர்களால் வள்ளுவர் கோட்டம் திறந்து வைக்கப்பட்டது.**

### தோரணவாயில்

திராவிடக் கட்டடக் கலாச்சாரத்தை அடிப்படையாக வைத்து -

*'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகு'*





- என்ற குறளுடன் தோரணவாயில் அழகிய வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கிருந்து தலைவாயிலை அடையும் வரை உள்ள நடைபாதைக்கு இருபுறமும் பச்சைப் போர்வை விரித்தது போல் எழிலார்ந்த புல்வெளித் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

### குறள் மணிமாடம்

அறம், பொருள், இன்பம் என்ற திருக்குறளின் 1330 பாக்களும் திறந்த புத்தக வடிவில், கலை வண்ண நயத்துடன் சலவைக் கற்களில் பொறிக்கப்பட்டுள்ளன. திருவள்ளுவரைப் போற்றும் 'திருவள்ளுவர்மாலை' பாக்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

### வேயா மாடம் - வள்ளுவர் சிலை

கோட்டத்தின் மேல்தளமான வேயா மாடத்தின் வடக்குப்புறத்திலுள்ள சிற்பத்தேரின் கருவறையில் திருக்குறளின் முப்பாலைக் குறிக்கும் வகையில், மூன்று விரல்களை உயர்த்திய நிலையில் அழகிய பீடத்தில் ஒளிமிக்க கருங்கல்லினாலாகிய திருவள்ளுவர் சிலை உயிரோட்ட அழகோடு அமைக்கப் பட்டுள்ளது. வேயா மாடத்தில் அமைக்கப்பட்டுள்ள 3 நீர்ப்பரப்புத் தொட்டிகளில், தேர்க்கோபுரம், தேர்க்கலசம், திருவள்ளுவரின் சிலை ஆகியவற்றின் பிரதிபலிப்புகளான நிழல் சித்திரங்கள் - ஓர் அற்புதக் காட்சியாகும்.

### அரங்க மண்டபம்

*'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு'*

- என்ற அருங்குறளை முகப்பில் கொண்டு, சுமார் நான்காயிரம் பேர் அமர்ந்து நிகழ்ச்சிகளைக் காணத்தக்க வகையில், தூண்களே இல்லாமல் அரங்கம் அமைக்கப் பட்டுள்ளது. இக் கலை மண்டபம் ஆசியாக் கண்டத்தில் உள்ள பெரிய அரங்குகளில் ஒன்றாகும்.

சங்கப்புலவர் அதங்கோட்டாசான், தொல்காப்பியர் ஆகியோரது ஓவியங்கள் அரங்க மேடையின் இருபுறமும், நடுவில் திருவள்ளுவரின் வண்ணமிகு ஓவியமும் இடம்பெற்றுள்ளன.

### சிற்பத் தேர்

திருவாரூர்த் தேரையே சென்னை மாநகருக்குக் கொண்டு வந்ததுபோல், வள்ளுவர் கோட்டத்தின் மணிமுடியாய் காண்போரைக் கவரும் வண்ணம் உயர்ந்து நிற்பது இச் சிற்பத்தேரின் சிறப்பாகும். இவ்வழகிய தேரை இரண்டு யானைச் சிற்பங்கள் இழுப்பதுபோல், சிற்பக்கலை நுணுக்கத்தோடு வடிவமைக்கப்பட்டுள்ளன.

தேர்ச் சக்கரத்திற்கும், திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள பளிங்கு பீடத்திற்கும் இடையில் உள்ள தேரின் மத்திய பாகத்தில் 133 குறட்பாக்களுக்குப் பொருள்விளக்கம் அளிக்கும் அழகிய சிற்பங்கள் உயிரோவியங்களாய்ச் செதுக்கப்பட்டுள்ளன.

*வள்ளுவர் கோட்டம் திறக்கப்பட்ட பிறகு 27.1.1989ல் கலைஞர் அவர்கள் மீண்டும் முதலமைச்சராகப் பதவியேற்க வருகை புரிந்ததை நினைவுகூரும் வகையில், கீழ்க்கண்ட வாசகங்களுடன் நினைவுக் கல் ஒன்று இங்கு நிறுவப் பட்டுள்ளது:*

**வள்ளுவர் கோட்டம்**

தமிழ்நாடு முதலமைச்சர்
டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால்
வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டது.



# நவீன கருத்தரிப்பு முறை

- டாக்டர் ஜமுனா சீனிவாசன்

*நவீனமுறைக் கருத்தரிப்பிற்கு அதிகம் செலவாகும் என்பது மட்டுமல்ல; அதன்மூலம் சில விபரீதங்களும் ஏற்படக்கூடும் என்று விவரிக்கிறது இந்தக் கட்டுரை:*

இயற்கை நிலை மாறாமல், இயற்கையிலேயே கருத்தரிப்பு; இயல்பான வழிமுறையில் குழந்தையை ஈன்றெடுத்த தாயும் குழந்தையும் மன உடல் ரீதி பாதிப்புகளின்றி நீண்டகாலம் ஆரோக்கியத்துடன் வாழ ஒரே மருத்துவ முறை மூலிகை மருத்துவம் எனப்படும் சித்த மருத்துவம்தான்.

எனினும் கருத்தரிக்கச் செய்ய அலோபதி மருத்துவத்தில் பல்வேறு புதிய கருத்தரிப்பு முறைகளைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தி வருகிறார்கள். இன்று உலகெங்கும் இம்முறைகளுக்கு அதிக அளவில் விளம்பரமும் வரவேற்பும் உள்ளது.

இயற்கை முறையில் கருத்தரிக்க வாய்ப்பில்லை என்பதை ஒரு முறைக்கு இருமுறை பரீட்சித்துப் பார்த்து உறுதி செய்து கொண்டவர்கள் வேண்டுமானால், நவீன கருத்தரிப்பு முறைகளின் உதவியை நாடலாம்.

மருத்துவ வசதிகள், வெற்றி வாய்ப்பின் சதவீதம், செலவாகும் தொகை போன்றவற்றை முழுமையாகவும் தெளிவாகவும் தெரிந்துகொண்ட பின்பே 'எதைத் தின்றால் பித்தம் தெளியும்' என்ற மனநிலையிலுள்ள மழலை வேண்டி நிற்கும் தம்பதியர் முயற்சிக்க வேண்டும்.

அலோபதி முறையில் இன்று நடைமுறையில் இருக்கும் கருத்தரிப்பு முறைகளில் சிலவற்றை நீங்கள் அறிய இங்கு தெரிவிப்பதில் தவறில்லை என்று கருதுகிறேன்.

ஒரு பெண்ணின் சினைப்பையிலிருந்து வெளியே எடுக்கப்பட்ட கருமுட்டையுடன் ஆணின் உயிரணுவைப் பரிசோதனைக் கூடத்தில் ஒரு கிண்ணத்தில் சேர்த்து, கருத்தரிப்பு நிகழ்ச்சி ஒன்றிணைந்த கருமுட்டையையும் உயிரணுவையும் பெண்ணின் கருப்பைக்குள் வைக்கும் சோதனைக்குழாய் முறை எனப்படும் (In-Vitro Fertilliaction VF)முறை பலமுறைகளில் ஒன்றாகும். இம்முறையில் உண்மையில் சோதனைக்குழாய் பயன்படுத்தப்படுவதில்லை. மேலும் குழந்தையும் சோதனைக் குழாய்க்குள் உருவாவதில்லை.


கணவனின் இனப்பெருக்க உறுப்புகள் கருத்தரிக்கத் தேவையான தகுதியுடனிருக்கும். ஆனால், மனைவியின் கருப்பையானது கருவைச் சுமந்து வளர்க்கும் அளவிற்கு ஆற்றல் பெற்றதாய் இருக்காது. இத்தகைய நிலையில் வேறொரு பெண்-அதாவது இவளின் கணவனுக்கு எவ்வகையிலும் தொடர்பில்லாத ஒரு பெண் பத்து மாதங்கள் அக்கருவை வளர்த்துக் குழந்தையாகப் பெற்றுத்தரும் மாற்றுத் தாய்மை முறை.

உடலுறவு கொள்ள இயலா அளவிற்குக் கணவனுக்கு ஆண்மைக்குறைவு தொல்லை இருக்கும். இவரின் விந்தைச் செயற்கை முறையில் சேகரித்துத் தனியான ஊசியின் மூலமாக மனைவியின் பிறப்புறுப்பு வழியாகவோ அல்லது கருப்பையினுள் நேரடியாகவோ சினைமுட்டை வெளிப்படும் நேரத்தில் சேர்த்து கருத்தரிக்கச் செய்யும். (Artificial Insemination Husband Semen) முறை.

மனைவியின் கருக்குழாய்கள் மட்டும் நிரந்தரமாகப் பாதிக்கப்பட்டிருந்து மற்றவை வளமாக இருந்தால், கணவனின் உயிரணுக்களைச் சேகரித்து, பின் மனைவியின் கருப்பையை ஹார்மோன்களால் தூண்டச் செய்து, கருமுட்டைகளை எடுத்து ஆய்வுக்கூடத்தில் சிறிய கண்ணாடித் தட்டில் ஒரு கருமுட்டையுடன் நிறைய உயிரணுக்களைக் கலந்து கருவுறச் செய்வர். பின்னர் இக்கருவை மனைவியின் கருப்பைக்குள் செலுத்தி இயற்கையாக வளரவிடும் 'ஆய்வுக்கூடத்தில்' கருவுறச் செய்து, கருவை உடலுக்கு மாற்றும் (Invitro Fertilization and Embryo Transfer) முறை.

கணவனின் விதைகள் இரண்டும் வளமான உயிரணுக்களைக் கொண்டிருக்கும். ஆனால் இவற்றைக் கொண்டு செல்லும் விந்துக் குழாய்கள் பிறவிலேயே நிரந்தரமாக அடைப்பட்டிருக்கும். மனைவியின் இனப்பெருக்க உறுப்புகள் யாவும் தகுதியுடையனவாய் இருக்கும். இவர்களுக்கான புதிய முறை நுண்கருவூட்டல் (Micro-manipulation) முறை எனப்படும்.

மனைவியின் இனப்பெருக்க உறுப்புகள் யாவும் தகுதியுடையவனாய் இருக்கும். ஆனால் கணவனின் விந்தில் முழுமையாக உயிரணுக்களே இருக்காது.



மற்றவர்களிடமிருந்தோ விந்து வங்கிகளின் மூலமாகவோ உயிரணுக்களைப் பெற்று, செயற்கை முறையில் கருப்பையில் இடுவதன் மூலம் கருத்தரிக்கச் செய்யும் - கொடையாளிகளிடமிருந்து உயிரணுக்களைச் செயற்கையாக வித்திடும் முறை (Artificial insemination DONN - AID) முறை.

கருமுட்டையைச் சோதனைக் குழாயில் வைத்துப் பாதுகாப்புப் பெட்டகத்தில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் வைத்திருந்தால் சிறிய கருவாக மாறும். அவ்விதம் மாறிய பிறகு கருப்பைக்குள் சிறப்புக் குழாய்களைக் கொண்டு செலுத்திக் கருஉண்டாக்கும் கருமுட்டைப் பரிமாற்ற முறை (Embryo Transfer). சில சமயங்களில் கருக்குழாய்களிலும் செலுத்தப்படும்.

இரண்டு கருக்குழாய்களும் ஆரோக்கியமாக இருக்கும். இவற்றிலிருந்து கருமுட்டைகள் உறிஞ்சி எடுக்கப்பட்டு உடனே பதப்படுத்தப்பட்ட ஆண் உயிரணுக்களுடன் சேர்க்கப்பட்டு 'லேப்ரோஸ்கோப்' முறைப்படி கருக்குழாயில் செலுத்தப்படும். பின்னர், கருத்தரித்தல் கருக்குழாயிலேயே நடக்க விடப்படும் Gramate-Invitro Fullopian Transfer eridt எனப்படும் முறை.



இளம் வயதுப் பெண்களிடமிருந்து 45, 50 பெண்கள் கூட கருமுட்டையைத் தானாகப் பெற்றுத் தாய்மை அடைய முயற்சிக்கும் சினைமுட்டை வழங்கும் முறை (Oocyte Donation). நவீன தொழில் நுணுக்க முறைகளான இவை கருத்தரிக்கச் செய்வதில் பலவகையான சாதனைகளைப் புரிந்தாலும் இத்தகைய புதிய முறைகள் மிகமிகக் குறைந்த வெற்றி வாய்ப்பையே அளிக்கின்றன.

இத்தகைய நவீன மருத்துவ முறைகளைக் கையாளும் மருத்துவமனைகளில் சிகிச்சை மேற்கொண்டு ஆரோக்கியமான குழந்தையைப் பெற்று நலத்துடன் வீடு திரும்பும் தாய்மார்களின் வெற்றி சதவீதம் பத்துக்கும் குறைவுதான்.

குறிப்பாகச் சோதனைக் குழாய்முறை உத்தி கையாளப்பட்ட பின்னரும்கூட, உலக அளவில் 1978-ஆம் ஆண்டிலிருந்து 1995-ம் ஆண்டு வரை வெற்றி சதவீதம் 12-லிருந்து 15 சதவீதமே உயர்ந்துள்ளது. அதாவது 20 சதவீத உழைப்பில் 30 சதவீத வெற்றி வாய்ப்பே அதிகரித்துள்ளது. எனவே, இம்முறை எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை.

உயிரணுக்களைப் பிரிப்பது, கருமுட்டையை உடலை விட்டு வெளியே எடுப்பது, சேமிப்பது, மாற்றுவது போன்றவற்றில் செயற்கையான குறுக்கீடுகள் இருப்பதால் இத்தகைய நவீன முறைகளின் மூலம் பிறவிக் குறைபாடுகள் ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளன.

அலோபதி முறை சிகிச்சையில் ஹார்மோன் மருந்துகள் கொடுத்து, சினைப்பையைத் தூண்டி, கருமுட்டையை உற்பத்தி செய்யும் முறை உள்ளது. ஹார்மோன் மருந்தை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் அளிக்கின்ற நிலை ஏற்படும்பொழுது சினைப்பையில் வீக்கம் உண்டாகும். பின்னர் அதில் சிறுநீர் கொப்புளங்கள் (Cyst) தோன்றும். இது சினைப்பை பாதிப்பின் தொடக்க நிலையாகும். அதற்கு மேலும் ஹார்மோன் மருந்து கொடுத்து வந்தால் சினைப்பை செயலிழக்கும். இதனால் கருமுட்டை உருவாக்கமே நடைபெறாமல் போய்விடும்.

பல ஆண்டுகளாகியும் குழந்தைப் பேறு இல்லாத பெண்களுக்குப் பலவித மருத்துவப் பரிசோதனைகளுக்குப் பிறகு தேவைப்பட்டால் கருத்தரிப்பதற்கு உதவும் மருந்துகளை (Fertility Drugs) கொடுப்பதுண்டு. இம்மருந்துகள் சில சமயங்களில் பெண்ணின் உடல் சினை முட்டைகளை உருவாக்கும் சினைப்பைகளில் ஒருவகைப் புற்று நோயை உருவாக்கக்கூடும்.

குறிப்பாக, இவ்வகை மருந்துகளைத் தொடர்ந்து சாப்பிடும் கருத்தரியாப் பெண்களுக்கு, இத்தகைய புற்று நோய் உண்டாவதற்கான சாத்தியக் கூறுகள் சற்று அதிகம் என்கிறார் நியூயார்க் மருத்துவர் ஹெரால்ட் இ பாக்ஸ் (Dr.Herold E-Fox) இம்மருந்துகளைச் சாப்பிடும் பெண்கள் முறையான மருத்துவப் பரிசோதனைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதோடு ஆண்டுக்கொருமுறை தகுந்த பரிசோதனையையும் மேற்கொள்ள வேண்டும் என்கிறார் இவர்.

'டி அண்டு சி' மூலம் அடிக்கடி கருப்பையைச் சுத்தம் செய்யும் வழக்கம் அலோபதி முறையில் உண்டு. இதனால் கருப்பையின் உட்பகுதியில் ஒட்டடை போல் மெல்லிய அளவில் ஜவ்வுகள் பரவி கருத்தரிப்பதற்குத் தடை ஏற்படுத்தும். இந்நிலையில் எந்த நவீன முறையில் சிகிச்சை அளித்தாலும் வெற்றி வாய்ப்புக் குறைவு.

கருமுட்டை வெளிப்படும் நாளை அறிய, மாதவிலக்கு ஏற்பட்ட 10 நாட்களுக்குப் பிறகு நாள்தோறும் 'ஸ்கேன்' மூலம் பரிசோதனை செய்வதும் அலோபதி முறையில் உண்டு. Physician Desk Reference என்ற நூலில் மருத்துவப் பரிசோதனைகளில் பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்களில் பல இடையூறுகள் நேர்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இது போன்ற பரிசோதனைகள் செயற்கைச் சூழலை உருவாக்கி, பின்விளைவுகளை ஏற்படுத்திவிடுகின்றன. உடலில் வெப்பம், குமட்டல், வாந்தி போன்றவை ஏற்படும்.

மேலும் நாட்பட்ட நிலையில் அரிப்பு வாய் உலர்தல், குளிர் காய்ச்சல் சுவாசிப்பதில் சிரமம் போன்றவை தோன்றி இறுதியில் இருதயச் செயல்பாட்டைப் பாதித்து உயிக்கே ஆபத்தை ஏற்படுத்தலாம். இவை மட்டுமன்றி சில இரசாயனங்களில் சிறுநீரகப் பாதிப்பு, அழற்சி, இரத்தக் கசிவு போன்ற விபரீதங்களும் நேர வாய்ப்புள்ளது" - என்று விளக்குகிறது இந்நூல்.

இந்த வகை மருத்துவ முறைகளால் எல்லாப் பெண்களுமே ஒரே முயற்சியில் கருத்தரிக்க முடியும் என்று எந்த மருத்துவரும் உறுதி கூற இயலாது.

சில பெண்களுக்குப் பலமுறை இந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டியதிருக்கும். ஒருவேளை கருவுற்றாலும், சில சமயங்களில் தரித்த கரு சிதையவும் கூடும்.

இந்த முறைகளை மேற்கொள்வதால் ஏற்படும் செலவைக் கணக்கிடும் பொழுது எல்லோருக்கும் சாத்தியப்படாதவை. இவ்வகை நவீன மருத்துவத்தைப் பெரும் பணக்காரர்களால் மட்டுமே மேற்கொள்ள முடியும். நம் நாட்டின் சராசரிக்கும் மேற்பட்ட நடுத்தர வர்க்கத்தினருக்கோ சற்று அதற்கும் மேற்பட்ட நிலையினருக்கோ கூட இந்த வகை முறைகள் கானல்நீர்தான். மேலும் நம் நாட்டின் கலாச்சார முறைகளில் ஒன்றிவிட்ட பெண்கள், இச்சிகிச்சையின் சிலவகை மாற்றங்களுக்குத் தங்களை ஆட்படுத்திக் கொள்ள விரும்பமாட்டார்கள்.

இயற்கையோடு ஒன்றிய முறையில் பிறக்கும் குழந்தைகளுக்குப் பெற்றோர் என்பது-ஒரு தந்தை, ஒரு தாய் என்ற இருவரைத்தான் குறிக்கும். அதாவது குழந்தையைப் பெற உறுதுணையாக இருந்த தந்தை, அந்தக் குழந்தையைப் பெற்றெடுத்த தாய்.

ஆனால், சில நவீன மருத்துவ முறைகளால் பிறக்கும் குழந்தைகளுக்குப் பெற்றோர் என்பது மரபுத் தந்தை. வளர்ப்புத் தாய் என்ற நால்வரைக் கொண்ட ஒரு அணியாகக் கருதவேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது.

அமெரிக்காவில், விந்து வங்கி மூலம் பிறந்தவன் 'கிரேவாட்' என்பவன். இவன் தனது 15-வது வயதில் தன் உண்மையான தந்தையைக் கண்டுபிடித்துவிட்டான். அவர் ஒரு டாக்டர். கிரேவாட்டின் வகுப்பில் படிக்கும் அவரது நான்கு குழந்தைகளும் தன் சகோதரர்கள் என்பதையும் கிரேவாட் கண்டுபிடித்துவிட்டான். இருப்பினும் கிரேவாட்டை உண்மையான தந்தை திரும்பிக்கூட பார்க்காமல் வெறுத்தார். இதனால் பத்து மாதம் சுமந்து பெற்றவரைக்கூட விரும்பாமல் அவன், பின்னர் போதை மருந்துகளுக்குத் தன்னை அடிமையாக்கிக் கொண்டானாம். நவீன கருத்தரிப்பு முறை ஏற்படுத்திவரும் மற்றொரு விபரீதம் இது.

ஆகவே, அதிக அளவு செலவு செய்ய வேண்டிய பின் விளைவுகள் கொண்ட, இந்தியக் கலாச்சாரத்திற்கு ஒத்துவராத இவ்வகைக் கருத்தரிப்பு முறைகளைக் கையாளப் பலர் விரும்புவதில்லை; இதனாலேயே இந்த முறையானது நம் நாட்டில் அத்தனை வேகமாக வளர்ச்சி பெறவில்லை.

---

# இந்தியப் பெண்கள்

"ஒவ்வொரு பெண்ணும் தன் கணவனைத் தவிர பிற ஆண்களைத் தன் மக்களைப் போலக் கருத வேண்டும். ஒவ்வொரு ஆணும், தன் மனைவியைத் தவிர மற்ற பெண்களைத் தன் அன்னையை போலவே கருதவேண்டும். நீங்கள் பெண்களிடம் காட்டும் மரியாதை என்கிறீர்களே, அதைக் கண்டு நான் மிகவும் வெறுப்படைகிறேன். பால் வேற்றுமையை மறந்து மனிதத்தன்மை என்னும் அடிப்படை மீது இருபாலரும் சந்திக்கக் கற்றுக்கொள்ளும்போது இந்த நாட்டுப் பெண்கள் உண்மையாக முன்னேறுவார்கள். அதுவரை அவர்கள் விளையாட்டுப் பொருள்களாகவே இருப்பார்கள். இவை அனைத்தும்தான் விவாகரத்திற்குக் காரணமாகின்றன. இங்கு ஆண்கள் குனிந்து பெண்களுக்கு நாற்காலி அளித்து உபசரிக்கின்றனர்; ஆனால் அடுத்த கணமே அவர்களின் அழகைப் புகழ்கின்றனர்; 'அப்பப்பா உன் கண்கள் தாம் எவ்வளவு அழகாக இருக்கின்றன! இதற்கு அவர்களுக்கு உரிமை ஏது? ஆணுக்கு அவ்வளவு தைரியமா? உங்கள் பெண்கள் இதை அனுமதிக்கலாமா? இவை எல்லாம் மனிதனது கீழ்த்தரமான குணத்தையே வளர்க்கின்றன. உயர்ந்த நோக்கங்கள் அல்ல.

ஆண், பெண் எனும் எண்ணத்தை விட்டு, நாம் மனிதர்கள், அன்பு காட்டவும் உதவி புரியவுமே பிறந்திருக்கிறோம் என்று நினைக்க வேண்டும். ஒரு வாலிபனும், ஒரு பெண்ணும் தனிமிடத்தில் இருக்க நேர்ந்தால் அவன் அவளது அழகை வர்ணிக்கின்றான். அவன் மணமாகுமுன் இருநூறு பெண்களின் அழகையாவது புகழ்ந்திருப்பான். சீ! நான் இல்லறத்தானாக இருந்திருந்தால் மேற்கூறிய எவையும் இல்லாமலே அன்பு செலுத்துதற்குரிய ஒருத்தியைத் தேர்ந்தெடுத்திருப்பேன்!



"நான் பாரத நாட்டில் இருக்கும்போது இவற்றை எல்லாம் வெளியிலிருந்தே பார்த்தேன். இவையெல்லாம் சரிதான். வெறும் வேடிக்கையே என்று கூறப்பெற்றதை நம்பினேன். அதற்குப் பின் பயணம் செய்து நேரில் பார்த்தபோது இவையெல்லாம் தவறு என்பதை அறிந்து கொண்டேன். மேலை நாட்டில் வாழும் நீங்கள் கண்மூடித்தனமாக இதை நன்மை என்கிறீர்கள். மேலை நாட்டினரின் குற்றம் என்னவென்றால், வாலிபப் பருவத்திலேயே முட்டாள்தனமும், சலன புத்தியும், நிறைந்த செல்வமும் கொண்டிருப்பதே. இவற்றுள் ஒன்று மட்டும் இருந்தாலே எவ்வளவு தீமை விளையும்! இந்த நிலையில் மூன்றோ, நான்கோ சேருமானால் எச்சரிக்கை!

**- சுவாமி விவேகானந்தர்**

- 'இந்தியப் பெண்மணிகள்' புத்தகத்திலிருந்து என்.ஆர்.

# இந்திய ஆட்சிப் பணியில் தமிழர் பங்கு

## "மத்திய அரசு தேர்வு-தமிழக மாணவர்கள் சாதனை!"

- டாக்டர் வை. செல்வமுத்து

உறங்கிக் கிடந்த சிங்கம், சீறி எழுந்து, மூரி, நிமிர்ந்து, முழங்கிப் புறப்பட்டாற் போல் பல ஆண்டுகளாக ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளில் தேக்க நிலையில் கிடந்த தமிழக மாணவர், இந்த ஆண்டு வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக, அதிக எண்ணிக்கையில் தேர்ச்சி. பெற்றதைப் பாராட்டி பத்திரிக்கைகளில் வந்த செய்தித் தலைப்புகளே மேலே கண்டவை.

நிலவில், முதல் மனிதன் திரு.ஆர்ம்ஸ்டாங் அடி வைத்தபோது, "இது மனிதனின் சிறிய பாதச் சுவடு. ஆனால் மனித சமுதாயத்தின் மகத்தான சாதனை" என்றார்.

1971ஆம் ஆண்டு ஜுன் திங்களில் பிறப்படுத்தப்பட்ட மாணவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., தேர்வு எழுதப்பயிற்சி நிலையத்தைத் தொடங்கியது, முதல்வர் கலைஞரின் இலட்சியப் பயணத்தில் சிறிய பாதச்சுவடு. ஆனால் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்குக் கிடைத்த மகத்தான வாய்ப்பு. கருவியால் காலம் அறிந்து செயல்படும் கலைஞர் அரசு, 1991-ல் திரு.வி.பி.சிங் அரசுக்கு உறுதுணையாய்-உந்து கோலாய் நின்று, மண்டல் குழுவின் பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்கச் செய்தமையால், அவ்வாய்ப்புகள் வெற்றிக் கனிகளாய்ப் பரிமளித்தன. இதன் விளைவே, பத்திரிகைகளில் வந்தது போல் இவ்வாண்டு நேர்முகத் தேர்வுக்கு அனுப்பப்பட்ட 28 பேர்களில் 21 பேர் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., மற்றும் மத்திய அரசுப் பணிகளுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என்ற மகத்தான சாதனையாகும். சிவில் சர்வீஸஸ் தேர்வுகளில் தாழ்ந்து நின்ற தமிழகம் சற்றே தலைநிமிர்ந்துள்ளது.

### ஏற்றுமதி செய்த தமிழகம்

ஒரு காலத்தில் இந்தியா முழுமைக்கும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகளை 'ஏற்றுமதி' செய்த தமிழகம் இன்று 'இறக்குமதி' செய்யும் நிலைக்கு என்ன காரணம்? ஆற்றல் குறைவா? இல்லை, இல்லை!

ஆற்றுப்படுத்தல் (Guidance) குறைந்துவிட்டது. அச்சமும் அறியாமையும் ஆட்கொண்டு விட்டன!



ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., என்பது மேட்டுக் குடியினர், நகரவாசிகள், ஆங்கிலப் புலமை மிக்கவர், அறிவு ஜீவிகள் மட்டுமே அடையக் கூடிய பதவிகள்; மற்றவர்கள்-குறிப்பாகக் கிராமத்தில் படித்தவர்கள்-சரளமாக ஆங்கிலம் பேச இயலாதவர்கள்-கனவிலும் காண இயலாதவை - என்பது நம்மில் பலர் - கற்றவர் உட்பட கொண்டுள்ள தவறான கணிப்பாகும். இம் மாயத்திரையை இரும்புத்திரை என எண்ணி, மருண்டவர், மயங்கியவர், தயங்கியவர், தளர்ந்தவர், தடம் புரண்டவர் ஏராளம்! ஏராளம்!! இத்தாழ்வு மனப்பான்மையே, நமது பின்னடைவுக்கு முதன்மையான காரணமாகும். இத்துடன் புதிதாக நடுத்தர மக்களிடையே பரவிவரும் 'டாக்டராக வேண்டும், இன்ஜினியர் ஆக வேண்டும், வெளிநாடு செல்லவேண்டும்' என்கிற மோகமும் துணைக் காரணமாகும்.

### நம்மாலும் முடியும்

ஐ.ஏ.எஸ். அதிகாரியின் பணிகளுக்கு ஆங்கிலப் புலமை தேவையில்லை. ஆட்சி நடத்திடத் தெளிவான சிந்தனை, கூர்ந்த அறிவு, ஆய்வுத்திறன், மனித நேயம், சமுதாயப் பார்வை போன்றவைகளே இன்றியமையாதவை. இதற்கும் மொழிப் புலமைக்கும் சம்பந்தமில்லை. இதற்கும் நகரக் கல்விக்கும் தொடர்பில்லை. 'இத்தேர்வுகளைத் தமிழிலும் எழுதலாம். தமிழ் இலக்கியத்தை ஒரு விருப்பப் பாடமாகவும் எடுக்கலாம்' என்ற நிலை வந்த பின்னரே 'நம்மாலும் முடியும்' என்ற நம்பிக்கை நம்மில் பலருக்குத் துளிர்விட்டது. மண்டல்குழுவின் பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்றுக்கொண்டபின், நமது மாணவர்களின் நம்பிக்கையில் புதிய வலிவு ஏற்பட்டது. தமிழுக்கும் தமிழ் மாணவர் நலனுக்கும் ஏற்றந்தரும் இவ் வாய்ப்புகளை, எமது பயிற்சி நிலையம் பயன்படுத்தி, மாணவர்களுக்கு விழிப்புணர்வும் ஊக்கமும் உறுதுணையும் புரிந்த தன் விளைவாக 1994-1995 ஆகிய இரு ஆண்டுகளில் மட்டும் இங்கு பயிற்சி பெற்ற மாணவர்களுள் 41 பேர் தேர்வுபெற்றனர். அவருள் 8



பேர் ஐ.ஏ.எஸ்., 8 பேர் ஐ.பி.எஸ்., ஒருவர் ஐ.எஃப்.எஸ். பதவிகள் ஏற்றனர்.

ஐ.ஏ.எஸ். என்பது ஒரு பட்டம் அல்ல; ஒரு பணி-இந்திய ஆட்சிப்பணி என்பதன் சுருக்கமாகும். எனவே பட்டத் தேர்வுகளைப் போல் இதில் பாஸ், பெயில் என்ற பாகுபாடு இல்லை. இது ஒரு போட்டித்தேர்வு "வென்றால் பரிசு, அன்றேல் தரிசு" என்ற நிலை. எனவே, "வெற்றி பெற்றே தீருவேன்" என்ற முனைப்புடன், இலட்சிய வெறியுடன் படித்திட வேண்டும். எனினும் தோல்வி கண்டு துவளவேண்டியதில்லை. 'கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது' என்ற தன்னம்பிக்கையுடன் தொடர்ந்து போராட வேண்டும். வெற்றி பெற்ற பலர், முதல் முயற்சியிலேயே வென்றவர் அல்லர் என்பதை உணர்ந்தால், தோல்வியையும், வெற்றியின் படிகளாக மாற்றிக் காட்டலாம்.

**"ஐ.ஏ.எஸ்/ஐ.பி.எஸ். தேர்வு வெற்றிகள் தமிழ் மொழிக்குக் கிட்டிய பெரும் பெருமை!"**

## பணிகள் ஒதுக்கீடு

யு.பி.எஸ்.ஸி. எனப்படும் மத்திய தேர்வாணைக்குழு ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு தேர்வுகளை நடத்துகிறது. அவற்றில் சிவில் சர்வீஸஸ் தேர்வு என்பதே உயர்மட்டதேர்வாகும். சிவில் சர்வீஸஸ் தேர்வு ஐ.ஏ.எஸ். என்ற ஒரு பணிக்கு மட்டுமே உரிய தேர்வு அல்ல; இதில் வெற்றி பெற்றவர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற இந்தியப் பணிகள் மற்றும் மத்திய அரசுப் பணிகள் ஆகிய 25க்கும் மேற்பட்ட பணிகளில் அமரத் தகுதி பெற்றவர்கள் ஆவர். வெற்றி பெற்றோரின் மதிப்பெண், சமூகநிலை, அவரது விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் பணிகள் ஒதுக்கப்படுகின்றன.

இத்தேர்வுகள் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட காலங்களில்:

பூர்வாங்கத் தேர்வு (**Preliminary Exam**)

முதன்மைத்தேர்வு(**Main Exam**)

நேர்முகத் தேர்வு (**Interview**)

- என மூன்று கட்டமாக நடைபெறுகின்றன.

தேர்வுக்கான விளம்பரம் பொதுவாக டிசம்பர் மாதம் வெளியிடப்படுகிறது. Employment News (வேலை வாய்ப்புச் செய்திகள்) என்ற மத்திய அரசின் வெளியீடு, தேர்வு தொடர்பான எல்லா விவரங்களையும், பாடத்திட்டம் உட்பட வெளியிடும்.

பூர்வாங்கத் தேர்வு ஜூன் முதல் வாரத்தில் நடைபெறும். பூர்வாங்கத் தேர்வில் வெற்றி பெற்ற அனைவரும் முதன்மைத் தேர்வினை நவம்பர் முதல் வாரத்தில் எழுதுவர். இரண்டிலும் வெற்றி பெற்றவர்கள் நேர்முகத்தேர்வுக்கு ஏப்ரல் மாதம் அழைக்கப்படுவர். இறுதிப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டோர் பட்டியல் அடுத்த ஜூன் முதல் வாரம் வெளியாகும். எனவே, தேர்வின் மூன்று கட்டங்களும் நிறைவு பெற 1½ ஆண்டு முயற்சி தேவைப்படுகிறது. ஐ.ஏ.எஸ். தேர்வு என்பது 100 மீட்டர் ஓட்டம் போல அல்ல, மராத்தான் ஓட்டத்தில் வெற்றி பெறுவது போன்றது. நீண்டகால உழைப்பும், விடமுயற்சியும் தேவை.

தமிழக அரசின், பிற்பட்ட நலத்துறையால் நடத்தப்படும் தனிப்பயிற்சி நிலையம், 25 ஆண்டுகளாக சென்னையில் இயங்கிவருகிறது. மதுரையில், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திலும் பூர்வாங்கத் தேர்வு எழுதப் பயிற்சி நிலையம் செயல்படுகிறது.

சென்னை, தனிப்பயிற்சி நிலையத்தில், பூர்வாங்கத்தேர்வு, முதன்மைத் தேர்வு, நேர்முகத்தேர்வு ஆகிய மூன்று தேர்வுகளுக்கும் 50 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. படிப்புக் கட்டணம் ஏதுமில்லை. மாணவர் தங்க விடுதி வசதியுள்ளது. நூலக வசதியுள்ளது. பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.24,000-க்குள் உள்ள மாணவர்களுக்கு 1996 ஏப்ரல் முதல் உணவு மானியம் மாதம் ரூ.250லிருந்து 500 ரூபாயாகத் தமிழக அரசு வழங்கிவருகிறது.

## தகுதியும், வயதும்

பயிற்சியில் சேருவதற்கான கல்வித்தகுதி:-

1. பட்டப்படிப்பில் 80% மதிப்பெண்களுக்குக் குறையாமல் இருப்பது, அல்லது-
2. எம்.ஏ.,எம்.காம்., தேர்வில் 55% மதிப் பெண்களுக்குக் குறையாமலிருப்பது, அல்லது
3. எம்.எஸ்.ஸி.தேர்வில் 65 மதிப்பெண்களுக்குக் குறையாமலிருப்பது, அல்லது
4. பி.இ., எம்.பி.பி.எஸ்., பி.வி.எஸ்.ஸி., பி.எல்., போன்ற தொழில் பட்டப்படிப்பில் தேர்ச்சி.


## "தமிழ்நாடு பிற்பட்டோர் பயிற்சி நிலையத்தில் படித்த 21 பேர் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பதவிகளுக்குத் தேர்வு!"

வயது வரம்பு:

21 வயது அடைந்தவராகவும், 31 வயது பூர்த்தியடையாதவராகவும் இருத்தல் வேண்டும்.

எடுத்த கருத்தினைத் தெளிவாக வெளியிடத் தாய்மொழியைத் தவிர சிறந்த சாதனம் இல்லை; ஆதலால், தமிழ்வழி எழுதவும், தமிழ் இலக்கியத்தை விருப்பப் பாடமாகவும் எடுக்க ஊக்கம் அளிக்கப்படுகிறது.

கடந்த 25 ஆண்டுகளில் இப்பயிற்சி நிலையத்தில் பயின்ற மாணவர்களில் 78 நபர்கள் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., மற்றும் இதர மத்திய அரசுப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அதில் பலர் தமிழ்வழித் தேர்வு எழுதியவர்களாவர்; தமிழ் இலக்கியத்தையும் ஒரு விருப்பப்பாடமாகக் கொண்டவர்களுமாவர் என்பது குறிப்பிடத்தக்கது.



மண்டல் குழுவின் பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து, பிற்படுத்தப்பட்ட இன மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் தேர்ச்சி பெற்றுள்ளனர். தற்பொழுது இறுதிநிலையில் மட்டும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இட ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது. இதற்குப் பதிலாக, பூர்வாங்கத் தேர்வு, முதன்மைத் தேர்வு ஆகிய கட்டத்திலும் 27 இட ஒதுக்கீடு செயல்படுத்தப் படவேண்டும் என்று மத்திய அரசுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார். இக்கோரிக்கை ஏற்கப்படின், பிற்படுத்தப்பட்ட சமுதாய மாணவர்கள் பெரும் எண்ணிக்கையில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., மற்றும் இதர மத்திய அரசுப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட வழிவகுக்கும். இவ்வரிய வாய்ப்பைத் தமிழக மாணவர் பயன்படுத்திட வேண்டும். தமிழகத்தின் பெருமையை மீண்டும் நிலைநிறுத்த வேண்டும் என வேண்டுகிறேன்.

### வெற்றி உறுதி

தன்னம்பிக்கை, தளரா முயற்சி, ஒருமித்த சிந்தனை, ஓயா உழைப்பு-இவை எந்தத் தடைக்கல்லையும் தகர்த்திட வல்லவை. வள்ளுவர் கூறியது போல்-

"கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்"

- படின் வெற்றி உறுதி.

மேலும் இந்திய ஆட்சிப் பணித்தேர்வு பற்றிய தெளிவான விவரம் வேண்டுவோர் அணுக வேண்டிய முகவரி:


**டாக்டர் வை.செல்வமுத்து,**
எம்.பில்., பி.எச்டி.,
முதல்வர், தனிப்பயிற்சி நிலையம் (பி.வ)
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
மாறுதல் குடியிருப்பு,
இரண்டாவது அவென்யு,
அண்ணாநகர் (மே)
சென்னை-600 040.
தொலைபேசி : 6211475


---

## நானும் படிச்சாச்சி...

நான்
சிலேட்டுல
பெயரெழுதிப் படிக்க
ஆரம்பிச்ச நேரம்தான்
எனக்கு தம்பி பொறந்தான் !
இப்போம்
கொஞ்ச வருசமா
என் சிலேட்டுல
அவன் பெயரெழுத
ஆரம்பிச்சுட்டான்... !
இப்போ...
என் தம்பி
மூணாம் வகுப்பு
படிக்கிறான் !
நானும்
அடுப்ப பத்தவச்சி
படிச்சிட்டேன் !

- விநாயக மூர்த்தி



# கழிவுகள் ஒழிவதில்லை

**சோ. தர்மன்**

விஞ்ஞானி நாயக்கர் என்றவுடன் ஏதோ கல்பாக்கம் அணுமின்நிலையத்திலோ, தும்பா ராக்கெட் நிலையத்திலோ அல்லது பாபா அணுசக்தி நிலையத்திலோ வேலை பார்க்கிற பெரிய விஞ்ஞானி என்று யாரும் நினைத்துக் கொள்ளவேண்டாம். தார்ப்பாச்சலும், தலப்பாகையுமாய் கையில் தூரோடு பிடுங்கிய அஞ்சாறு நெல்பயிர்களுடன் வரப்பில் கால்மேல் கால்வைத்து அதோ அய்யங்கோயில் புளிய மரத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிற குருசாமி நாயக்கர் என்ற கரிசல்காட்டு சம்சாரியின் பட்டப்பெயர் தான் விஞ்ஞானி நாயக்கர்.

கண்மாய்க் கரை அய்யன்கோயில் புளிய மரத்தினடியில் அஞ்சாறு பேர் உட்கார்ந்திருந்தார்கள். ஏழெட்டுத் தொட்டில்களும் தொங்கின. வரிசைப்பனைகளின் நிழல்கள் கிழக்காமல் நீண்டு நிறைகாண்மாயின் தண்ணீருக்குள் பாம்பு நெளிவாய் அலையோடு விளையாடி படங்காட்டின. கலைத்துப்போட்ட சீட்டுக்கட்டுகளாய் பரந்து கிடக்கும் வயல்வெளி.

கரைவாகரையில் வந்து நின்றவர் மேற்காமல் நீண்டு செல்லும் வாய்க்காலில் சகதிகளைக் கழுவிவிட்டுக் கரையேறினார். உட்கார்ந்திருந்த ஒவ்வொருவரையும் உற்றுப் பார்த்தார். ரெங்கசாமி நாயக்கர் யாரையும் கேலி பண்ணுவதில் பெரிய கில்லாடி. ஆனால் அவருடைய பாச்சா பலிக்காமல் தோற்றுப் போவதெல்லாம் விஞ்ஞானி நாயக்கரிடம்தான். யார் என்ன சொன்னாலும் தன் சிறிய கண்களை வைத்து உற்றுப் பார்த்து உதட்டைக் கூப்புவாரே ஒழிய சாமானியமாக வாய் திறக்கமாட்டார். அபூர்வமாய் சிலநேரம் தலையாட்டிக் கொண்டே புளிச்சி நார் தாடியையும் கம்பரக்கத்தி மீசையையும் தடவிக் கொள்வதோடு சரி.

"என்ன மாமோவ்! ஆராய்ச்சியில் என்னத்தம் கண்டுபிடிச்சீரு ?" அவர் கைகளில் வைத்திருந்த தூரோடு பிடுங்கிய நெல்பயிர்களைப் பொத்தென்று அவர்கள் முன்னால் விட்டெறிந்தார். வேருடன் பிடுங்கிய அப்பயிர்களை ஆளுக்கொன்றாய் எடுத்துப் பார்த்தனர்.

"சுத்திச்சுத்திப் பாத்தாப்ல நமக்கு என்ன தெரியுது ?"

விஞ்ஞானி நாயக்கர் தரையையே உற்றுப்பார்த்தார். அவர் உட்கார இடம் தேடுகிறார் என்று யூகித்துக்கொண்ட கிட்ணசாமி கரைச்சரிவிலிருந்து ஒரு பெரிய கல்லை தூக்கிக் கொண்டுவந்து போட்டான்.

"இந்தப் பயித்துல எதலயாவது புதுசா வெள்ளவேர் போட்ருக்கா பாத்திகளா, தண்டு இருக்கிற லச்சணத்தப் பாத்திகளா! இப்பவே வெளஞ்ச பயிர் மாதிரி பழுப்புத் தட்டிப் போயி, வளர்ற பயிரு எப்பிடி இருக்கனும் அப்பிடியே தூரும் துளுரும் பச்சப்பசேல்னு இருக்க வேணாமா ?".

"இந்த நாலு வருசமாந்தான் இப்படி வாயில மண்ணப்போடுது, இதுக்கு முந்தி இப்படி இல்லயே, அடிக்காத மருந்தெல்லாம் அடிச்சாச்சு, போடாத ஒரமெல்லாம் போட்டாச்சு பயிரு ஒரு மொழத்துக்கு அங்கிட்டு எழும்பவே மாட்டங்கு, அதுலயும் பொட்டல் பொட்டலா கருகுது, இங்க பாரு, வயக்காட்டப் பாத்தது மாதிரியா இருக்கு சுடுகாட்டப்பார்த்தது மாதிரி இருக்கு அருள் கெட்டுப்போயி".

ரெங்கசாமி நாயக்கர் துப்பிய வெற்றிலை எச்சில் தண்ணீரில் விழுந்து சிவப்பாகியது.

"இப்ப கீழக்கடேசியிலிருந்து சுத்தி மேலக் கடேசிவரைக்கு வந்திருக்கன். மருந்துக்கு ஒரு தவள, ஒரு மீன் குஞ்சி, ஒரு நண்டு, ஒரு கொக்கு, ஒரு குருவி, எந்த உசுப்பிராணியாவது கண்ணுல படட்டுமே! ஒரு ஈங்குஞ்சியக் காணும், பெரிய அருசுவமால்ல இருக்கு".

"கூட்டங்கூட்டமா திரியுமே உள்ளானும், சிறகியும், கொக்கும், நாரையும் - இப்ப ரெண்டு வருசமா நம்ம ஊரையே மறந்திருச்சே"!

"எங்கயாவது நெற கண்மாயில கொக்கு வராம இருக்குமா?'

"மீனு இருந்தாதான் கொக்கு இருக்கும் ?"

"அதச் சொல்லும், ஒத்த அயிரயக் கூடக் காணுமே, பெறகு கொக்குக்கு இங்க என்ன வேலை ?"

"தண்ணிக்கு மேல 'தானாப்' பூச்சி கொஞ்சமா வெளையாடும், அதக்கூட கண்ணுல காணுமே!"

"வெள்ளிக் குருத்தா மின்னுமே கம்மாத் தண்ணி, நெறத்தப்பாரு கடல் தண்ணி கெனக்கா இருக்கா".



கண்மாய் பெருகி மறுகால் போய்விட்டால் போதும், நெல் வீட்டுக்கு வந்த மாதிரிதான், களத்தில் உப்பாய் குமிந்து விடும். அப்பேர்பட்ட கண்மாயில் இரண்டு வருடங்களாக கண்மாய் நிறைந்து மறுகால் ஓடியும் ஒரு நெல் விளைவிக்க முடியவில்லை. பயிர்கள் வளராமலேயே நின்று கருகிப் போனால் என்னதான் செய்யமுடியும்? இன்ன நோய்தான் இன்ன காரணம்தான் என்று நிதானிக்க முடியவில்லை. விஞ்ஞானி நாயக்கர் கண்மாயையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

“ஆயிரத்தச் சொல்லுங்க, இது மில்லுக்காரன் வேலதான். என்ன கழுதையவோ கலந்து விடுறான், அது சனியன் இன்னதுன்னு நமக்கு அடபடல”.

“ஓம் பேச்சுப்படியே வச்சிக்கிருவம். மில்லு இந்த ரெண்டு வருஷமாத்தானா இருக்கு, அம்பது வருசமா இங்கதான் இருக்கு, அப்பக் கலக்காத மருந்தையா இப்பம் கலக்கப்போறான்?”

“தண்ணிய ஆடு மாடுகூட மோந்து பாத்திட்டு போகுதுன்னா, என்ன அர்த்தம்?, தண்ணி பூராவும் வெஷமா இருக்கூனுதான் அர்த்தம்!”

விஞ்ஞானி நாயக்கர் தான் கொண்டு வந்திருந்த நெல்பயிர் தூர்களை ஒன்றாய்ச் சேர்த்துக் கட்டினார்.

“என்ன மாமா எங்க ஆராச்சிக்குப் போகுது?”

“நேத்து கோயில்பட்டி போயி வெவசாய ஆராச்சிப் பண்ணையில ஒரு பாட்டல் தண்ணிய குடுத்திட்டு வந்தன், அவந்தான் அஞ்சாறு பயித்தையும் பிடுங்கி கொண்டாரும்ன்னான், கொண்ட்டு போறேன், அதயும் பாப்பம்”.

அவர் கரை நெடுக உற்றுப் பார்த்தபடி நடந்தார். விஞ்ஞானி நாயக்கரின் ஆராய்ச்சி ஊரிலும் சுற்றூர்களிலும் ரொம்பவும் பிரசித்தம். யூரியா மூட்டைகளையும், பூச்சிகொல்லி மருந்துகளையும் தொடாத ஒரு சம்சாரி உண்டென்றால் அது விஞ்ஞானி நாயக்கரைத் தவிர்த்து யாரும் இருக்க முடியாது. ஊரெல்லாம் டிராக்டர் வந்தவுடன் மாடுகளை விற்றபோது இவர் மட்டும் கூடுதலாக இன்னும் இரண்டு ஜோடி மாடுகளை வாங்கிக்கட்டினார். மாட்டுச் சாணத்தை தண்ணீரில் கரைத்துவிட்டு நீர் பாய்ச்சுவார். ஒரு சொட்டு மாட்டு மூத்திரம் கூட வீணாகாமல் தொழுவத்தில் பெரிய அண்டாவில் சேர்த்து பயிர் முழுக்க தினமும் தெளிப்பார். எரிசாம்பலைப் பெட்டி பெட்டியாய்க் கொண்டு போய் பயிர்களின் மேல் தூவுவார். மெனக்கிட்டு வேப்ப முத்து சேர்த்து இடித்துத் தூளாக்கி தூர்களில் வைப்பார். வேப்பிலைகளை நிறையப் பிடுங்கி வந்து ஆட்டு உரலில் ஆட்டி சாறு பிழிந்து அந்தச் சாற்றில் விதைகளை ஊறப்போட்டு பின் உலரவைத்து விதை ஊன்றுவார்.

நோயே அண்டாதபடிக்கு செடிகள் வளருவதைப் பார்த்து எத்தனையோ தரம் ஆபீசர்களே ஜீப்பில் வந்து விஞ்ஞானி நாயக்கரைச் சந்தித்துப் பேசிவிட்டுப் போயிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவராலேயே இன்ன காரணமென்று கண்டுபிடிக்க இயலவில்லை. கரை நெடுக ஓலைகள் எல்லாம் காய்ந்து பட்டுப் போய் நிற்கும் வரிசைப் பனைகளை அண்ணாந்து பார்த்தார். பனையின் தூரோரம் நின்று மேற்காமல் பார்த்து நீண்ட பெருமூச்சுவிட்டார்.

கண்ணுக்கெட்டிய தூரம்வரை கடலெனத் தண்ணீர். கழுத்தளவு தண்ணீருக்குள்ளும் இலையுதிர்த்து மாராய் நிற்கும் கருவேல மரங்கள். கரையெல்லாம் புதர்மண்டிய நீர்க்கருவையும் சங்கஞ்செடிகளும், கள்ளிக்கூட்டமும். உள்வாகரையில் சம்பும் நீர்க்கோரையும்; சம்புக் கோரையிலிருந்து பறக்கும் விளைந்த கதிர்களின் பஞ்சுக்கூட்டம். அவர் பழைய கண்மாயை நினைத்துப் பார்த்தார். அடிக்கொரு தரம் கோயில்பட்டி போகிற டவுன்பஸ் வருகிறதா என்று தார் ரோட்டையும் ஏறிட்டுப் பார்த்துக்கொண்டார்.

நிறைசூலியாய் நிற்கும் இந்த அருள்கெட்டுப்போன கண்மாயில் முந்தி எத்தனை விதமான உசுப்பிராணிகள் விளையாடித்திரியும்! கண்மாய் பெருகி மறுகால் ஓடி ஆற்றைத் தொட்டுவிட்டாலே போதுமே, விதவிதமாய் ஆரா, உளுவை, கெண்டை, பாம்புக்கெண்டை, சூனக்கெண்டை, பால்க்கெண்டை, அயிரை, கெளுரு, கொரவை, விலாங்கு, ஊளி, வட்டக்கெண்டை, சிலேப்பிக் கெண்டை இவைகளோடு தண்ணீர்ப் பாம்பு, ஆமைக்குட்டி, நீர்க்கோழி, உள்ளான், சிறகி, மீன்கொத்தி, கொக்கு, நாரை, கூளக்கடா, முக்குளிப்பான், வட்டமிடும் பருந்துக்கூட்டம், நண்டு, தவளை, அரட்டவளை, தானாப்பூச்சி இவையெல்லாம் இந்த இரண்டு வருடங்களாய் எங்கே போய் ஒளிந்து கொண்டன! என்ன மாயம்! பழைய கண்மாயின் லச்சணமே மாறி மூளிக்காதியாய், தண்ணீரே சுமையாய், வெறும் தண்ணீர்மட்டும்தான் கண்மாயா? பெருமூச்சு விட்டார். பனையில் நன்றாகச் சாய்ந்து கொண்டார்.

நிறைபெருக்காய் கெத்கெத்தென்று தத்தளிக்கும் தண்ணீர். மறுகால் ஓடி கலுங்கல் பாசம்பிடித்து ஓடையில் உருளும் தண்ணீர். வெள்ளியை உருக்கிய பாகாய் புதுத்தண்ணீர். கரையெங்கும் கழுவிப்போட்ட

> **கண்மாய் பெருகி மறுகால் போய்விட்டால் போதும், நெல் வீட்டுக்கு வந்த மாதிரிதான்; களத்தில் உப்பாய் குமிந்து விடும். அப்பேர்பட்ட கண்மாயில் இரண்டு வருடங்களாக கண்மாய் நிறைந்து மறுகால் ஓடியும் ஒரு நெல் விளைவிக்க முடியவில்லை. பயிர்கள் வளராமலேயே நின்று கருகிப் போனால் என்னதான் செய்யமுடியும்?**

மேகங்களெனக் காயும்
வெளுத்த துணிகள்.
வரிசை வரிசையாய்
உட்கார்ந்து கரைநிறைந்து
தூண்டில் போடுபவர்கள்.
ஆனந்தமாய் கறுப்பு
உருண்டைகளெனத்
தலைநீட்டி எட்டிப்
பார்த்துவிட்டு முங்கிக்
கொள்ளும் நீர்க்கோழிகள்.
கரை முழுக்க அரைத்த
மஞ்சளாய்ப்
பூத்துக்குலுங்கி மணம்
பரப்பும்
ஆவாரஞ்செடிக்கூட்டம்.
கரைப்பனை வரிசையில்
குலைகுலையாய்த்
தொங்கும் பனங்காய்களும்,
கல்கலபங்களும்.
உள்வாகரையில்
நடைபயிலும் நண்டுக்கூட்டம். நண்டுகள் பிடித்துத் திரியும் சிறுசுகள், சிறுசுகளின் பின்னால் தூக்குவாளியும் கையுமாய் இளைப்பு நோயாளிகள். கரைமேல் பந்தலெனப் படர்ந்து தண்ணீரின்மேல் விழுதுகள் தொங்க நிற்கும் ஆலமரம். ஆலமரத்தில் சத்தம் எழுப்பி சலசலக்கும் பலவித பறவைக்கூட்டங்கள். ஒற்றைக்காலில் தவமிருந்து ஒதுங்கும் மீன்களைக் கொத்தி விழுங்கும் கொக்குக் கூட்டங்கள். பனை ஓலையில் காத்திருந்து எறிகல்லாய் தண்ணீருக்குள் பொத்தென்று பாய்ந்து மீனைக் கவ்விக் கொண்டு மேலெழும்பிச் சிறகடித்து நீர் உதறிப் பறக்கும் மீன் கொத்திகள். தூக்குவாளிகளும் தொட்டில்களும் ஊஞ்சலாய் தொங்கும் அய்யன் கோயில் புளிய மரம். நடவு முடிந்ததற்கு அடையாளமாய் ஓயாமல் கேட்கும் குலவைச் சத்தம். வெற்றிலைக் கொடிக்கால்களில் வேலை செய்யும் வண்டு கட்டிய பெண்களின் விடுபாட்டு. மடைத்தண்ணீரின் கும்மென்ற இரைச்சல். பனை நிழல் நீண்டு நெளிந்து நெளிந்து அலையோடு விளையாடும் கண்ணாம்பூச்சி விளையாட்டு. மேலெல்லாம் சகதியும் சேறுமாய் கோமாளியாய் வந்து முங்கியவுடன் புதுமனுசனாய் வரும் சம்சாரிகள். புது தண்ணீரில்தான் பயறு, பருப்பு நன்றாக வேகுமென்று குடத்துடன் வரும் குமரிகளின் பின்னால் கூட்டமாய் பெண்கள், அருமையான குளிர் காற்று. கரையெங்கும் கள்ளிப்பழம், கள்ளிகளின் மேல் படர்ந்து ரத்தினக்கல்லாய் சிவந்த கோவைப் பழங்கள், கறுத்த பாறைத் திட்டுகளாய் தண்ணீருக்குள் இருந்துகொண்டு வெளியேற மனமின்றி சுகங்காணும் எருமைக்கூட்டங்கள்.



நாயக்கர் பொங்கி வந்த கண்ணீரை அடக்கிக்கொண்டு முக்கு ரோட்டுக்கு ஓடினார். டவுன் பஸ் கிட்டத்தில் வந்து விட்டது. ஓடிப்போய் ஏறி உட்கார்ந்தார். அவர் கைகளில் வைத்திருந்த தூரோடு பிடுங்கிய நெல்பயிர்களை எல்லோரும் ஆச்சரியமாய்ப் பார்த்தார்கள்.

விவசாய ஆராய்ச்சிப் பண்ணைக்குப் போன உடனேயே ஐந்தாறு அதிகாரிகள் அவரைக்கூட்டிக் கொண்டு போனார்கள். பெரிய விசாலமான ஒரு அறையில் ஒருவர் மட்டுமே உட்கார்ந்திருந்தார். அவர் முன்னால் பத்துப்பதினைந்து நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. நாயக்கரை உட்காரச்சொல்லி கை நீட்டினார். கூட வந்தவர்கள் உட்காரத்தயங்கியதிலிருந்தே இவர்தான் எல்லோர்க்கும் பெரிய அதிகாரி என்பதை நாயக்கர் யூகித்துக்கொண்டார். மேஜையின் மேல் அம்பாரமாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பைல்களிலிருந்து தேடி ஒன்றைக் கையில் எடுத்தார்.

"எந்த ஊர் சொன்னீக ?"

"உருளகுடி."

"மில் வாகரையில இருக்கே அந்த ஊர்தானே ?"

"ம்....ம்...ம்..."

"ஒங்க ஊரு இப்படியான பாதிப்புக்கு வரும்னு அஞ்சு வருசத்துக்கு முன்னாடியே நாங்க அரசாங்கத்துக்கு ரிப்போர்ட் அனுப்பியாச்சு, யாரும் கண்டுக்கிறல."

"கொஞ்சம் வெவரமாச் சொல்லுங்கப்பா."

"இத்தன சீரழிவுக்கும் இந்த மில்தான் காரணம்."

"மில்லு அம்பது வருசமா இருக்கே சார், இந்த ரெண்டு வருசமாத்தான் இந்தக்கூத்து. போன மூணா வருசம் வரைக்கி ஒரு பிரச்னையும் இல்லியே ?"

அதிகாரி நாயக்கரைப் பார்த்து இலேசாய் சிரித்துக்கொண்டார்.

"கவனமாக் கேளும் நாக்கரே, ஒங்களப் பத்தி இங்க ஏற்கனவே எல்லார்க்கும் தெரியும். நீருமட்டும் நாலெழுத்து படிச்சிருந்தா நீரு உக்காரவேண்டிய எடம் நான் உக்காந்திருக்கிற சீட். அம்பது வருசத்துக்கு

முன்னாடி பஞ்சிலருந்து நூல் மட்டுமே தயார் பன்ற ஸ்பின்னிங் மில்லா இது இருந்துச்சு. பத்து வருசத்துக்கு முன்னாடி நூலிலிருந்து துணிகள் தயாரிக்கிற வீவிங் யூனிட் பக்கத்துல உருவாச்சு. கச்சைத்துணிய நெய்து அப்படியே அனுப்பி விக்கிறது. இப்படி அஞ்சு வருசத்துக்கு முன்னாடி பக்கத்துல ஒரு யூனிட் ஆரம்பிச்சு. அதுல இவங்க உற்பத்தி பண்ற துணிகளே இங்கேயே பிளீச்சிங் பண்ணி ப்ராசஸ் செஞ்சு சாயம் முக்கி, டிசைன் பிரிண்ட் பண்ணி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி பண்றாங்க. அந்தச் சாயக்கழிவு எல்லாமே நேரடியா ஒங்க கண்மாயில கலக்குது. அவ்வளவும் பயங்கரமான கெமிக்கல்ஸ். பச்சையா சொல்றதா இருந்தா எல்லாமே ப்பாய்ஸன், விஷம்".

பஸ்ஸை விட்டு இறங்கிய நாயக்கர் இளவட்டமாய் மாறிப்போனார். அவருடைய நடையின் வேகம் அப்படி. அவர் 'யுரேகா, யுரேகா' சொல்லாததுதான் குறை. அவ்வளவு வேகம். முதலில் மொட்டை மில்லாய் இருந்து பின்னர் புகைக்கும் வானளாவிய குழாய் கட்டியதையும், பின்னர் நல்ல தண்ணீர் தேடி ஊருக்குள் அதிகாரிகள், மில் முதலாளி வந்ததையும் எதற்கென்று இப்போது புரிந்து கொண்டார்.

ஊர் மடத்தில் ஜனம் பூராவும் கூடியிருந்தார்கள். விஞ்ஞானி நாயக்கர் சொல்லச் சொல்ல எல்லோருடைய நரம்புகளும் முறுக்கேறின. பெண்கள் மண்ணைவாரித் தூற்றினார்கள்.

"நாளைக்கே கோயில்பட்டி போயி கட்சி ஆபிஸ்ல சொல்லி ரெண்டுல ஒன்னப் பாத்துருவம்."

பால்ப் பண்ணை ராமசுப்பு நாயக்கர் சிவப்புத்துண்டை இழுத்துப் போர்த்திக் கொண்டு கோபமாகக் கத்தினார்.

"ஆளுக்கொரு மம்பட்டியும், கையுமாய் போயி தண்ணிய மில்லவிட்டே வெளியேற விடாம அடச்சிட்டாப்போச்சு!"

"இதெதுக்கு வழவழான்னு பேசிக்கிட்டு? மொதலாளி இந்த ரோட்டு வழிதான் மில்லுக்குப் போகணும், கார மறிச்சிட்டாப் போச்சு."

"கார மறிச்சு தாயிளிய வெளிய இழுத்துப்போட்டு கந்துகந்தா வெட்டல..."

நாயக்கர் கவனமாக எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டே இருந்தார். கூட்டத்தைச் சுற்றி ஒரு நோட்டம் விட்டார்.

"என்ன.....எல்லாம் பேசி முடிச்சாச்சா....இன்னியும் இருக்கா?"

"........................ ................................ ............................ ..............................."

"இப்ப நாய்க்கரு சொல்றதக் கவனமாக கேளுங்க, ஒங்களுக்குத்தக்கன எதுவும் பேசாதீக, பணம் பாதாளம் வரைக்கும் பாய்கிற காலமிது. இந்தப் பிரச்னையில கட்சிக்காரங்களே நொழைய விட்டுட்டா, பெறவு அவம் பின்னாலதான் ஊரோட நம்ம அலயனும். கடேசில காரு வாங்கிக்குடுப்பான், பங்களா கெட்டிக்குடுப்பான், காணாக்கொறைக்கு கட்சிக்கு ஆபீசும் கெட்டிக்குடுப்பான் மொதலாளி. இத்தனையயும் வாங்கிக்கிட்டு வெவகாரத்த கோர்ட்ல போட்ருக்கு, சட்டப்படிதான் நம்ம போகணும்பான் கட்சிக்காரன். மொதலாளி சுப்ரீம் கோர்ட் வரைக்கு அப்பீல் பண்ணுவான். கேஸ் முடிய எட்டு வருசமோ பத்து வருசமோ ஆகும். அதுக்குள்ள நம்ம எல்லோருமே திருவோட்ட ஏந்திட்டு காவிவேட்டிய உடுத்திட்டு பண்டாரமாய் போகவேண்டியதான்."

**நிறைசூலியாய் நிற்கும் இந்த அருள் கெட்டுப்போன கண்மாயில் முந்தி எத்தனை விதமான உசுப்பிராணிகள் விளையாடித் திரியும்!...எல்லாம் இந்த இரண்டு வருஷமாய் எங்கே போய் ஒளிந்து கொண்டன? என்ன மாயம்! பழைய கண்மாயின் லச்சணமே மாறி முளிக்காதியாய், தண்ணீரே சுமையாய், வெறும் தண்ணீர் மட்டும்தான் கண்மாயா?**

"சரி, பெறகு இதுக்கு என்னதான் வழி?"

"நம்ம கொஞ்சம் கோளாறாகவும், பொறுமையாகவும் தான் போயாகனும், இல்ல....காரியங் கெட்டுப்போகும். நம்ம ஊர்ச் சார்பா காலெக்டருக்கு ஒரு மனு, மில் மொதலாளிக்கு ஒரு மனு குடுப்பம். மூனு மாசத்துக்குள்ள பதில் இல்லன்னா ஊரோட தெரண்டு ஆம்பள, பொம்பள, கெழடு, கெட்ட, குஞ்சு, குருமான் எல்லோரும் மில்லு கேட்ல படுத்துருவம். கொஞ்சங்கொஞ்சமா இங்ஙன சாகிறது ஒரேடியா அங்ஙன செத்துருவம்."

"பக்கத்து ஊரு சம்சாரிகளையும் கூப்பிட்டுப்பாப்பமே..."

"ஒரு பய வரமாட்டான், என்னைக்குமே வெள்ளம் குண்டிக்குள்ள வந்தப் பெறவுதான் அனப்போடுவான் சம்சாரி!"

நாயக்கர் சொன்னது எல்லோருக்கும் சரியென்று பட்டிருக்கவேண்டும். எல்லோரும் மௌனமாகத் தலையாட்டினார்கள். ஒரு படித்த பையனை மனு எழுதுவதற்காகத் தேடினார்கள். படித்த பையனைக் காணவில்லை. ஆனால் ஊர் முழுவதும் அங்கேதான் கூடியிருந்தார்கள். நாயக்கர் கூட்டத்தை உற்றுப்பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்.

('தமிழரசு' இலக்கிய மலரிலிருந்து)

# எங்கள் ஊர்


## பிரச்சினை:

எங்கள் ஊர் பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட துங்கபுரம் ஊராட்சியாகும். இங்கு ஏறக்குறைய பத்தாயிரம் மக்கள் வசிக்கிறார்கள். துங்கபுரம் கிராமத்தில் நூல் நிலையம் இல்லாதது வாசகர்களுக்குப் பெரும் மனக்குறையாகவே உள்ளது. இக்குறையைப் போக்கி, நூல் நிலையம் ஒன்று அமைக்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமாய்ப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சிவலிங்கம்,
துங்கபுரம், பெரம்பலூர் மாவட்டம்.

## தீர்வு:

வேப்பூரில் தமிழ்நாடு பொது நூலகத்துறையில் கீழ் இயங்கும் கிளை நூலகம் இயங்கிவருகிறது. 1948-ஆம் ஆண்டு பொது நூலகச் சட்டத்தின் படியும், தற்போது அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள அரசாணை நிலை எண்.66 கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை நாள் 30.1.96 இன் படியும் 5000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள இடங்களில் நூலகம் திறக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி, தமிழகம் முழுவதும் 625 ஊர்ப்புற நூலகங்கள் திறக்க அரசு ஆவன செய்துள்ளது. தாங்கள்



குறிப்பிட்டிருக்கும் துங்கபுரம் கிராமத்தின் மக்கள் தொகை 10,000 என்று குறிப்பிட்டுள்ளீர்கள். ஊர்ப்புற நூலகம் திறப்பதற்கு அரசால் ஐந்து நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது.

அவை:

1. நூலகம் இயங்குவதற்கு வாடகை இல்லாத இலவசக் கட்டடம் தரப்படுதல் வேண்டும்.
2. பின்னால் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 5 செண்ட் முதல் 10 செண்ட் வரை காலிமனை நூலக ஆணைக்குழுவின் பெயருக்குப் பத்திரப் பதிவு செய்து தருதல் வேண்டும்.
3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.
4. ரூ.1000 தொகை செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.
5. ரூ.2000 மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

மேற்கூறிய ஐந்து நிபந்தனைகளையும் துங்கபுரம் கிராம மக்கள் முழுமையான அளவு நிறைவேற்றித்தரும் பட்சத்தில் அக்கிராமத்தில் ஒரு ஊர்ப்புற நூலகம் திறக்க வழிவகை உண்டு. மேற்படி நிபந்தனைகளை முழுமையான அளவில் நிறைவேற்றித்தரும் பட்சத்தில், அவ்வூர் கிராம மக்கள் மாவட்ட நூலக அலுவலருடன் தொடர்பு கொண்டால், ஊர்ப்புற நூலகம் திறக்க வழிவகை செய்யப்படும் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

- இரா.கண்ணன்
பொது நூலக இயக்குநர்,
சென்னை.

## பிரச்சினை

எங்கள் ஊர் விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் சிறுதலைப்பூண்டி கிராமம். இந்தக் கிராமத்தில் சுமார் 200 ஆண்டுக்காலமாக (மூன்று தலைமுறை) அருந்ததியர் சர்வே எண்.110-ல் வீடுகட்டி வாழ்ந்துவருகிறார்கள். இந்த இடத்திற்கு வீட்டுமனைப்பட்டா கோரி பலமுறை விண்ணப்பித்தும், இவை சித்தேரிப்புறம் போக்கு எனக் கணக்கில் உள்ளது, எனத் தட்டிக் கழித்துவிட்டனர். மேலும் இந்த இடத்தில் எவ்வளவு மழை பெய்தாலும், மழையாலும் வெள்ளத்தாலும் எந்தப் பாதிப்பும் ஏற்படுவதில்லை - தண்ணீர் பிடிப்பதும் இல்லை. எனவே, இந்த இடத்தை அருந்ததியர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க ஆணை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

- சி.அமுதா
சிறுதலைப்பூண்டி

## தீர்வு:

செஞ்சி வட்டம் சிறுதலைப்பூண்டி கிராமம் செல்வி சி. அமுதா என்பவர் மனுவில் கோரியுள்ள கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் வீட்டுமனை ஒப்படை கோரியுள்ள நிலம் வருவாய்த்துறைக் கணக்குகள்படி சிறுதலைப்பூண்டி கிராமம் ரிச.எண்.109/சித்தேரி புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசு நடைமுறை விதிகளின்படி நீர்வழிப்புறம்போக்கு நிலங்களில் வீட்டுமனைப்பட்டா வழங்கக்கூடாது எனத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்பதனையும், இருப்பினும் இவர்களது கோரிக்கையினைச் சிறப்பம்சமாகக் கருதி மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் புலப்பார்வையின் போது இந்த நீர்வழிப் புறம்போக்கு ஆட்சேபணை இல்லை என்ற இனமாகக் கருதினால்

# பிரச்சினை

நிலம் மாற்றம் செய்யத்தக்க முன்மொழிகள் அனுப்பப்படும் என்பதும், அம் முன்மொழிகள் மீது நில நிர்வாக ஆணையர் அவர்கள் பார்வையிட்டு ஆட்சேபணை இல்லை என்ற இனமாகக்கருதி மாறுதல் செய்ய இசைவளித்த பின்னர் வீட்டு மனைப்பட்டா வழங்கிட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- த.குப்புசாமி
வருவாய் வட்டாட்சியர், செஞ்சி.

பிரச்சினை:

வேப்பூர் ஊராட்சி ஒன்றியம் துங்கபுரம் ஊராட்சி துங்கபுரம் கிராமத்தில் பொதுக்கழிப்பிடம் கட்டப்பட்டு ஏறக்குறைய 10 ஆண்டு ஆகிறது. நாளதுவரை கழிப்பிடம் துப்புரவுப் பணியாளர் நியமனம் செய்து செயல்படாது இருக்கின்ற காரணத்தால் - பொது இடங்களில் மலஜலம் கழிப்பதால் தொத்து நோய் ஏற்பட்டு, பொதுமக்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். இக் குறையைப் போக்க இந்தக் கழிப்பிடம் செயல்பட-துப்புரவுப் பணியாளரை நியமனம் செய்யவேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

- சிவலிங்கம்
துங்கபுரம்
பெரம்பலூர் மாவட்டம்.

தீர்வு:

துங்கபுரம் கிராமத்தில் உள்ள பொதுக் கழிப்பிடத்திற்குத் துப்புறவுப் பணியாளர் நியமனம் செய்து பராமரித்திட துங்கபுரம் ஊராட்சித் தலைவரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- பா.ஜெகநாதன்
ஆணையர்
வேப்பூர் ஊராட்சி ஒன்றியம்.

பிரச்சினை:

பொது நூலகத்துறையில் தூத்துக்குடி மாவட்டம், நெல்லை, குமரி ஆகிய மாவட்டங்களில் மூன்றாம் நிலை நூலகர் பதவி காலியாக உள்ள இடங்களுக்கு இதுவரை - கடந்த 4 ஆண்டுகளாக-நிரப்பப்படாமல் உள்ளது. இதை அரசு கவனத்திற்குக் கொண்டுவருமா ?

மேலும் அரசு விதிப்படி சிதம்பரனார் மாவட்டத்தில் கோவில்பட்டி கிளை நூலகம் இரண்டாம் நிலையிலிருந்து முதல் நிலைக்கு வந்து பல ஆண்டுகளாகிறது. ஆனால் அரசோ, முதல் நிலைக்கான ஆயத்தங்களைச் செய்யாமல் இருக்கிறது.

- பொதுமக்கள் சார்பாக,
பெ.புவியரசு, கோவில்பட்டி.

தீர்வு:

பொது நூலகத்துறையில் நுழைவுப் பணியிடங்களை (என்ட்ரி லெவல் போஸ்ட்) நிறைவு செய்ய அரசாணை நிலை எண்.179/பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை நாள்: 2.6.95ல் அரசு முன் அனுமதி பெற்று நிறைவு செய்யப் பணிக்கப்படுகிறது. அத்துடன் பணியிடங்களை நிறைவு செய்ய அனுமதி பெறப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.


எனவே நுழைவுப் பணியிடங்களை நிறைவு செய்ய அனுமதி வேண்டி, அரசுக்குக் கருத்துரு சமர்ப்பிக்கப் பட்டதில், அரசும் அதனைப் பரிசீலனை செய்து பள்ளிக் கல்வித்துறை அரசு கடித எண்.54249/கே1/95-12 நாள்:10.3.97ல் அப்பதவிகளை நிறைவு செய்ய அனுமதி வழங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து பணியிடங்களை நிறைவு செய்ய அப் பணியிடங்களுக்கு பணிநீட்டிப்பு ஆணை பெறத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சிதம்பரனார் மாவட்டம் கோவில்பட்டி கிளை நூலகம் 2-ஆம் நிலையிலிருந்து முதல் நிலைக்கு வந்தாலும், கூடுதல் பணியிடங்கள் அனுமதிக்கப் படாததால் அந்நூலகம் 'ஏ' கிரேடு நூலகமாகப் பணிபுரிய இயலவில்லை என்கிற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

- இரா.கண்ணன்
பொது நூலக இயக்குநர்
சென்னை-2.

பிரச்சினை:

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டம் கள்ளிமந்தையம் போலீஸ் சரகம் ஒட்டன்சத்திரம் - தாராபுரம் ரோட்டில் அமைந்துள்ள விநாயகா ஸ்பின்னிங் என்ற மில் தொடங்கி சுமார் நான்கு ஆண்டுகள் ஆகிறது. மில்கட்டும் பொழுது கட்டிட வேலையின் போது உங்களையெல்லாம் மில்லுக்குச் சேர்த்துக் கொள்கிறேன் என்று ஆசை வார்த்தைகள் கூறி எங்களையெல்லாம்



மில்லுக்குச் சேர்த்துக் கொள்கிறேன் என்று ஆசை வார்த்தைகள் கூறி எங்களையெல்லாம் அல்லும் பகலும் வேலையை வாங்கிவிட்டு, அந்த் மில்லைக்கட்டி முடித்தனர், 24 மணிநேரமும் வேலையை வாங்கிவிட்டு, எங்களுக்குத் தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு ரூ.8 மட்டும் கொடுத்து வேலை வாங்கினார்கள். அப்போது, குறிப்பிட்ட நபர்களை மட்டும் வேலைக்கு வைத்துக்கொண்டு மில்லைத் தொடங்கினார்கள்.

மில் தொடங்கும்போது ரூபாய் பத்து மட்டும் கொடுத்து, இரண்டு ஷிஃப்டாக 24 மணி நேரமும் வேலை

வாங்கினார்கள். நாங்கள் இதை முறையல்ல என்று மில் நிர்வாக அதிகாரியிடம் முறையிட்டோம். எங்கள் கோரிக்கையை அந்த அதிகாரி பொருட்படுத்தாமல் விட்டுவிட்டார். உடனே நாங்கள் தொழிற்சங்கம் ஆரம்பித்தோம்.

இப்போது குழந்தைத் தொழிலாளர்களை வைத்துக்கொண்டு வேலை வாங்கிக் கொண்டுள்ளனர். அவர்களுக்கு இணங்காவிட்டால் மில்லை விட்டு நீக்கி விடுவார்கள். மேலும், தணிக்கை செய்ய அரசாங்க அதிகாரிகள் வந்தால், குழந்தைகளை ரூமில் போட்டுப் பூட்டிவைத்துவிடுகின்றனர். இப்படி அரக்கத்தனமான செயலைச் செய்யும் அந்த ஆலை மீது உரிய நடவடிக்கை எடுத்து எங்களுக்கு நீதி வழங்குமாறும் எங்கள் குடும்பப் பசியைப் போக்குமாறும் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

- பாதிக்கப்பட்ட மக்கள்
விநாயகா ஸ்பின்னிங் மில்ஸ்
ஏத்தையூர் (பிரிவு)

**தீர்வு:**

*விநாயகா ஸ்பின்னிங் மில்ஸ் என்ற ஆலை 24.4.97 அன்று ஆய்வு செய்யப்பட்டபோது 14 வயதும் அதற்கும் குறைவான வயதுள்ள குழந்தைத் தொழிலாளர்கள் எவரும் பணியில் இல்லை. மில் துவங்கிய நிலையிலும், கட்டடம் கட்டும் நிலையிலும் ஏற்பட்ட பிரச்சினைகள் தொடர்பாகத் தற்சமயம் நடவடிக்கை எடுக்க இயலாது எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

- சா.ஜெகதீசன்
தொழிற்சாலைகள் ஆய்வர்,
2-ம்-ரகம், திண்டுக்கல்.

**பிரச்சினை**

எங்கள் கிராமத்தைச் சுற்றிலுமுள்ள கிராமங்களிலிருந்து சுமார் 5,000 மக்களும் 300 மாணவர்களும் நுகும்பல் பஸ் நிலையத்திலிருந்தே பயணம் செய்கின்றனர். பேருந்து வசதிக்குறைவினால் பயணம் செய்வது மிகவும் துன்பமாக உள்ளது. 6 ஆண்டுகளாகப் பொதுமக்கள் மனுக்கள் அனுப்பி எந்தவித நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கவில்லை. எங்களின் பயணச் சிரமத்தை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த

1. புதியதாக ஒரு நகரப் பேருந்து விடவேண்டும்.
2. புதுவை சென்னை செல்லும் 83ஏ, 162 மேலும் 81பி, 81டி ஆகிய பேருந்துகள் எங்கள் பேருந்து நிலையத்தில் நின்று செல்லவேண்டும். நிறுத்தும் உரிமை இருந்தும் பேருந்துகள் நிற்பதில்லை.

இவைகளுக்குச் சம்பந்தப்பட்டவரிடம் விடைபெற்று எங்கள் பிரச்சினையைத் தீர்த்துவைப்பீர்கள் என்று நம்புகிறோம்.

- திருவள்ளுவர் இளைஞர் நற்பணி மன்றம்
நுகம்பல்.

**தீர்வு:**


*மதுராந்தகம், சூணாம்பேடு (வழி-நுகம்பல் - தடத்தில் டி9 என்ற நகரப் பேருந்து ஒன்று, ஒருநாளைக்கு 12 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இதே தடத்தில் கூடுதலாக ஒரு புதிய பேருந்து விடவேண்டும் எனச் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் கோரியுள்ளார். இக் கோரிக்கையைத்தொடர்ந்து, மதுராந்தகம் - சூணாம்பேடு தடத்தில் ஒரு பேருந்து இயக்க அரசிடம் நிதியுதவி அளிக்கக் கோரப்பட்டுள்ளது. அரசிடமிருந்து நிதியுதவி மற்றும் அனுமதி கிடைத்தவுடன், புதிய நகரப் பேருந்து வழித்தடங்கள் துவங்கும் பொழுது, மதுராந்தகம் - சூணாம்பேடு (வழி. நுகம்பல்) தடத்தில் ஒரு புதிய பேருந்து இயக்கப்படும்.*

*தடம் எண்.83ஏ, 81பி, 81டி ஆகிய பேருந்துகளுக்கு நுகம்பல் கட்டணநிலை உள்ளது. இத்தடப் பேருந்துகள் எப்பொழுதும் நுகம்பல் கட்டண நிலையில் நின்று செல்கின்றன. மேலும் பரிசோதகர்களைக் கொண்டு அவ்வப்பொழுது நுகம்பல் கட்டண நிலையில் நின்று செல்கின்றனவா எனக்கண்காணித்து வருகிறோம். இத்தடத்தில் ஓடும் பேருந்தில் பணிபுரியும் ஓட்டுனர் நடத்துனர்களுக்குத் தக்க அறிவுரையும் வழங்கப்பட்டுள்ளது.*

- மேலாண்மை இயக்குநர்
த.நா.அரசு போக்குவரத்துக்கழகம்,
விழுப்புரம்.

**பிரச்சினை:**

சிதம்பரம் வடக்கு வடுகத் தெருவில் சுமார் 400 குடும்பங்கள் உள்ளன. இதில் பெரும்பாலோர் படித்த, உயர் பதவியில் இருப்பவர்கள். கடந்த 15 ஆண்டுகளாக இந்தத்தெருவில் ஒரு சிறிய சந்தில் (தெரு தொடங்கும் இடத்தில்) அதிக மக்கள் வசிக்கும் இடத்தில் கள்ளச்



சாராயம் 24 மணி நேரமும் ஒரு வீட்டில் வெகு ஜோராக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இங்கு வந்து சாராயம் குடித்துவிட்டுச் செல்வோர் அதிக போதையில், பெண்கள் குடியிருக்கும் வீட்டுக் கதவைத்தட்டி மோசமான முறையில் நடனம் ஆடுவதும், கீழ்த்தரமாகப் பெண்களை அழைப்பதும் தினசரி நடக்கும் நிகழ்ச்சியாகும். மேலும், வீட்டிலேயே சாராயம் விற்கப்படுவதால் குடியிருக்கும் சிறுவர், சிறுமியர்கள் மற்றும் கல்லூரி மாணவிகள் போன்றோர்கள் படும் அவதி சொல்லி மாளாது. இதுபற்றிப்

பலமுறை நகரக் காவல் துறையிடம் புகார் கூறியும், எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தயவுசெய்து தாங்கள்தான் உடன் நேரடி கவனம் செலுத்தி எங்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுகிறேன்.

- பாதிக்கப்பட்ட பெண்கள்
சிதம்பரம்.

**தீர்வு:**

சிதம்பரம் வடக்கு வடுகத் தெருவில் திடீர் சோதனை நடத்தி, 12.8.97 அன்று 7 நபர்கள் கைது செய்யப்பட்டு, வழக்குப்பதிவு செய்யப்பட்டு, தண்டனையும் வழங்கப் பட்டுள்ளது. மறுபடியும் சோதனை செய்து பார்த்ததில், அங்கு வேறு எவரும் சாராயம் விற்பனை செய்வதாகத் தெரியவில்லை. எனவே சிதம்பரம் வடக்கு வடுகத்தெருவில் கள்ளச்சாராய விற்பனை முழுவதும் தடை செய்யப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- சி.சைலேந்திர பாபு
காவல்துறை கண்காணிப்பாளர்
கடலூர் மாவட்டம்.

**பிரச்சினை:**

அருப்புக்கோட்டையில் 6 தியேட்டர்கள் உள்ளன. இத்தியேட்டர்களில், டிக்கெட்டில் குறிப்பிட்ட கட்டணத்தைக் காட்டிலும் நான்கு மடங்கு அதிகமாக வசூலிக்கிறார்கள். மேலும் கட்டணம் ஏதும் குறிப்பிடாத வெள்ளைத் தாளையும், டிக்கெட் என்று கூறிக்கொடுக்கிறார்கள். இதைத் தியேட்டரில் நுழையும்போது வாங்கி வைத்துக்கொண்டு உள்ளே அனுப்பிவிடுவார்கள்.

இதுபோன்ற சட்டப்புறம்பான செயல்களைத் தியேட்டர்களின் உரிமையாளர்கள் செய்வதாய், ஒரே நாளில் ஆயிரக்கணக்கான ரூபாய் வரி ஏய்ப்பும் செய்கிறார்கள். இதனால் அரசும், பொதுமக்களும் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க உதவி புரியுங்கள்.

- பொது மக்கள்
அருப்புக்கோட்டை.

**தீர்வு:**

அருப்புகோட்டையில் உள்ள 6 தியேட்டர்களிலும் சென்று ரகசிய முறையில் விசாரிக்க, எல்லா தியேட்டர்களிலும் அரசு நிர்ணயத்திலுள்ள விலையில்தான் டிக்கெட் விற்பனை செய்வதாகத் தெரியவருகிறது. மேலும், டிக்கெட்டாகக் கட்டணம் எதுவும் இல்லாத வெள்ளைத்தாள் எதுவும் வழங்கப்படுவதாகத் தெரியவில்லை. இதுதவிர, அனைத்துத் தியேட்டர் மேலாளர்களையும் அழைத்து விசாரிக்க, அரசு நிர்ணயித்துள்ள நிலையில்தான் டிக்கெட் விற்பனை செய்வதாகவும், டிக்கெட் என்று வெள்ளைத்தாள் எதுவும் கொடுக்கப்படவில்லையென்றும், வரி ஏய்ப்பு எதுவும் செய்யவில்லை யென்றும், அதுபோல் தவறாக நடந்திருந்தால் தாங்கள் எடுக்கும் சட்ட நடவடிக்கைக்குக் கட்டுப்பட்டு நடப்பதாகவும் கூறி ஒரு வாக்குமூலம் கொடுத்துள்ளனர். மேலும் தொடர்ந்து, மேற்படி தியேட்டர்களைக் கண்காணித்துவர அருப்புக் கோட்டை நகர ஆய்வாளருக்குத் தக்க அறிவுரை கொடுக்கப்பட்டு, அதன்படி நடந்துவருகிறது எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

- ஜெ.கே.திரிபாதி
காவல் கண்காணிப்பாளர்
விருதுநகர்.

**பிரச்சினை:**

எங்கள் ஊர் நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் ஒன்றியம், எஸ்.உடுப்பத்தில் உள் முத்தப்புடையாம்பாளையம் ஆகும். இங்கு நாங்கள் சுமார் 50 குடும்பங்கள் வாழ்ந்துவருகிறோம். எங்கள் ஊரின் வீதிகளிலும் பாறைகள் ஆங்காங்கே இருக்கிறது. அதனால் அடைமழையின்போது வீட்டில் ஈரப்பதம் ஏற்படுகிறது. இதனால் நாங்கள் பல தொல்லைகளுக்கு ஆளாகிறோம். எங்கள் ஊருக்கு இதுவரை எந்தக்குடியிருப்பும் கிடைக்கவில்லை. நாங்கள் பல இடங்களில் மனுச்செய்தும் எந்தவொரு பலனுமில்லை. எனவே, எங்களுக்கு ஒரு இலவசக்காலனி கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு தங்களை மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

- ஊர்ப் பொதுமக்கள்
முத்தப்புடையாம் பாளையம், அருந்ததியர் காலனி
எஸ். உடுப்பம் அஞ்சல், புதுச்சத்திரம் ஒன்றியம்
நாமக்கல் மாவட்டம்.

**தீர்வு:**

புதுச்சத்திரம் வட்டாரத்தில் 1997-98ஆம் ஆண்டுக்குத் தொகுப்புவீடு இலக்கீடு நிர்ணயம் செய்யப்பட்டதில் இவ்வூராட்சிக்கு ஒதுக்கீடு பெறப்படாததால் இவ்வாண்டில் தொகுப்புவீடு வழங்க வாய்ப்பில்லை எனவும், மேலும் தொகுப்புவீடு பயனாளிகள் கிராம சபா மூலம்தேர்வு செய்யப்பட்டு வருவதால் 98-99ஆம் ஆண்டில் ஊராட்சித்தலைவரை அணுகுமாறு மனுதாரர்கள் கேட்டுக் கொள்ளப் படுகின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

- ஆர். செங்கோட்டையன்
கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்
ஊராட்சி ஒன்றியம், புதுச்சத்திரம்.

**பிரச்சினை:**


எங்கள் ஊர் நாமக்கல் மாவட்டத்தில் இராசிபுரம் தாலுக்கா தேங்கல்பாளையம் கிராமத்தில் ஆணைப்பட்டியான் காலணியில் உள்ள அருந்ததியர் காலணியில், தெருவிளக்குக் கம்பம் மிகவும் பழுதடைந்து அடியில் உடைந்துவிட்டது. இரண்டு கம்பிகள் மூலம் நிற்கிறது. காற்றடிக்கும் போது படபடவெனச் சத்தம் போட்டுக்கொண்டு ஆட்டம் போடுகிறது. இந்தக் கம்பம் விரைவில் விழுந்துவிடும் அபாயத்தில் உள்ளது. நாங்கள் பலமுறை மின் வாரியத்திற்கு நேரில் சென்று, மனுக்கொடுத்தும் எந்தப் பதிலும் இல்லை. மின்கம்பம் விழுந்தால், தாழ்த்தப்பட்ட மக்களின் உயிரைக் குடித்துவிடும். இதுபற்றித் தக்க நடவடிக்கை எடுப்பார்களா?

- ஊர்ப் பொதுமக்கள்
ஆணைப்பட்டியான் காலனி
தேங்கல்பாளையம் அஞ்சல்.

**தீர்வு**

வெண்ணந்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தேங்கல்பாளையம் ஊராட்சி ஆணை வெட்டியான் அருந்ததியர் காலனியில் பழுதடைந்து உள்ள தெருவிளக்குக் கம்பத்தை ஆய்வு செய்து, நடவடிக்கை எடுத்து 13.8.97 அன்று வேறு கம்பம் நட்டுச் சரிசெய்யப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- இள மின்பொறியாளர்
இயக்கமும் பராமரிப்பும்
தமிழ்நாடு மின்வாரியம்
அத்தனூர்.



# அண்ணல் காந்தியடிகளும் - பெண்ணுரிமையும்

பத்தொன்பதாம் நூற்றாண்டில், காலங் காலமாக இருந்துவந்த வம்சாவளிக் குடும்பக் கட்டமைப்பில், பெண்களின் பிரச்சினை பற்றிய விழிப்புணர்வு என்பது வரையறுக்கப் பட்டதாக இருந்தது; அந்த நிலையில், இப்பிரச்சினையில் காந்தியடிகளின் அணுகுமுறை ஒரு முன்னோட்டமாக அமைந்தது. சமூக, பொருளாதார மற்றும் அரசியல், ஆகியவற்றில் அடிப்படையிலேயே பெண்களுக்குச் சம உரிமையளிக்கப்படவில்லை என்பதை மிகச்சிலரே சிந்தித்தனர். ஆணுக்கு நிகரான பங்கு பெண்ணுக்கும் உண்டென்ற அபிப்பிராயமும் இல்லை; தன்னுடைய உரிமையைப் பேணுவதிலோ, பங்கெடுத்துக் கொள்வதிலோ ஆணுக்கு நிகரான உரிமை உண்டென்பதிலோ சிந்திக்கக் கூடிய அளவிற்கு அன்றையப் பெண்களிடம் விழிப்புணர்ச்சி என்பது கிஞ்சிற்றும் இல்லாதிருந்தது. அதோடு, அன்றைய ஆட்சியாளர்களான, ஆங்கிலேய அதிகார வர்க்கத்தினரும், ''இந்தியப் பெண்கள் எவ்வகையிலும் ஆண்களுடன் சமபங்கை வகிப்பவர்கள் அல்ல'' என்று முழுமையாக நம்பியதும், வேடிக்கையான ஒன்றுதான்.



சமூக மாற்றத்தை உருவாக்குவதில், மகளிரின் பங்கு என்பது இன்றியமையாத ஒன்று என்று மகாத்மா காந்தி முழுமையாக நம்பினார். பெண் உரிமையை எத்தருணத்திலும் அவர் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை; ஏனெனில், சமூகநீதி உருவாக வேண்டுமானால், பெண்ணுக்குச் சம உரிமை அளிப்பது என்பது தவிர்க்க இயலாத ஒன்று என்றே அவர் நம்பினார். பெண்களின் உரிமையற்ற நிலை நிலவிய அத்தருணத்தில், அவரால் தொடங்கப் பட்ட பல்வேறு இயக்கங்கள் பாதிக்கிணறு தாண்டிய நிலையில் நிறுத்தப்பட்டதற்கும், பெரும்பான்மையான பணிகள் பயனற்றுப் போனதற்கும் காரணம் பெண்களின் சக்தி பயன்படுத்தப் படாததாலேயே ஆகும், என்று அவர் நம்பினார்.

இத்தகையதொரு நிலையில், அண்ணல் காந்தியடிகளின் அணுகுமுறை, இப் பிரச்சினையில், விழிப்பூட்டுவதாக அமைந்தது. 1921 செப்டம்பர் 15ல் 'யங் இந்தியாவில்' காந்தி இவ்வாறு எழுதினார்:-

**தன்னுடன் சமபங்கெடுத்துக் கொள்பவனும், சமஉரிமை உடையவனுமான மனைவியைக் கணவனே, ஆணாதிக்க மனப்பான்மையில், எதேச்சதிகாரப்போக்கில் ஏளனத்துக்குள்ளாகிச் சிறுமைப்படுத்துவதுதான் பெண்மையின் கீழ்நிலைக்குக் காரணமாகும். என்னைப் பொறுத்தவரையில் பெண்ணினம், ஒரு பலவீனமான பாலன்று. ஒருவேளை, நான் பெண்ணாகப் பிறந்திருந்தால், இத்தகைய உரிமையற்ற இந்நிலையையும், ஆணினத்தின் ஆணவப் போக்கையும் எதிர்த்துப் போராடியிருப்பேன்.**

அன்னை கஸ்தூரிபாவிடம் காந்தியடிகள், தான் கொண்டிருந்த ஈடுபாட்டைத் தற்பெருமையோடு குறிப்பிடுகிறார். ''நான் அவளை வித்தியாசமாக நடத்த வேண்டும்

என்று கருதியதைவிட, அவளுக்கு அனைத்து உரிமைகளையும் வழங்கியிருந்தேன்'' என்பதே உண்மையாகும்.

பெண்ணெனப்பட்டவள், உரிமையைக் கொண்ட ஒரு முழுப் பிரஜையாவாள். ஒரு திட்டமிட்ட வாழ்க்கையில், பெண்ணானவள் ஆண்களைப் போன்று தன்னுடைய விதியைத் தானே செம்மைப்படுத்திக்கொள்ளும் உரிமை பெற்றவளாவாள். பெரும்பாலான ஆய்வுகளும், கட்டுரைகளும் பெண்களின் உரிமையையும், நிலையையும் ஆண்களுக்கொப்ப சமஉரிமை அடிப்படையிலேயே பெரிதும் வலியுறுத்துகின்றன. **ஆணுடன் பெண்ணின் உறவானது, ஒரு தாயாக, ஒரு மனைவியாக அல்லது ஒரு மகளாக, ஓர் உறவுத்தொடராக இருப்பினும், அவள் எந்நிலையிலும், ஒரு 'விவாதப் பொருளாகவே' விளங்கி வருகிறாள்.**

ஒரு மூன்றாம் நபராக இருந்து, ஒருதலைப் பட்சமற்ற நிலையில் ஆராய்ந்தால், சட்டம் மற்றும் சம்பிரதாய அடிப்படையில் பெண்ணின் நிலை மிகமோசமானதாகவும், மிக விரைவான ஒரு மாறுதலை வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்பதையும் அறியமுடியும். இந்நாட்டின் 85 விழுக்காடு மக்கள், தங்களைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதை அறியாமல், ஒட்டு மொத்தமாகச் சூழலிலிருந்து துண்டிக்கப்பட்டு விட்ட நிலையிலிருப்பதால், நிச்சயமாக அப்படிப்பட்ட ஒரு மாறுதல் வந்துதானாக வேண்டும். இத்தகைய சமூகக் கண்ணோட்டங்களின் மீது ஆழ்ந்த சிந்தனை வேண்டுமென்பதை நம்முடைய முழுமுதற் கடமையாகக் கொண்டாக வேண்டும் என்று காந்தி விரும்பினார்.


ஆணைப் போன்றே பெண்ணும் அடிப்படையில், ஒத்த தன்மையுடையவள் என்பதையும், ஆத்மார்த்தமாகச் சமமானவள் என்பதையும், முதலில் பெண்கள் உணரவேண்டும். பெண்ணானவள், தன் சொந்த உரிமையை நிலைநாட்ட முன்வரவேண்டுமென்று காந்தி வலியுறுத்தினார். ஒத்த வாழ்க்கையை **மேற்கொள்ளும் நிலையிலுள்ள பெண்களும், ஆண்களைப் போல் அடிப்படை உரிமையுள்ளவர்கள் என்ற சிந்தனை உருவாகவேண்டும்.**

இருபாலருமே, ஒத்த நிலையிலிருக்கும் பொழுது, அவர்களுடைய உரிமைகளும் ஒத்திருக்கவேண்டும் என்ற கருத்தும் ஏற்கப்பட்டேயாக வேண்டும். ஆனால், அதே நேரத்தில், ஆண்களை விடப் பெண்கள் மனத்திண்மையை, இயற்கையின் கொடையாகப் பெற்றவர்கள் என்பதையும் மறுக்க இயலாது. ஆணைப் போன்றே பெண்ணும் சுதந்திர உரிமை பெற்றவள். அதோடு, ஆணைப்போன்றே மிக நுண்ணிய பணிகளிலும் ஈடுபட அவளுக்கும் உரிமையுண்டு. பெண்ணானவள் ஆணைப் போன்றே, இயற்கையிலேயே அதே உரிமையைப்பெறத் தகுதியுடையவள், என்று காந்தியடிகள் பெரிதும் நம்பினார்.

'பெண்களுக்கு மேல்' என்ற ஆதிக்க உணர்வை வளர்த்துக்கொண்டுள்ளவர்களின் தன்மையானது, ''தரங்கெட்ட வாடிக்கையின் வெறும் தாக்கம்'' மட்டுமே என்று காந்தி வலியுறுத்தினார். பெண்களின் சக்தியும், பெண்களின் ஆற்றலும் தவிர்க்கப்பட்ட காரணத்தினால்தான் பல இயக்கங்கள் தோல்விகளைச் சந்திக்க வேண்டியிருந்தது என்பதை எண்ணி அண்ணல் காந்தியடிகள் வருந்தினார். பெண்களும் ஆண்களும் ஒருவருக்கு மற்றொருவர் இணையானவர்களே; ஒருவர் மற்றொருவர்க்குப் பரஸ்பரம் உதவிக்கொள்கிறவர்களே; எனவே, ஒருவரை இழந்து ஒருவர் தாக்குப்பிடிப்பது என்பது கடினமே. எனவேதான் இவ்விருவரும் இணைந்தே செயல்படுவது என்பது கட்டாயமாகிறது. ஆகவே, இந்த இணையில் ஏதாவது ஒன்றைத் தகுதியால் தாழ்த்துவது என்பது இருவரையும் ஒரு சேரக் கெடுப்பதாகி விடும்.

மனிதச்சமூகத்தின் சமநிலை உறுப்பினர்களான ஆண் மற்றும் பெண்ணின் பிரச்சினை என்பது ஒத்த தன்மையானதேயாகும். அதற்காகப் பெண்கள், ஆண்களுடன் எதற்கெடுத்தாலும் போட்டியிட வேண்டுமென்ற அவசியமில்லை. எந்த விஷயத்தில் போட்டியிட அவசியமாகிறதோ, அதைத்தேர்வு செய்து இயன்றதை வென்று காட்டுபவர்களாகப் பெண்கள் இருக்கவேண்டும். ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலான 'உறவுப்பரிவர்த்தனை' என்பது மிகவும் உயர்வானது என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

உழைப்பதில் மேல், கீழ் என்ற நிலை கூடாதெனவும், பொதுவில் ''உணவுக்கு உழைப்பு''



இருந்தபோதிலும், திருமண உரிமை, சொத்துரிமை போன்றவற்றின் வாயிலாக, பெண்களைத் தாழ்வுபடுத்துவது, தனக்கு எவ்விதத்திலும் உடன்பாடில்லை என்று அவர் கூறுகிறார். மனிதனை உருவாக்குவதிலும், குடும்பத்தை நிர்வகிப்பதிலும், பெண்களின் முக்கியத்துவம் பற்றிய காந்தியடிகளின் கருத்துக்களை, எவராலும் மறுக்க இயலாது. குடும்பத்தின் முக்கியப் பொறுப்பினை ஏற்கவேண்டிய குடும்பத் தலைவிகளாகிய பெண்கள், அறிவாற்றல் பெற்றவர்களாக இருக்க வேண்டுமென்பது இன்றியமையாத

என்பது சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களின் ஒத்த கடமையாகும். எனவே, குடும்ப உறுப்பினர் அனைவரும் ஒருசேர உழைக்கவேண்டும் என்பதைக் காந்தியடிகள் பெரிதும் வலியுறுத்தினார்.

குடும்ப அமைப்பைச் செம்மைப்படுத்துவதின் அவசியத்தை, வலியுறுத்துவதில் காந்தியடிகள் சலிப்படைந்ததே இல்லை. குடும்பத்தின் தலைவியான பெண்ணானவள், எஜமானியாக, குடும்பத்தின் முக்கியக் காப்பாளராக, உணவைப் பகிர்ந்தளிப்பவராக, சந்ததியினரைப் பேணிச் சமூகப் பந்தயத்திற்குத் தயார்ப்படுத்துபவராக, இத்தகைய பெரும் பொறுப்பை நிறைவேற்றுபவளாவாள். குடும்பத்தலைவியாக, குழந்தைகளைப்பெற்று, அவர்களை மிகக் கவனத்துடனும், பொறுப்புடனும் வளர்த்து, அறிவுக்கூர்மையுடன், திடகாத்திரத்தோடு ஆளாக்கி, நாட்டிற்கு வழங்குகின்ற மிகப்பெரிய பொறுப்பு பெண்களைச் சார்ந்ததே.

அதற்காகப் பெண்கள் இல்லத்திற்கு வெளியே சென்று, தங்களின் தகுதிக்கேற்ற பணியைச் செய்து, பொருளீட்டுவதைக் காந்தியடிகள் எதிர்க்கவில்லை. மகளிர் பணிக்குச் செல்வதை ஏற்றுக்கொண்டாலும், குடும்பத்தலைவியாக, குடும்பத்தை நிர்வகிப்பது என்பதுதான் அவளது முழுமுதற் கடமையாகும். வெளியில் சென்று, வேலை செய்வதன் மூலம் பணம் ஈட்டுவதாலேயே பெண்களின் நிலை உயர்ந்து விடும் என்று தாம் நம்பவில்லை எனக் காந்தியடிகள் உறுதிபடக் கூறுகிறார்.

ஒன்றாகும்.

சர்வாதிகாரப் போக்கைக் கடைப்பிடித்து வந்த ஹிட்லர், முசோலினி போன்றவர்களின் வன்முறை வெறியாட்டத்தாலும், தார்மீக அடிப்படையில்லா வன்போர்களின் விளைவுகளாலும் உலகப் பூப்பந்தானது, இரத்தத்தால் கறைபட்டுப் போயிருந்த நேரமது. அத்தகைய சூழ்நிலையில், இந்திய நாட்டை ஏகாதிபத்திய வெறியுடன் அடிமைப்படுத்தி ஆண்டுகொண்டிருந்த ஆங்கிலேய ஆளும் வர்க்கத்திற்கு எதிராகக் குரல் கொடுத்த அண்ணல் காந்தியடிகள், வன்முறையற்ற சாத்வீக அடிப்படையில், தன்னைத் தானே வருத்திக் கொள்கின்ற அஹிம்சா அறவழியில் நின்று சுதந்திரப் போராட்டத்தை நடத்திக் காட்டியதாலேயே அவர் 'மகாத்மாவாக' வர்ணிக்கப்பட்டார்.

அரசியல், பொருளாதார, அமைப்பு மற்றும் குடும்ப வாழ்க்கை உட்படத் தன்னுடைய ஒவ்வொரு நடவடிக்கையிலும் அஹிம்சையைத்தான், தான் முழுமையாகக் கடைப்பிடித்து வருவதாக அவரே பல கட்டங்களில் உறுதிபடக் கூறியுள்ளார். தன்னைத்தானே வருத்திக்கொள்கின்ற மனப் பக்குவமும், எதையும் தாங்குகின்ற உறுதியும், தளராத சகிப்புத்தன்மையும், இன்னல்களை இன்முகத்தோடு எதிர்கொள்கின்ற பரிபக்குவமும் இருந்தால்தான், அஹிம்சையைக் கடைப்பிடிக்க இயலுமென்று, காந்தியடிகள் நம்பினார்.

பெண்களைப் பொறுத்தவரையில், அவர்களால்தான் அஹிம்சையை எளிதில்

கடைப்பிடிக்க இயலும்; பெண்களை, அஹிம்சையின் பிரதிபலிப்பாகவே தான் காணுவதாக அவர் குறிப்பிடுகின்றார். சண்டையும், சச்சரவும் நிறைந்த உலகுக்கு அஹிம்சையைக் கற்பிக்கவே, பெண்கள் அவதரித்துள்ளனர் என்று அவர் நம்பினார். ஏனெனில், அஹிம்சையை மேற்கொள்வதற்குரிய வரையறையற்ற அன்பும், குடும்பத்தைச் செம்மையாக வழிநடத்திச் செல்லும் மனவலிமையும், துன்பங்களை எதிர்பார்த்து இன்முகத்துடன் சமாளிக்கும் தைரியமும் பெண்ணுக்கு இயற்கையளித்த கொடையாகும்.

'குடும்ப நன்மை' என்ற அடிப்படை இலட்சியத்தை எய்திடும் வகையில், வெயிலென்றும் மழையென்றும் பாராமல், நம்பெண்கள் ஆணுக்கு நிகராக விவசாயத்தொழிலில்ஈடுபட்டுக்கடுமையாக உழைக்கிறார்கள்; எனவே, அவர்கள் புறத்துன்பங்களை முழுமையாக ஏற்றுக்கொண்ட, "நடமாடும் அஹிம்சாவாதிகளாகவே" மகாத்மா காந்தியின் பார்வையில் பட்டனர். உலகம் சமாதானத்தையும், அமைதியையும் ஏற்றுக்கொண்டேயாக வேண்டுமென்பதை காந்தியடிகள் வெறும் உதட்டளவு உச்சரிப்போடு நிறுத்திவிடவில்லை. வன்முறை தவிர்த்த ஒரு எதிர்காலம், உருவாகவேண்டுமனானால், பெண்களுடைய 'அஹிம்சா சக்தி' முழுமையாகப் பயன்படுத்தப்பட்டேயாக வேண்டுமென்பதைக் காந்தியடிகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். வன்முறையற்ற சமாதான வாழ்வுதான் எதிர்காலத்தில் அமைய வேண்டுமென்பதை முழுமையாக நாம் ஏற்றுக்கொள்வோமேயானால், அத்தகைய எதிர்காலம் பெண்களிடத்திலேதான் உள்ளது.

ஏனெனில், பெற்றெடுத்த குழந்தையைப் பேணிவளர்க்கும் பெரும் பொறுப்பைத் தவிர்க்க இயலாத ஒரு பணியாக வலிந்து ஏற்றுக்கொண்டிருக்கும் தாய்மையினால்தான், ஒரு இனத்திற்கு வளமையான எதிர்காலத்தை உருவாக்கித்தர முடியுமென்று அவர் பெரிதும் நம்பினார்.

உடல் வன்மையையும், கட்டுப்பாடற்ற காட்டுத்தனமான, வேகத்தையும், காந்தியடிகள் என்றுமே நம்பியதில்லை. பிறர்க்கு உதவிடுவதில், தன்னைத்தானே வருத்திக்கொண்டு, மன வலிமையோடு செயல்படுவதைத்தான் அவர் முழுமையானசக்தி என்று நம்பினார். அவருடைய வாழ்க்கையில், இத்தகைய நிலையை எய்துவதற்கு ஏதுவாக இருந்தவை யாதெனில், கிராமப்புற இந்தியப் பெண்களின் மகாப்பொறுமையும், மற்றும் அவர் நேரடியாக அறிந்த பெண்களின் சாத்வீக மனப்பான்மையுமேயாகுமென, அவர் குறிப்பிடுகிறார். அவருடைய சொந்த வாழ்வில் தொடர்புடைய, அன்னை புட்லிபாய், அவருடைய துணைவியார் கஸ்தூரிபாய் ஆகியோரிடம் அஹிம்சை உணர்வை எய்தியதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.


காந்தியடிகள், பெண்கள் மீது வைத்திருந்த மரியாதையை, அரிஜன் பத்திரிகையில் (1938-நவம்பர் 5-ல்) இவ்வாறு எழுதுகிறார். "அஹிம்சையை, தக்கவாறு உரிய தருணத்தில், மனஉறுதியோடு, கையாள்வது என்பது ஆண்களைவிடப் பெண்களால்தான் இயலும் என்று பெரிதும் நம்புகிறேன்". பொதுவாக ஆண்களுடைய உடல் வலிவும், எதையும் நிறைவேற்றக்கூடிய ஆற்றல் பெற்றவர்கள் ஆண்கள்தான் என்ற கருத்தும் மேலோங்கியிருந்தாலும், மிகுந்த சகிப்புத்தன்மையாலும், சுய தியாகத்தினாலும், அஹிம்சையைப் பொறுத்தவரையில் பெண்கள்தான் அவ்வகையில் மனவலிமை பெற்றவர்கள் என்று காந்தி நம்பினார். பெண்களைப் பொறுத்த வரையில் அஹிம்சை என்பது இயற்கையாகவும், எளிதில் கடைப்பிடிக்கக்கூடியதாகவும் அமையப்பெற்றுள்ளது. 1917 மற்றும் 1941களில் அவர் நடத்திய "சாத்வீக"ப் போராட்டங்களில், ஆண்களும், பெண்களும் அதிக அளவில் பங்கெடுத்துக் கொண்டாலும், உறுதிப்பாடு மற்றும் துன்ப, தொல்லைகளைப் பொறுத்துக்கொள்வதில் பல கட்டங்களில் ஆண்களைவிடப் பெண்களே விஞ்சி நின்றதாகவும், அவர் குறிப்பிடுகிறார்.

ஏழையாயிருந்தாலும், வசதிபெற்றவர்களாக இருந்தாலும், எவ்வித எதிர்பார்ப்புமின்றிப் பங்குகொண்ட பெண்களின் அந்த சாத்வீக எழுச்சியானது, ஒரு உன்னதமான முடிவை எய்திட, ஏதுவாக இருந்ததாகக் காந்தியடிகள் கருதினார்.

'தாழ்ந்த பால்வகையினர்' என்று பெண்களைப் பற்றிய ஏளனக்கருத்துக்களை மிகுந்த கோபத்துடனேயே காந்தி குறிப்பிடுகிறார். ஆனால், தங்களைத் தாழ்த்துகின்ற இவ்வகை

அடைமொழியைப் பெண்கள் தங்களுக்கு அளிக்கப்படும் 'பட்டயமாக' மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்ட அந்தப் பரிதாப நிலையினைத்தான் தன்னால் சகித்துக் கொள்ளமுடியவில்லை என்று காந்தியடிகள் ஆதங்கப்பட்டார். பெண்களை மட்டுப்படுத்தி, விலங்கிடுகின்ற இத்தகைய "அடைமொழிகளெல்லாம்' ஆணாதிக்க வர்க்கத்தால் புனையப்பட்டது தான் என்று தத்துவஞானி டால்ஸ்டாய் குறிப்பிடுகின்றார். சாத்வீகத்தின் சக்தியைப் பெண்கள் உணரத்தலைப்படுவார்களேயானால், தங்களை இழிவுபடுத்துகின்ற இத்தகைய 'தாழ்ந்த பாலினம்' என்ற நிலையை ஏற்றுக்கொள்ளவே மாட்டார்கள். மகாத்மா காந்தியின் ஒப்பற்ற தலைமையில், சுதந்திர இயக்கத்தில், பெண்கள் பெருமளவில் பங்குகொண்டிருந்தாலும், பொதுவாகத் தங்களுடைய 'விடுதலை'யைப் பற்றி அவர்கள் எண்ணியதாகத் தெரியவில்லை. ஒரு சகாப்தத்தை உருவாக்கும் பணியில், அவர்கள் தங்களை ஈடுபடுத்திக்கொண்டாலுங்கூட, தங்களின் சமூக அடிமைத்தனம் பற்றிய விழிப்புணர்ச்சி, அவ்வளவாக அவர்களிடம் இருக்கவில்லை. 1947-ல் அவரை அமெரிக்கப் பெண்கள் குழு சந்தித்தபொழுது, "பெண்ணானபட்டவள் எங்கே பிறந்திருந்தாலும், அமைதியை உருவாக்கிக் காப்பற்றுகின்றவளாகவே தன்னால், உணரமுடிகின்றது'' என்று மகாத்மா குறிப்பிடுகிறார். "நீங்கள் சுதந்திரம் பெற்றவர்களாக இருக்கிறீர்கள்; அமைதியை நிலைநாட்டுகின்ற சக்தியாக நீங்கள் மாறவேண்டும்; அது உங்களால் இயலும்; சாத்வீகம் என்ற அறிவியலின்பால் உங்கள் இதயங்களை ஈடுபடுத்துங்கள்; **ஆண்களைவிடப் பெண்களுக்குத்தான் சாத்விகத்தை ஏற்றுக்கொள்ளும் சக்தி, இயற்கையால் வழங்கப்பட்டுள்ளது.** பெண்கள் தங்களுடைய உயர்ந்தநிலையை உணர்ந்தால்தான், சமாதான வெற்றியைப் பெற்றுத்தருகின்ற, இயற்கையின் தூதுவர்களாக விளங்க முடியும். வழிவழியாக இருந்துவரும் இந்தியப் பெண்களின் தாய்மைப்பிடிப்பு மற்றும் தாய்மைக்கோட்பாட்டினை, அடிப்படைக் கருத்தாக ஏற்றுக்கொண்டு அதனடிப்படையிலேயேதான், சுதேசி இயக்கத்தில், அவர்களைக் கலந்துகொள்ள காந்தி அழைப்புவிடுத்தார்''. தாயானவள், தான்பெற்ற குழந்தை எவ்வளவு அகோரமாக இருந்தாலும், வெளியாரிடத்திலே வீசியெறிந்திடச் சம்மதிக்க மாட்டாள்; அந்த அடிப்படையிலேதான் நாட்டுப்பற்றுடைய நம் தாய்மார்கள் இந்திய உற்பத்தியாளர்களைப் புறக்கணித்து விடமாட்டார்கள். இந்தியப் பெண்மணிகள், தங்களுக்கே உரிய சகிப்புத்தன்மை மற்றும் விருப்பத்தோடு காத்திருக்கின்ற பொறுமையினாலேயே, இந்தக்கரடுமுரடான கதர்த்துணிகளை, அவர்கள் பயன்படுத்துவார்கள் என்று தாம் பெரிதும் நம்புவதாக அண்ணல் காந்தி குறிப்பிடுகின்றார்.

ஒரு காலத்தில் உலகமே வியக்கத்தக்க அளவுக்குத் தரமான, வண்ணத்துணிகளையும், ஆடைகளையும் தயாரித்துப் பெருமைபெற்ற நம் இந்திய நாடு மீண்டும் அத்தகையவற்றைத் தயாரிக்கும் என்பதில் ஐயமில்லையென்று 1921-லேயே காந்தி அடிகள் நம்பிக்கை தெரிவித்தார். பத்திருபது வருடங்களிலேயே, இந்தியாவின் தரமான துணி மற்றும் பட்டுத்தயாரிப்புத்துறைகளில் அவருடைய இந்தக்கணிப்பு, நிரூபணமாகியது. எதிர்காலச் சந்ததியினரின் ஏற்றத்திற்காக நம்முடைய பொருளாதாரத்தை வளப்படுத்திடவும், இந்தியாவின் சொந்த ஆதாரத்தைப் பயன்படுத்தும்



வகையிலும், கதராடைகளைத் தற்சமயம் சிறந்தவைகளாக ஏற்றுப் பயன்படுத்திட வேண்டுமென அவர் அறிவுறுத்தினார். மீண்டும், காந்தியடிகளின் நம்பிக்கைக்கு, உருவகம் தருகின்ற வகையில், நம்முடைய இந்தியப் பெண்கள் அவைகளைப் பெருமளவில் விரும்பிப் பயன்படுத்தினார்கள். காந்தியடிகள் மென்மையானவராக மற்றும் காருண்யம் படைத்தவராக இருந்தபோதிலும், சமூக, சமய மற்றும் பொருளாதார அநீதிகளை மிகத்துள்ளியமாக அதே நேரத்தில் வன்மையாகவும் கண்டிக்கத் தவறவில்லை. அக்காலத்தில், இந்தியாவில் பெண்களுக்குச் சமூக மற்றும் பொருளாதார அநீதி என்பது ஏற்றுக்கொண்ட ஒன்றாகவே இருந்தது. ராஜா ராம்மோகன்ராய், ஈஸ்வர்சந்திர வித்யாசாகர், விவேகானந்தர் போன்ற சமூகசீர்திருத்தச் செம்மல்கள், இச்சமூக அநீதிக்கு எதிராகக் குரல்கொடுத்தும்கூட அது அவ்வளவாக வெற்றிதரக்கூடியதாக இல்லை. காந்திஜி இந்திய அரசியலுக்குள் நுழைந்த அந்தக் காலகட்டத்தில், இத்தகைய வன்கொடுமைகளெல்லாம் வாழ்வியலின் ஒரு நியதியாகவே பெண்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. அதேபோலத்தான் பெண்களின் தரத்தைத் தாழ்த்திய பழக்க வழக்கங்களைத் தங்களுக்கு வழங்கப்பட்ட மரியாதை என்றே அவர்கள் நம்பினர். இத்தகைய வெகுளித்தனத்திற்கும், அநீதிக்கும், தப்பெண்ணத்திற்கும் காலம்கூடக் கட்டியங்கூறி வரவேற்பு நல்கிக்கொண்டிருந்தது. காந்தியடிகள், இத்தகைய அநீதிகளை மிகத்துள்ளியமாகவும், உணர்வுப் பூர்வமாகவும் குத்திக்காட்டத் தவறவில்லை. சமூக மற்றும் குடும்பக்கட்டாயத்தின் காரணமாகப் பர்தாவினால் முகத்தை மூடிக்கொள்ளுதல், குழந்தைத் திருமணம் மற்றும் வரதட்சினை போன்ற சமூக அநீதிகளை வெளிப்படுத்திடவும், கண்டிக்கவும் அவர் தயங்கியதே இல்லை. கணவனை இழந்த விதவையர்களின் துயரநிலையையும், தவறான வழிக்கு இழுத்துச்செல்லப்பட்ட பெண்களின் அவலநிலையையும் கண்டு வருந்தியதோடு, ஆணுக்கு ஒன்று பெண்ணுக்கு ஒன்று என்று ' கற்பின் இரட்டை நிலைப்பாடு' ஆகிய சமூக அநீதிகளையும் காந்தியடிகள் எதிர்த்திடத் தயங்கியதேயில்லை. பர்தாவால் பெண்கள் தங்களை மூடிக்கொள்கின்ற வழக்கத்தை எண்ணிக் காந்தியடிகள் துன்பமுற்றுக் கசிந்துருகினார். ஆண்களைப் போன்று ஏன் பெண்கள் நல்ல காற்றைச் சுவாசித்திடும் வகையில் வெளியே நடமாட இயலவில்லை? என்பதையும் பர்தா அணிவது என்பது இந்தியாவின் வழக்கமேயில்லை என்றும் அவர் அறுதியிட்டு உறுதிபடக் கூறினார்.

பர்தாவிற்குள் தங்களை மறைத்துக்கொண்டு, வீடென்ற கூட்டுக்குள்ளே அடைக்கப் பட்டவர்களாக, பெண்களின் நிலை இன்னும் நீடிக்குமேயானால், நம்முடைய மனிதத்தன்மை, கீழ்மையடைந்து சிதைந்தே போய்விடும் என்று அவர் எச்சரிக்கத் தவறியதேயில்லை. வரதட்சணையைப் பொறுத்தவரையில், அதை "ஒரு வெறுக்கத்தக்க கேவலமான முறையாக; பேரம் பேசப்படும் ஒரு அநாகரிகமான வியாபாரமாக; தரந்தாழ்ந்து போன ஒரு கொடிய வழக்கம் என்றே காந்தியடிகள் இச்சமூகக் கொடுமையைச் சாடினார். வாங்குபவருக்கும்-கொடுப்பவருக்கும், விற்றல்-வாங்கல்-பேரம் பேசுதல் போன்றவைகளால், வரதட்சணை முறையானது மனிதவர்க்கத்தை ''அதுகளாக'' ஆக்கி "ஏலம்போடும் சந்தைப் பொருளாகவே மாற்றிவிடும் ஒரு இயற்கைக் கொடுமை" என்று காந்தியடிகள் மிகக்கடுமையாகவே இதை எதிர்த்தார். வரதட்சணை என்பது மனித உறவைக் கீழ்த்தரமாக்கி, அழிவுக்குக் கொண்டு சென்று முடமாக்கிவிடும். பெண்களை, அவமானப்படுத்தி மௌனப்பார்வையாளராக்கி, அவள் ஏற்க வேண்டிய திருமண உறவின் புனிதத்தைக் கெடுத்துவிடும். இத்தீய செயலுக்குத் தீர்வுகாணும் மாபெரும் பொறுப்பு இளைஞர்களிடம்தான் இருக்கிறது என்று அவர் நம்பினார். நம்நாட்டில், பல்கிப் பெருகியிருக்கின்ற இளைஞர் அமைப்புகள், இத்தகைய சமூக அவல வினாக்களுக்கு விடை தேடியாக வேண்டும்; இப்பிரச்சினையில், உறுதியான ஒரு பொது அபிப்பிராயம் உருவாக்கப்பட்டாக வேண்டும். ஆகையால், ஒருவர்கூட, வரதட்சணை வாங்குதல் அல்லது கொடுத்தல் மூலம் தங்கள் விரல்களை அசிங்கப்படுத்திக்கொள்ளக்கூடாது. பெண்ணைப்பெற்றவர்கள் சாதி உணர்வுகளை விட்டொழித்து, இவ்வரதட்சணைக் கொடுமையை ஒழித்திட ஒரு மாற்று ஏற்பாட்டைக் கண்டேயாக வேண்டும் என்பதே அவரது விருப்பமாக இருந்தது.

என்னுடைய பொறுப்பில், ஒரு இளம் பெண் இருப்பாளேயானால், ஒரே ஒரு பைசாவை வரதட்சணையாகக் கேட்கின்ற ஒருவனுக்கு மணமுடித்து அவனுக்கு மனைவியாக்கி அவளை அனுப்பி வைப்பதைவிடக் காலமெல்லாம் அவளைக் கன்னியாகவே வாழச் சொல்லியிருப்பேன் என்று 1929-ல் அண்ணல் காந்தியடிகள் உரத்த குரலில் பிரகடனப்படுத்தினார்.

மூடநம்பிக்கைகளிலிருந்து, தனிமனிதன் விடுபட்டாலொழிய, எந்தவொரு சீர்திருத்தமும் வெற்றியடையாது என்பதை அவர் சலிப்பின்றி, இடையறாது வலியுறுத்திக்கொண்டேயிருந்தார்.

1936-ல் காந்தியடிகள் எழுப்பிய ஒரு ஒப்பற்ற வினாவானது, இக்காலத்திற்கும் சாலப் பொருந்துவதாகும். இளைஞர்களும், இளம் பெண்களும், கல்லூரிவரை படித்திருந்தும்கூட, சமூகக்கொடுமையாகக் கருதப்படுகின்ற "கட்டாயத்திருமணம்" மற்றும் "வரதட்சணைத் திருமண"த்திலிருந்து விடுபட்டு மறுக்காமல் உடன்படுவது ஏன்? அவர்களுடைய எதிர்காலத்தைப் பாழடிப்பது இத்தகைய திருமணத்தை விட வேறு எதுவாக இருக்கமுடியும்? இப்படிப் படித்தவர்களே, அதர்மமான, இத்தகு மூடக்கட்டுப்பாட்டு முறைகளுக்கு உடன்படுவார்களேயானால், அவர்களுடைய படிப்பின் தரம் என்னாவது? அடிப்படையில், கல்வி முறையில் உள்ள ஏதோவொரு பின்னடைவுதான், இதற்குக் காரணமா? படித்தவர்கள் கூட, இவ்வகைக்கீழான, பழக்கவழக்கங்கள் பற்றிய விழிப்புணர்வு இல்லாதவர்களாக இருக்கின்ற காரணத் தினாலேயேதான் அவ்வகை வழக்கங்களுக்கு அவர்கள் உடன்பட்டவர்களாகி விட்டார்களா? என்று வினாக்களைச் சரமாரியாகத் தொடுத்து ஒரு சமூகப் பிரக்ஞையை உருவாக்க அவர் பெரிதும் முயற்சித்தார்.

மணமாகாத கன்னிப்பெண்கள், இத்தகைய சமூக அதர்மத்துக்கு, இடம் தராமல், அவசியமேற்படின், காலமெல்லாம் கன்னியர்களாகவே, இருப்போமென்ற சவாலினை ஏற்றுக்கொண்டேயாக வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மனைவியை இழந்த ஆடவனுக்குள்ள மறுமணஉரிமை, கணவனை இழந்த விதவைப் பெண்ணுக்கும் வழங்கப்பட்டாக வேண்டும். பால்யவிவாகம் போன்ற கொடுமையின் காரணமாகப் பிஞ்சு வயதிலேயே, உதிர்ந்து விழுந்த மலர்களாக, இருந்துவிடாமல், பெண்கள் மூடப்பழக்கங்களிலிருந்து விடுபட்டு ஒரு புத்துலகை உருவாக்க முன்வரவேண்டுமென்றே அவர் குரல் கொடுத்தார்.

விதவை மறுமணத்தை வலியுறுத்தும் அவர், நம் இந்தியநாட்டில்தான் ஆணுக்கொன்று பெண்ணுக்கொன்று என்ற இரட்டை நிலை நிலவுகிறது என ஆதங்கப்பட்டார். குழந்தைப்பருவத்திலேயே இப்படிப்பட்ட மூடப்பழக்க வழக்கங்களுக்கும் அடிமைத்தனமான எண்ணங்களுக்கும் வித்திடப்பட்டு விடுகின்றன என்று வருந்தினார். இந்திய மக்கள், என்று இத்தகைய போலித்தனமான வழக்கங்களிலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாகச் சிந்திக்கிறார்களோ— அன்றுதான் அவர்கள் சுதந்திரமாகச் செயல்படமுடியும் என்று அவர் கருதினார்.

இந்தியப்பெண்களைச் சமஉரிமை பெற்றவர்களாக, நீதிவழங்கப்பட்டவர்களாக நிலைநிறுத்த வேண்டுமெனில், தேவையற்ற தடைகளாக விளங்குகின்ற, குழந்தைத்திருமணம், விதவை மறுமண எதிர்ப்பு போன்ற மூடவழக்கங்களை ஒழித்தேயாக வேண்டும்; பர்தா அணியும் முறை, வரதட்சணைமுறைபோன்ற கொடுமைகளைக் களையும் பொறுப்பைப் படித்த பெண்கள்தான் ஏற்றுக்கொண்டாக வேண்டும். ஆனால், படித்த பெண்கள் ஏன் இத்தகு சீர்திருத்தங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள முடியவில்லை? ஏன் நம்பெண்கள், ஆணுக்கு இணையான உரிமையை - சுதந்திரத்தைத் துய்க்க முன் வரவில்லை? இத்தருணமுதற்கொண்டே படித்த இந்தியப் பெண்கள், இன்னுங்காலங்கடத்தாமல், சமூக மாற்றத்திற்கு, ஏதாவது செய்ய வேண்டும் என்றஇலட்சிய உணர்வோடு உறுதிமொழியை ஏற்றாக வேண்டும்; ஏற்பார்கள் என நம்பிக்கை தெரிவித்தார்.

இத்தகைய, சமூகக் கொடுமைகளுக்குக் காந்திய அடிப்படையிலான தீர்வு என்பது யாதெனில், எங்கு கணவன் கடவுளாக்கப்படுகிறானோ? அங்கு மனைவியும் ஒரு தேவதையே; மகனுக்கான சொத்துரிமை என்பது மகளுக்கும்

வழங்கப்பட்டேயாக வேண்டும். எப்பொழுது ஒரு கணவன் அதர்மவழியில் செல்கின்றானோ? அப்பொழுது அவனைப் பிரிந்துவாழும் உரிமையை மனைவிக்குத் தந்தேயாகவேண்டும். கணவனுக்கோ அல்லது மனைவிக்கோ பெற்றோரைப் பராமரிக்கும் பொறுப்பு இருக்குமெனில், இருவரில் ஒருவர் ஏற்காத நிலை ஏற்படுமானால், பிரிந்து வாழ, உரிமை தரப்படவேண்டும்.

அவருடைய சொந்த வாழ்வில், அவருடைய அன்னை, சகோதரி, மற்றும் அவரது துணைவியாரின், இன்னும் சொல்லப்போனால் அவர் நன்கறிந்த பெண்களின் வாயிலாகத்தான் பெண்களைப்பற்றிய இத்தகைய நிலையை அவரால் உணரமுடிந்தது என்கிறார். மேலும், அந்நிய ஆதிக்கத்தை எதிர்த்து, அவர் நடத்திய இயக்கங்களில், அவருடைய சிஷ்யைகளாக இருந்த பெண்ணினப் பெருந்தகைகளிடம் அவர் கொண்டிருந்த மதிப்பும் மரியாதையும், அன்பும் ஒத்த கருத்துடைமையும் ஒரு காரணமாகும். மனிபென், மீராபென், அம்ரித் கவூர் மற்றும் அவரது ஆஸ்ரமச் சிஷ்யைகளான இத்தகைய மாதர் பெருமக்கள், அவருடைய தலைமையின் கீழ் ஆற்றிய அரும்பணிகள், அவர்களுக்குக் காந்தியடிகள் எழுதிய கடிதங்களின் வாயிலாக வெளிப்படுகின்றன. சுதந்திரப் போருக்குத் தலைமையேற்றிருந்த அண்ணல் காந்தியடிகளைப் பின்பற்றிய இத்தகைய சமூக விழிப்புணர்ச்சி பெற்றிருந்த பெண்கள், அவரைத் தலைவராக மட்டுமல்லாமல், தங்களது தந்தையாக, அதாவது பாபுஜீயாகவே பாவித்தார்கள்.

பெண்களும் ஆண்களும் சமம் என்ற சமத்துவக் கொள்கையில் காந்தியடிகள், ஓர் முன்னோடியாகவே திகழ்ந்தார் என்பதில் ஐயத்திற்கிடமில்லை. அவர், அடிக்கடி இவ்வாறு கூறுவார். **''ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடு என்பது, புறப்பார்வையில் மட்டுமே; வேறுஎவ்வகையிலும் பிரித்துப்பார்க்க என்னால் இயலாது''.**

பெண் கல்விக்கு, அவர் அதிக முக்கியவத்துவமளித்தார். ஏனெனில், கல்வியின் வாயிலாக மட்டுமே, பெண்கள் தங்களுடைய சமச்சீரற்ற நிலையை, எளிதில் உணரமுடியும். தங்களுடைய சமத்துவ உரிமையைப் பெறுவதில் அவர்கள், விழிப்போடு போராடமுடியும் என அவர் நம்பினார்.

தன்னுடைய சொந்தவாழ்க்கையில், எத்தருணத்திலும் அவர் பெண்மையைத் தாழ்த்தி எண்ணியதே கிடையாது. பெண்ணினத்தின் ஆற்றல் குறித்து, அண்ணல் காந்தியடிகள் கொண்டிருந்த உயர்வான எண்ணமும், பெண்ணுக்குச் சமஉரிமை தேவை என்ற அவரது இடையறாத வலியுறுத்தலுமே, பெண்களுக்கு அரசியல் உரிமை பெற்றுத்தரும் ''கிரியா ஊக்கியாக'' விளங்கியது என்பது மிகையானதல்ல. காந்தியடிகள் உருவாக்கிய விழிப்புணர்ச்சியே, பெண்களுக்குச் சமஉரிமை பெற்றிட அடித்தளமாக அமைந்தது என்பது ஓர் வரலாற்று உண்மையாகும். பெண்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டேயாக வேண்டும் என்றும், எவ்விதக் கட்டுப்பாடுமின்றி சமஉரிமையோடு பெண்ணுக்கு வாக்களிக்கும் உரிமை தரப்படவேண்டுமென்றும் காந்தியடிகளின் இடையறா வற்புறுத்தலின் அடிப்படையில் தான் 1931-ல் கராச்சியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் அது எதிர்ப்பற்ற ஏகபோகத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. அதனடிப்படையில் தான், பெண்களுக்கு வாக்களிக்கும் சமஉரிமை சுதந்திர இந்திய அரசால், வழங்கப்பட்டது. அதோடு, நமது அரசியல் சட்டமும் பெண்களுக்கு, அரசியல், பொருளாதாரச் சமஉரிமையை உறுதிப்படுத்தியது.

எனவே, காந்தியடிகளின் தன்னலமற்ற உழைப்பும் மற்றும் வன்முறையற்ற 'சாத்வீகப் போரும்' இந்தியாவிற்குச் ''சுதந்திரத்தையும்'', அதோடு, ஆண்டாண்டுக் காலமாக இந்தியப் பெண்களுக்கு இடப்பட்டிருந்த சமூகக்கட்டுப்பாடு என்னும் அடிமைத்தளையிலிருந்து சட்டப்பூர்வ விடுதலையையும் பெற்றுத்தந்தது.

தொகுப்பு: இரா.பரதன், எம்.ஏ.,
**Source :** *Mahatma Gandhi - A Contemporary Perspective* by **Anima Bose**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002. தொலைபேசி : 568926, 568927



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23





